


We Shine Academy™



guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## மார்ச் - 2020

We Are Here..!! To Guide You..!!



# We Shine Study Circle

## ஒவ்வொரு நாளும் வெற்றி பயணத்தை தொடங்கி விட்டேன் என்று முதலடி எடுத்து வை


Main Office @

**WeShine Study Circle**

4(8B) Rangaswamy Street, (Near Adayar Bhavan)

Pudhuvai Nagar West, Chromepet, Chennai, Tamil Nadu 600044

Phone : 8939144344,8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block, 7th Main Road,
Annanagar (Next To Metro Water Pump),
Chennai, Tamil Nadu 600040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


04 - 27 தமிழக நிகழ்வுகள்

27 - 74 இந்திய நிகழ்வுகள்

74 - 90 சர்வதேச நிகழ்வுகள்

90 - 103 அறிவியல் நிகழ்வுகள்

103 - 115 விளையாட்டு நிகழ்வுகள்


115 - 119 விருதுகள்

119 - 125 நியமனங்கள்


126 - 131 முக்கிய தினங்கள்

131 - 134 வர்த்தக நிகழ்வுகள்





# தமிழக நிகழ்வுகள்

1. சென்னை மற்றும் ராமநாதபுரத்தில், எத்தனை கோடி ரூபாய் செலவில், புதிதாக, இரு அரசு மருத்துவக் கல்லூரிகள், பிரம்மாண்டமாக கட்டப்பட உள்ளன?

**விடை :** 345 கோடி ரூபாய்

**விளக்கம்**

- சென்னை மற்றும் ராமநாதபுரத்தில், **345 கோடி ரூபாய் செலவில்,** புதிதாக, இரு அரசுமருத்துவக் கல்லூரிகள், பிரமாண்டமாக்கப்பட உள்ளன. இக்கல்லூரிகளுக்கு, **மார்ச் 1 அன்று முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அடிக்கல் நாட்டினார்.**
    - மத்திய அரசு, 2019 அக்டோபர் 23ல், ஒரே நேரத்தில், ஆறு அரசு மருத்துவக் கல்லூரிகள் துவங்கவும் அதே மாதம், 27ம்தேதி, மேலும் **மூன்று அரசு மருத்துவக் கல்லூரிகள் துவங்கவும், தமிழகத்திற்கு அனுமதி அளித்தது.**
    - **செய்தித் துளிகள்**
        - இக்கல்லூரிகளை துவங்க, **மத்திய அரசு, 2,145 கோடி ரூபாய் மற்றும் மாநில அரசு, 1,430 கோடி ரூபாய் வழங்க உள்ளன.**

2. பல்வேறு துறைகளின் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்துக்காக தமிழக சட்டப்பேரவை என்று வரை நடைபெறவுள்ளது?

**விடை:** ஏப்ரல் 9

**விளக்கம்**

- பல்வேறு துறைகளின் **மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்துக்காக தமிழக சட்டப்பேரவை ஏப்ரல் 9-ம் தேதி வரை நடைபெறும்** என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
    - 2020-2021 நிதியாண்டுக்கான தமிழக பட்ஜெட் கடந்த பிப்ரவரி 14ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டது. அதைத்தொடர்ந்து பிப்ரவரி 17ஆம் தேதி மீண்டும் தொடங்கிய பட்ஜெட் கூட்டத்தொடர் 20ஆம் தேதி, தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.
    - **செய்தித் துளிகள்**
        - பட்ஜெட் மீதான விவாதம் கடந்த பிப்ரவரி 17ம் தேதி முதல் 20ம் தேதி வரை 4 நாட்கள் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தொடரில்தான், காவிரி டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிப்பதற்கான சட்டம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

3. மேட்டூர் அணையில் இருந்து மிகை நீரை ஏரிகளுக்கு வழங்கும் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டுபவர் யார்?

**விடை :** முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி

**விளக்கம்**

- **மேட்டூர் அணையில் இருந்து மிகை நீரை ஏரிகளுக்கு வழங்கும் திட்டத்துக்கு முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி** மார்ச் 04 அன்று **அடிக்கல் நாட்டினார்.**

- இதற்கான விழா மேட்டுப்பட்டியில் 04.03.2020 அன்று நடைபெற்றது. இதில், சேலம் மாவட்டத்தில் ரூ.7.27 கோடியில் 12 முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, ரூ.28.82கோடியில் 8 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, சுமார் 5,800-க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு சுமார் ரூ.630.88 கோடியில் நலத்திட்ட உதவிகளை முதல்வர் கே.பழனிசாமி வழங்கினார்.
- **செய்தித் துளிகள்**
  - இதைத் தொடர்ந்து, அவர் மார்ச் 05 அன்று காலை நாமக்கல்லில் புதிய மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டினார். பின்னர் அங்கிருந்து கரூர் புறப்பட்டு சென்ற முதல்வர், அரசு மருத்துவமனைக் கட்டடங்களைத் திறந்து வைத்தார்.

4. சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் போர் வீரர்கள் பயன்படுத்திய போர் பதக்கம் எங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது?

**விடை :** கரூர் மாவட்டம்

**விளக்கம்**

- **சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் போர் வீரர்கள் பயன்படுத்திய போர் பதக்கம், கரூர் மாவட்டம், குளித்தலையில்** கண்டெடுக்கப்பட்டுள்ளதாக சேலம் பாரா மஹால் நாணய சங்க இயக்குநர் **ஜீ.சுல்தான் தெரிவித்துள்ளார்.**
  - சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் போர் வீரர்கள் அடையாளக் குறியீடாக கழுத்தில் வளையம் பொருத்தி பயன்படுத்திய போர் பதக்கம் கொங்கு


We Shine Academy™

மண்டலத்துக்குட்பட்ட கரூர் மாவட்டம், குளித்தலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது செம்பு உலோகத்தில் பொறிக்கப்பட்டு, அதைச் சுற்றியும் வட்ட வடிவத்தில் அலுமினிய வேலைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் எடை 8.42 மில்லி கிராம் ஆகும்.

- **செய்தித் துளிகள்:**
    - தொடர்ந்து பழங்கால நாணயங்களின் வரலாற்றை ஆய்வு செய்து வெளியிட்டு வருகிறோம். நாட்டின் வரலாற்றுக்கு நாணயங்கள் மிக முக்கியக் காரணியாக விளங்குகின்றன. போர் வீரர்களின் ஓவியம், கல்வெட்டு, சிற்பங்கள் ஆகியவை தமிழக அரசு அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, சேலம் அரசு அருங்காட்சியகத்தில் போர் வீரர்களின் சிற்பம் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

5. இந்தியாவில் உயர்கல்வி பயில்வோர் எண்ணிக்கையில், தமிழகம் எத்தனையாவது இடத்தில் இருப்பதாக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி தெரிவித்தார்?

**விடை :** முதலிடம்

**விளக்கம்**

- **இந்தியாவில் உயர்கல்வி பயில்வோர் எண்ணிக்கையில், தமிழகம் முதலிடம்** வகிப்பதாக **முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி** தெரிவித்தார்.
    - **செய்தித் துளிகள் :**

- கடந்த 2011-ஆம் ஆண்டில் 100-க்கு 34 பேர் உயர் கல்வி படித்த நிலையில், தற்போது 100-க்கு 49 பேர் உயர்கல்வி படித்து வருகின்றனர். இதனால், இந்திய அளவில் உயர்கல்வி பெறுவதில் முதன்மை மாநிலமாக தமிழகம் விளங்கி வருகிறது.

6. வேர்ல்ட் லைன் நிதிப் பரிமாற்றத்தால் நடத்தப்பட்ட ஆய்வின்படி டிஜிட்டல் பரிவர்த்தனையில் சென்னை எத்தனையாவது நகரமாக உள்ளது?

**விடை:** இரண்டாவது

**விளக்கம்**

- சமீபத்திய ஆய்வின்படி, **டிஜிட்டல் முறையின்** (Paytm, Gpay முதலியன) மூலம் **மேற்கொள்ளப்படும் பணப்பரிவர்த்தனைகளில் பெங்களூர் முதலிடத்திலும் சென்னை இரண்டாவது இடத்திலும்** உள்ளன.
    - மாநில வாரியான தரவரிசையில், மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ளன.
    - **செய்தித் துளிகள் :**
        - இந்தியாவில் பொருட்கள் மற்றும் சேவைகளின் டிஜிட்டல் நிதிப் பரிமாற்றம் குறித்த இந்த ஆய்வானது வேர்ல்ட் லைன் நிதிப் பரிமாற்ற நிறுவனத்தால் நடத்தப்பட்டது.

7. திருப்பூரில் எத்தனை கோடி மதிப்பிலான புதிய மருத்துவக் கல்லூரி கட்டப்பட உள்ளது?

**விடை** :ரூ.336.96 கோடி

**விளக்கம்**

- திருப்பூரில் **ரூ.336.96 கோடி** மதிப்பிலான புதிய மருத்துவக் கல்லூரி அடிக்கல் நாட்டுவிழா மேடைக்கான கால்கோள் விழாவை கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் **உடுமலை கே.ராதாகிருஷ்ணன்** மார்ச் 8ஆம் தேதி தொடக்கி வைத்தார்.
    - இந்த விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் க.விஜயகார்த்திகேயன் தலைமை வகித்தார். இதில், கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் உடுமலை கே.ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.
    - **செய்தித் துளிகள்**
        - இந்த மருத்துவமனைக்கான அடிக்கல் நாட்டு விழா **தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி** தலைமையில் வரும் மார்ச் 15 அன்று நடைபெற்றது.

8. அம்மா திருமண மண்டபங்கள் கட்டும் திட்டம் எந்த துறையால் செயல்படுத்தப்படும்?

**விடை:** வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை

**விளக்கம்**

- **சென்னையில் 3 இடங்களில் அம்மா திருமண மண்டபங்கள் திறக்கப்படவுள்ளதாக துணை முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் அறிவித்துள்ளார்.**

- இது கொரட்டூர், வேளச்சேரி மற்றும் அயப்பாக்கம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.
- **செய்தித் துளிகள்**
    - இது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறையினால் செயல்படுத்தப்படும் திட்டமாகும்.
    - வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறையின் முதன்மை செயலாளர் - ராஜேஷ் லக்கானி

9. சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை கண்காணிக்க உதவும் செயலியின் பெயர் என்ன?

**விடை :** ‘சலோ’

**விளக்கம்**

- தற்பொழுது, **சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைச் ‘சலோ’** செயலியின் **உதவியுடன் கைபேசியில் கண்காணிக்க முடியும்.**
    - இந்தச் செயலியானது அருகிலுள்ள பேருந்து நிறுத்தங்கள் குறித்தத் தகவல்களையும் தேர்ந்தெடுக்கப்பட்ட எந்தவொரு நிறுத்தத்திற்கும் வருவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள அடுத்த ஐந்து பெருநகரப் போக்குவரத்துக் கழக (Metropolitan Transport Corporation – MTC) பேருந்துகள் குறித்த விவரங்களையும் அளிக்கும்.
    - **செய்தித் துளிகள்**
        - இது அகல்நிலை மற்றும் நிகழ்நேரம் (ஆன்லைன்) ஆகிய இரண்டு முறைகளிலும் இயங்கும் திறன்

கொண்டது.

- தற்போது இந்தச் செயலியானது சோதனை முயற்சியாக (பீட்டா) தொடங்கப்பட்டுள்ளது. இது விரைவில் அரசாங்கத்தின் **'லோக்கேட் மை பஸ்'** (LAMB – Locate My Bus App) **என்ற செயலியாக தொடங்கப்பட இருக்கின்றது.**

10. களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் எங்கு அமைந்துள்ளது?

**விடை:** அகஸ்தியர் மலை, திருநெல்வேலி மாவட்டம்

**விளக்கம்**

- **திருநெல்வேலி மாவட்டம், களக்காடு புலிகள் காப்பகத்தின் துணை இயக்குநராக மு.இளங்கோ** நியமிக்கப்பட்டுள்ளார்.
  - களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் 1988ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இது அகஸ்த்தியர் மலையில் அமைந்துள்ளது.
  - **செய்தித் துளிகள்**
    - சமீபத்தில் திண்டுக்கல் சிறுமலை காப்புகாடு, அழிந்து வரும் தேவாங்கு இனத்தின் பிறப்பிடமாக உள்ளது. அங்கே வரும் தேவாங்கு இனத்தையும் மற்ற உயிரினங்களையும் பாதுகாக்கும் வகையில் சிறு வன உயிரின பூங்கா அமைக்கப்படவுள்ளதாக முதல்வர் கே.பழனிசாமி அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

WeShine Academy™

11. சமீபத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பை வலியுறுத்தி நடந்த மினி மாரத்தான் போட்டி எங்கு நடைபெற்றது?

**விடை:** நாகை மாவட்டம்

**விளக்கம்**

- **நாகை மாவட்ட காவல்துறை** சார்பில், சர்வதேச மகளிர் தினத்தையொட்டி **பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பை வலியுறுத்தி** நடந்த **மினி மாரத்தான் போட்டியில்** ஏராளமானோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.
    - நாகை மாவட்ட காவல்துறை சார்பில், அவுரித்திடலில், போட்டியை **எஸ்.பி.,செல்வநாகரத்தினம்** கொடியசைத்து துவக்கி வைத்தார்.
    - பெண்கள் மற்றும் குழந்தைகளை பாதுகாப்போம், பாலின பாகுபாடுகள் இல்லாத உலகை உருவாக்குவோம் என்ற விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக நடந்த மினி மாரத்தான் போட்டியில், 300 பெண்கள் உட்பட 700க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.
    - **செய்தித் துளிகள்**
        - மாரத்தான் என்பது சாலையில் தொடர்ந்து நெடுந்தொலைவு ஓடும் போட்டியாகும். இப்போட்டியில் கடக்க வேண்டிய தொலைவு 42.195 கிலோமீட்டர் ஆகும். இப்போட்டி 1896ஆம் ஆண்டிலிருந்தே ஒலிம்பிக் விளையாட்டாக இருந்தபோதும் 1921ஆம் ஆண்டில் தான் விதிமுறைகள் சீர்தரப்படுத்தப்பட்டன.

12. கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்காக தமிழக அரசு சார்பில் எத்தனை கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?

**விடை:** ரூ.60 கோடி

**விளக்கம்**

- **கொரோனா தடுப்பு** நடவடிக்கைகளுக்காக **தமிழக அரசு** சார்பில் **ரூ.60கோடி நிதி ஒதுக்கீடு** செய்யப்பட்டுள்ளது.
    - தமிழக சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறைக்கு ரூ.30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதுபோல, போக்குவரத்துத் துறைக்கு ரூ.5 கோடி, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ரூ.4 கோடி, நகராட்சி நிர்வாகத்துக்கு ரூ.6 கோடி, ஊரக வளர்ச்சித் துறைக்கு ரூ.5 கோடி, பேரூராட்சி இயக்குநரகத்துக்கு ரூ.2 கோடி, இந்து சமய அறநிலையத் துறைக்கு ரூ.3 கோடி, பள்ளிக்கல்வித்துறை மற்றும் உயர் கல்வித் துறைக்கு ரூ.2 கோடி, அங்கன்வாடி மையங்களுக்கு ரூ.0.5 கோடி மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு ரூ.2.5 கோடி என மாநில பேரிடர் நிதியிலிருந்து மொத்தம் ரூ.60 கோடி உடனடியாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.
    - **செய்தித் துளிகள்**
        - தமிழ்நாடு ஆளுநர் : திரு.பன்வாரிலால் புரோகித்
        - தமிழ்நாடு முதலமைச்சர் : திரு.எடப்பாடி கே.பழனிசாமி
        - தமிழ்நாடு தலைமை நீதிபதி : திரு.அமரேஷ்வர் பிரதாப் சாஹி



We Shine Academy™

13. குழந்தை வளர்ச்சியின் நாள்களை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் எவ்வாறு வலியுறுத்துகிறது?

**விடை :** தங்கமான ஆயிரம் நாள்கள்

**விளக்கம்**

- **நாமக்கல் மாவட்டம், பரமத்தி** வட்டார ஒருங்கிணைந்த **குழந்தைகள் வளர்ச்சி திட்டப் பணிகள்** சார்பில், ஊட்டச்சத்து தொடர்பான நிகழ்வானது **இரண்டு வாரங்களாக நடைபெற்று** வருகிறது.
    - இதில், **குழந்தை வளர்ச்சியின் நாள்களை தங்கமான ஆயிரம் நாள்கள்** என வலியுறுத்தப்படுகிறது. இந்த நாள்களில் குழந்தை கருவுற்றது முதல் ஆயிரம் நாள்கள் வரை குழந்தைகளுக்கு தேவையான ஊட்டச் சத்துக்களை அவர்களின் வளர்ச்சிக்கேற்ப படிப்படியாக வழங்க வேண்டும் என்பதனை வலியுறுத்தி, இந்த நிகழ்வானது நடைபெற்றது.
    - **செய்தித் துளிகள் :**
        - பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனில் அக்கறைகொண்டு 1975-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் தேதி காந்தி ஜெயந்தி அன்று துவங்கப்பட்டு கடந்த 42 ஆண்டுகளாக தாய்சேய் நலன் மற்றும் மேம்பாட்டுக்கு அரும்பணியாற்றி வருவதுதான் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம்.

14. கோடியக்கரையில் வன உயிரின பாதுகாப்பு சரணாலயத்தில்

We Shine Academy™

கடந்த ஆண்டில் 47ஆக இருந்த குதிரைகளின் எண்ணிக்கை எத்தனை ஆக உயர்ந்துள்ளன?

**விடை :** 197 குதிரைகள்

**விளக்கம்**

- **நாகை மாவட்டம், வேதாரண்யம்** அருகேயுள்ள **கோடியக்கரையில் வன உயிரின பாதுகாப்பு சரணாலயம்** உள்ளது.

  நிகழாண்டுக்கான கணக்கெடுப்பு பணி மார்ச் 14, 15 நடைபெற்றது.

  - இதில் கஜா பாதிப்பிற்கு பிறகு 2018-2019-ஆம் ஆண்டில் 681ஆக இருந்த வெளிமான் இனத்தின் எண்ணிக்கையில் சீரான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் 54 என்ற எண்ணிக்கையில் இருந்த புள்ளிமான்களுடன் தஞ்சை சிவகங்கை பூங்காவில் இருந்து புதிய வரவாக வந்த 43 மான்களுடன் மொத்தம் 122-ஆக அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டில் **47ஆக இருந்த குதிரைகள் 197ஆக உயர்ந்துள்ளன.**
  - **செய்தித் துளிகள் :**
    - 2014-15-ல் 1,527 ஆக இருந்த பழந்தின்னி வௌவால்கள் கடந்த சில ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புகளில் பதிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

15. வெள்ளாட்டு இன ஆராய்ச்சி மையம் எங்கு அமைக்கப்படவுள்ளது?

**விடை:** தென்காசி

**விளக்கம்**

- **தென்காசி மாவட்டத்தில் ரூ.2.70 கோடி** செலவில் **வெள்ளாட்டு இன ஆராய்ச்சி மையம்** ஏற்படுத்தப்படும் என்று கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் **உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அறிவித்தார்**
    - கன்னியாகுமரி, ராமநாதபுரம், கடலூர் மீனவக் கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் அமைக்கப்படும் என்று மீன்வளத்துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.
    - கன்னியாகுமரியில் மிடாலம் கிராமத்திலும், ராமநாதபுரம் கீழ்முந்தலிலும், மற்றும் கடலூர் தாழங்குடா கிராமத்திலும் அமைக்கப்படும்.
    - மீன்வளத்துறை அமைச்சர் - டி.ஜெயக்குமார்

16. தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டத்திற்காக எந்த வங்கியுடன் தமிழக அரசு ஒப்பந்தமிட்டுள்ளது?

**விடை :** உலக வங்கி

**விளக்கம்**

- **மாநில நெடுஞ்சாலைகள் (ம) மாவட்ட முக்கிய சாலைகள் ரூ.1500 கோடி செலவில் மேம்படுத்தப்படும்** என்று முதல்வர் **எடப்பாடி கே.பழனிசாமி** அறிவித்துள்ளார்.
    - தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம் மூலமாக உலக வங்கியின் கூடுதல் நிதியுதவியுடன் ஓமலூர் - மேச்சேரி சாலை, மல்லியக்கரை – ஆத்தூர் சாலை, மாநில நெடுஞ்சாலை – 15 உள்ள முக்கிய சாலைகள் உட்பட ஏழு சாலைகள் ரூ.1500 கோடி மதிப்பில் மேம்படுத்தப்பட உள்ளன.



We Shine Academy™

- **செய்தித் துளிகள் :**
  - இந்தியாவின் கிழக்கில் வங்காள விரிகுடாவையும், மேற்கில் அரபிக் கடலையும் கடல்வழியாக இணைப்பதற்கு ஏதுவாக மன்னார் வளைகுடா (ம) பாக்ஜலசந்தி பகுதிகளை இணைக்கும் பாம்பன் கால்வாயை தூர்வாருவதற்கும் பொருளாதார (ம) சுற்றுச்சூழல் தொழில்நுட்ப சாத்தியகூறுகளை ஆராய்வதற்காக ரூ.1 கோடி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

17. 2010ஆம் ஆண்டில் PSTM மாநில சட்டத்தின் படி PSTM விண்ணப்பதாரர்களுக்கு எத்தனை சதவீதம் இட ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டுள்ளது?

**விடை** : 20%

**விளக்கம்**

- தமிழ் வழியில் படித்த மாணவர்களுக்கான சட்டதிருத்த மசோதாவின் படி, தொடக்கப்பள்ளி முதல் தமிழ் வழியில் படித்த விண்ணப்பத்தாரர்களுக்கு மட்டுமே **'தமிழ் வழியில் படித்த மாணவர்கள்'** (Persons Studied in Tamil Medium – PSTM) என்ற ஒதுக்கீட்டின் கீழ் நேரடி ஆட்சேர்ப்புக்கு முன்னுரிமை வழங்கப்பட இருக்கின்றது.
  - **2010ஆம்** ஆண்டில், **தமிழக அரசானது PSTM விண்ணப்பதாரர்களுக்கு 20% இட ஒதுக்கீட்டை அறிவித்தது.**

- **செய்தித் துளிகள்:**
    - இந்த மசோதாவானது PSTM மாநிலச் சட்டம், 2010ன் கீழ், பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் தமிழ்நாட்டில் நியமனம் என்பதைத் திருத்தம் செய்ய முயலுகின்றது.

18. இந்திய ரயில்வேயில் ஓர் ஆண்டில் முதன்முறையாக எத்தனை பெண்கள் என்ஜின் உதவி லோகோ பைலட் ஆக தேர்வாகியுள்ளார்கள்?

**விடை:** 1,280 பெண்கள்

**விளக்கம்**

- இந்திய ரயில்வேயின் கடினமான ரயில் **என்ஜின் லோகோ பைலட் பணியிடங்களில் பெண்கள்** தற்போது அதிக அளவில் சேர்ந்து, **தடம் பதிக்க உள்ளார்கள்.** இந்திய ரயில்வேயில் ஓர் ஆண்டில் முதன்முறையாக **1,280 பெண்கள்** என்ஜின் உதவி லோகோ பைலட் ஆக **தேர்வாகியுள்ளார்கள்.**
    - இவர்கள் வருகையின் மூலமாக, வரும் ஆண்டுகளில் இந்த கடின பணியில் சேரும் பெண்கள் எண்ணிக்கை மேலும் உயரும் என்று ரயில்வே அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.
    - **செய்தித் துளிகள்**
        - கடந்த 3 ஆண்டுகளில் தொழில்நுட்பம் சார்ந்த ரயில்வே பணிகளுக்கு விண்ணப்பித்தவர்கள் 2 கோடியே 79 லட்சத்து 60 ஆயிரத்து 224 பேர்.

- இதில், பெண் விண்ணப்பதாரர்கள் மட்டும் 46 லட்சத்து 76 ஆயிரத்து 928 பேர். இதில் பணிமனைகள், தொழிற்சாலைகள், ரயில் நிலையங்களில் பணியாற்றவே அதிகம் விண்ணப்பித்தார்கள்.

19. தமிழகத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்கு எத்தனை கோடி நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது?

**விடை:** ரூ.500 கோடி

**விளக்கம்**

- **தமிழகத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கையாக கூடுதலாக ரூபாய் ரூ.500 கோடி நிதி ஒதுக்கீடு** செய்துள்ளதாக **முதல்வர் எடப்பாடி பழனிசாமி** சட்டப் பேரவையில் அறிவித்துள்ளார்.
    - ஏற்கனவே ரூ.60 கோடி நிதி ஒதுக்கப்பட்ட நிலையில் தற்போது கூடுதலாக ரூ.500 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக முதல்வர் எடப்பாடி பழனிசாமி சட்டப் பேரவையில் அறிவித்துள்ளார்.
    - **செய்தித் துளிகள்**
        - தமிழ்நாடு சட்டப் பேரவை தலைமை அவைத்தலைவர் ப.தனபால்
        - தமிழ்நாடு சட்டப் பேரவை துணை அவைத்தலைவர் பொள்ளாச்சி ஜெயராமன்
        - தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி
        - தமிழ்நாடு துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம்

20. கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் ஏற்பட்ட பாதிப்புகளுக்காக எத்தனை கோடி நிவாரண நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக முதல்வர் அறிவித்தார்?

**விடை:** ரூ.3,250 கோடி

**விளக்கம்**

- **தமிழகத்தில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் தலா ரூபாய் 1000** வழங்கப்படும் என்று **முதல்வர் எடப்பாடி பழனிசாமி** அறிவித்துள்ளார்.
  - மார்ச் 24 சட்டப்பேரவையில் முதல்வர் எடப்பாடி பழனிசாமி, **கொரோனா முன்னெச்சரிக்கை** நடவடிக்கையால் ஏற்பட்ட **பாதிப்புகளுக்காக ரூ.3,250 கோடி நிவாரண நிதி** அறிவித்தார்.
  - ரேசன் கடைகளில் கூட்டம் கூடுவதை தவிர்க்க டோக்கன் முறையில் பொருட்கள் வழங்கப்படும். மார்ச் மாத ரேசன் பொருட்களை பெற தவறியவர்கள் அவற்றை ஏப்ரல் மாத பொருட்களுடன் பெற்றுக்கொள்ளலாம்.
  - **செய்தித் துளிகள்:**
    - நடைபாதை வியாபாரிகளுக்கு பொது நிவாரண நிதி ரூ.1000 மற்றும் கூடுதலாக ரூ.1000 உதவித்தொகை வழங்கப்படும். கட்டட தொழிலாளர்களுக்கு ஓட்டுநர் தொழில் சார்ந்தவர்களுக்கு நிவாரண நிதியாக தலா ரூ.1000 வழங்கப்படும். 100 நாள் வேலைத்திட்ட தொழிலாளர்களுக்கு 2 நாட்கள் ஊதியம் கூடுதலாக வழங்கப்படும். அம்மா உணவகங்களில் சுகாதாரமான

உணவுகள் சமைத்து வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

21. நாகை மாவட்டத்தில் இருந்து பிரித்து 38வது மாவட்டமாக உருவாகியுள்ள மாவட்டம் எது?

**விடை:** மயிலாடுதுறை

**விளக்கம்**

- **நாகை** மாவட்டத்தில் இருந்து **பிரித்து மயிலாடுதுறை புதிய மாவட்டமாக உருவாக்கப்படும்** என்று சட்டப்பேரவையில் **முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி** அறிவித்தார்.
    - சட்டப்பேரவையில் மார்ச் 24 அன்று முதல்வர் பழனிசாமி வெளியிட்ட இந்த அறிவிப்பின் மூலம் 38வது மாவட்டமாக உருவாகிறது மயிலாடுதுறை.
    - **செய்தித் துளிகள்:**
        - நவம்பர் 2019-இல் தமிழ்நாட்டின் காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பிரித்து செங்கல்பட்டு மாவட்டம், விழுப்புரம் மாவட்டத்தைப் பிரித்து கள்ளக்குறிச்சி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தைப் பிரித்து தென்காசி மாவட்டம், வேலூர் மாவட்டத்தைப் பிரித்து இராணிப்பேட்டை மாவட்டம் மற்றும் திருப்பத்தூர் மாவட்டம் என 5 புதிய மாவட்டங்கள் நிறுவப்பட்டன

22. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்கான மாணவ, மாணவியர் படை உருவாக்கப்படும் என்று பேரவையில் அறிவித்தவர் யார்?

**விடை:** முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி

**விளக்கம்**

- தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்கான மாணவ, மாணவியர் படை உருவாக்கப்படும் என்று பேரவையில் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி அறிவித்தார்.
  - **தீயணைப்புத் துறை பணியாளர்களுக்கு 15 மற்றும் 25 ஆண்டுகள் பணி முடிந்தவுடன் அடுத்த பதவிக்கு தரம் உயர்த்தப்படும்**
  - திருச்சி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களுக்கு 54 மீட்டர் கொண்ட இரண்டு வான் நோக்கி உயரும் ஊர்திகள் தலா ரூ.15 கோடி செலவில் கொள்முதல் செய்யப்படும். தீயணைப்பு வீரர்களின் வீரவணக்க நினைவுச் சின்னம் தலைமையகத்தில் ரூ.25 லட்சம் செலவில் அமைக்கப்படும். சின்னம் மற்றும் தொப்பி அரசுசெலவில் வழங்கப்படும் என்றார்.
  - **செய்தித் துளிகள்:**
    - பணியாற்றும் போது உயிரிழப்பு ஏற்பட்டால் வழங்கப்படும் தொகை **ரூ.10 லட்சத்தில் இருந்து ரூ.15 லட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.**
    - நிரந்தர ஊனமடைவோருக்கு ரூ.4 லட்சம் என்பது ரூ.8 லட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.
    - சாதாரண காயங்கள் அடைவோருக்கு ரூ.10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்.

23. கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக தொகுதி வளர்ச்சி


We Shine Academy™

நிதியிலிருந்து எத்தனை கோடி ரூபாய் வழங்க அன்புமணி ராமதாஸ் ஒப்புதல் அளித்துள்ளார்?

**விடை:** ரூ.3 கோடி

**விளக்கம்**

- **கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.3 கோடி வழங்க அன்புமணி ராமதாஸ் ஒப்புதல் அளித்துள்ளார்.**
    - **செய்தித் துளிகள்:**
        - முதல் கட்டமாக ரூ.3 கோடி ஒதுக்கி உள்ளதாகவும், தேவைப்பட்டால் கூடுதல் நிதி ஒதுக்கப்படும். மருத்துவர்களுக்கான பாதுகாப்பு கவசங்கள், கொரோனா சோதனை கருவிவாங்க நிதியை பயன்படுத்தலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

24. கெரோனா நோய்த் தடுப்புக்காக அரசின் சார்பில் எத்தனை கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?

**விடை:** ரூ.3780

**விளக்கம்**

- **கெரோனா நோய்த் தடுப்புக்காக போர்க்கால அடிப்படையில் தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக அரசின் சார்பில் ரூ.3780 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**
    - 10,158 படுக்கைகள், மருத்துவமனைகள் தயார் நிலையில் உள்ளன. மேலும், படுக்கை எண்ணிக்கையை அதிகரிக்க உத்தரவிட்டுள்ளார்.

- **செய்தித் துளிகள்:**
    - **மகாத்மா காந்தி, தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், இந்த மாதத்தில் பணி புரிந்த தொழிலாளர்களுக்கு, 2 நாள்களுக்கான ஊதியம், சிறப்பு நிதியாக கூடுதலாக வழங்கப்படும்.** அரசு மட்டும் நடவடிக்கை எடுத்தால் போதாது, உங்கள் ஒவ்வொருவரின் ஒத்துழைப்பும் மிக, மிக அவசியம்.

25. கொரோனா நோய்த்தொற்று குறித்த அடிப்படைத் தகவல்கள் எந்த பாடநூலில் இடம்பெற்றுள்ளன?

**விடை:** சிபிஎஸ்இ பிளஸ் 2

**விளக்கம்**

- உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா நோய்த்தொற்று குறித்த அடிப்படைத் தகவல்கள் சிபிஎஸ்இ பிளஸ் 2 பாடநூலில் இடம்பெற்றுள்ளன.
    - **கோவிட்-19 குறித்து கடந்த ஜனவரி மாதத்திலிருந்து நாம் விழிப்புணர்வு பெற்று வரும் நிலையில் அந்த நோய்த்தொற்று குடும்பத்தினால் (கொரோனா) ஏற்படும் நோய்கள் குறித்த தகவல்கள் பிளஸ் 2 உயிரியல் பாடநூலில் இடம்பெற்றுள்ளது.**
    - அதில் கொரோனா நோய்த்தொற்றைத் தடுக்க குறிப்பிட்ட சிகிச்சை முறைகள் என எதுவும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.
    - **செய்தி துளிகள்:**

- கடந்த ஜூன் மாதம் புதிய சிபிஎஸ்இ பாடத்திட்டத்தில் வெளியான பிளஸ் 2 உயிரியல் பாடநூலில் 166-ஆவது பக்கத்தில் நோய்கள் குறித்த தகவல்கள் இடம்பெற்றுள்ளது.

26. கர்ப்பிணி தாய்மார்கள் தேவையான உதவிக்கு எந்த எண்களை தொடர்பு கொள்ளலாம்?

**விடை**: 102, 104

**விளக்கம்**

- கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க மாவட்டந்தோறும் பல்வேறு அரசு, தனியார் துறையினரைக் கொண்ட "நெருக்கடி கால மேலாண்மைக் குழு" அமைக்கப்படும் என்று முதல்வர் பழனிசாமி அறிவித்துள்ளார்.
  - வரும் 2 மாதங்களில் பிரசவிக்க உள்ள சுமார் 1.5 லட்சம் தாய்மார்கள் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தேவையான உதவிக்கு **102, 104 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம் என முதல்வர் பழனிசாமி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

27. சமீபத்தில் புதுச்சேரி சட்டப்பேரவையில் அடுத்த 3 மாத செலவினங்களுக்காக எத்தனை கோடிக்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது?

**விடை:** ரூ.2,042 கோடி

**விளக்கம்**

- **புதுச்சேரி** சட்டப்பேரவையில் இடைக்கால பட்ஜெட் மார்ச் 30 அன்று தாக்கல் ஆனது. அரசின் செலவினங்களுக்காக அடுத்த 4 மாதத்திற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையை நிதித்துறை பொறுப்பு வகிக்கும் முதல்வர் நாராயணசாமி தாக்கல் செய்தார்.
    - அதில் அரசின் அடுத்த **3 மாத செலவினங்களுக்காக ரூ.2,042 கோடிக்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது.**
    - **செய்திகள் துளிகள்:**
        - ஆட்சிக்காலம் 5 வருடங்கள்
        - தலைமை அவைத்தலைவர்: V.P. சிவக்கொழுந்து, 2019
        - துணை அவைத்தலைவர்: M.N.R. பாலன், இதேகா 2016

28. கொரோனா தடுப்புப் பணிகளுக்காக பிரதமர் மற்றும் முதல்வரின் பொது நிவாரண நிதிக்கு தலா ரூ.1 கோடியை தந்தவர் யார்?

**விடை:** ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்

**விளக்கம்**

- **கொரோனா தடுப்புப் பணிகளுக்காக பிரதமர் மற்றும் முதல்வரின் பொது நிவாரண நிதிக்கு தலா ரூ.1 கோடியை ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் வழங்கியுள்ளர்.**
    - **செய்தி துளிகள்:**
        - ஆளுநரின் விருப்ப உரிமை நிதிகளில் இருந்து பிரதமர் மற்றும் முதல்வரின் பொதுநிவாரண

நிதிகளுக்கு தலா ரூ.1 கோடி வழங்கப்பட்டு உள்ளது.

- இத்துடன் பிரதமரின் நிவாரண நிதிக்கு தனது ஒரு மாத ஊதியத்தையும் ஆளுநர் புரோஹித் வழங்கியுள்ளார்.

## இந்திய நிகழ்வுகள்

1. எந்த நாட்டுடன் ரூ.288.70 கோடி மதிப்பிலான ஆயுதங்களைக் கண்டறியும் ரேடார்களை வழங்கும் ஒப்பந்தத்தை இந்தியா பெற்றுள்ளது?

**விடை:** ஆர்மீனியா

**விளக்கம்**

- **ஆர்மீனியாவுக்கு ரூ.288.70 கோடி** (சுமார் ரூ.40 மில்லியன் டாலர்) **மதிப்பிலான ஆயுதங்களைக் கண்டறியும் ரேடார்களை வழங்கும் ஒப்பந்தத்தை இந்தியா பெற்றுள்ளது.** ரஷியா, போலந்து ஆகிய நாடுகளும் இந்த ஒப்பந்தத்துக்கான போட்டியில் இருந்தது குறிப்பிடத்தக்கது.
    - இந்திய பாதுகாப்பு ஆய்வு மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் (டிஆர்டிஓ) மூலம் உருவாக்கப்பட்டு **'பெல்' நிறுவனம்** மூலம் தயாரிக்கப்படும் **'ஸ்வாதி'** என்ற பெயரிலான, ஆயுதங்களைக் கண்டறியும் ரேடார்களை ஆர்மீனியா நாட்டுக்கு விற்பனை செய்யும் ஒப்பந்தத்தை இந்தியா பெற்றுள்ளது.

We Shine Academy TM

- செய்தித் துளிகள்
    - ஜம்மு-காஷ்மீர் எல்லையில் இந்திய ராணுவம் இந்த ரேடார்களை ஏற்கெனவே பயன்படுத்தி வருகிறது.
    - முழுவதும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு பாதுகாப்புத்துறை தளவாடத்துக்கு சர்வதேச அளவில் சந்தை திறந்துள்ளது புதிய வாய்ப்பாக அமைந்துள்ளது.

2. கடந்த பிப்ரவரி மாத ஜி.எஸ்.டி வசூல் எவ்வளவு?

**விடை:** ரூ.1.05 லட்சம் கோடி

**விளக்கம்**

- **பிப்ரவரி மாதம் சரக்கு-சேவை வரி (ஜிஎஸ்டி) முறை மூலம் ரூ.1.05 லட்சம் கோடி வசூலாகியிருப்பதாக மத்திய அரசு** தெரிவித்தது. கடந்த மாதம் ஜிஎஸ்டியாக மொத்தம் ரூ.1,05,367 கோடி வசூலிக்கப்பட்டது.
    - இதில், மத்திய அரசின் ஜிஎஸ்டி (சிஜிஎஸ்டி) ரூ.20,569 கோடி, மாநில அரசின் ஜிஎஸ்டி (எஸ்ஜிஎஸ்டி) ரூ.27,348 கோடி, ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி (ஐஜிஎஸ்டி) ரூ.48,503 கோடி, செஸ் வரி ரூ.8,947 கோடி ஆகியவை அடங்கும்.
    - செய்தித் துளிகள்
        - கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் வசூலான ஜிஎஸ்டி தொகையைக் காட்டிலும் இது 8 சதவீதம் அதிகமாகும்.
        - அதே நேரம் கடந்த மாத ஜிஎஸ்டி வசூலை (ரூ.1.10 லட்சம் கோடி) காட்டிலும் இது குறைவாகும்.

3. கிழக்கு இந்தியாவை ஒருங்கிணைந்த எ.்.கு உற்பத்தி மையமாக மேம்படுத்துவதை நோக்கமாக கொண்ட திட்டம் எது?

**விடை** : பூர்வோதயா திட்டம்

**விளக்கம்**

- **பூர்வோதயா திட்டம் :** இந்திய அரசு **ஒடிசாவை இந்தியாவின் எ.்.கு உற்பத்தி மையமாக மாற்றும்** என்று இந்தியத் தொழில்துறை கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு பயிலரங்கத்தில் **மத்திய எ.்.குத் துறை அமைச்சர் அறிவித்தார்.**
    - ஜப்பானின் உதவியுடன் இந்திய அரசினால் எ.்.கு உற்பத்தி மையமாக ஒடிசா மாற்றப்படும் என்று இவர் அறிவித்துள்ளார்.
    - பூர்வோதயா திட்டமானது 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தொடங்கப்பட்டது.
    - **செய்தித் துளிகள்** :
        - இது கிழக்கு இந்தியாவை ஒருங்கிணைந்த எ.்.கு உற்பத்தி மையமாக மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
        - இது 2030ஆம் ஆண்டிற்குள் 300 மெட்ரிக் டன் எ.்.கு உற்பத்தி செய்ய வேண்டும் என்ற தேசிய எ.்.கு கொள்கையின் இலக்கை அடைய உதவ இருக்கின்றது.

4. மாநிலம் (ம) ஒன்றிய பிரதேசம் ஆகியவற்றை தொகுதிகளாக பிரிப்பதற்காக தொகுதி வறையரைச் சட்டத்தின் கீழ் ஆணையம்

அமைக்கப்பட்டுள்ளது. அந்த சட்டம் எந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது?

**விடை** : 2002

**விளக்கம்**

- 2008 ஆம் ஆண்டு பிப்ரவரி 8 அன்று வழங்கப்பட்ட உத்தரவை ரத்து செய்வதன் மூலம் வடகிழக்கு மாநிலங்களான **அருணாச்சலப் பிரதேசம், அசாம், மணிப்பூர் மற்றும் நாகலாந்து ஆகிய மாநிலங்களில் தொகுதி வரையறையை மீண்டும் தொடங்குவதற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஒப்புதல்** அளித்து உள்ளார்.
    - 2001ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்புப் புள்ளி விவரங்களின் அடிப்படையில் மக்களவை மற்றும் மாநில சட்டசபைத் தேர்தல்கள் ஆகியவற்றிற்காக ஒவ்வொரு மாநிலம் மற்றும் ஒன்றியப் பிரதேசம் ஆகியவற்றைத் தொகுதிகளாகப் பிரிப்பதற்காக தொகுதி வரையறைச் சட்டம், 2020ன் கீழ் தொகுதி வரையறை ஆணையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.
    - **செய்தித் துளிகள்** :
        - இந்தியாவில் இதுவரை நான்கு முறை தொகுதி வரையறை ஆணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவையாவன :
        - 1952ல் தொகுதி வரையறை ஆணையச் சட்டம் 1952ன் கீழ்,
        - 1963ல் தொகுதி வரையறை ஆணையச் சட்டம் 1962ன் கீழ்,

- 1973ல் தொகுதி வரையறைச் சட்டம், 1972ன் கீழ் மற்றும்
- 2002ல் தொகுதி வரையறைச் சட்டம், 2002ன் கீழ் தொகுதி வரையறை ஆணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

5. கிருஷி விக்யான் கேந்திர மாநாடு – 2020 எங்கு நடைபெற்றது?

**விடை :** புது டெல்லி

**விளக்கம்**

- **மத்திய வேளாண் மற்றும் விவசாயி நலத்துறை அமைச்சரான நரேந்திர சிங் தோமர்** புது தில்லியில் 11வது தேசிய கிருஷி விக்யான் கேந்திர (Krishi Vigyan Kendra – KVK) மாநாடு – 2020ஐத் தொடங்கி வைத்தார்.
    - **செய்தித் துளிகள் :**
        - முதலாவது KVK ஆனது 1974ஆம் ஆண்டில் கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் சோதனை அடிப்படையில் புதுச்சேரியில் நிறுவப்பட்டது.
        - தற்போது நாடு முழுவதும் 700க்கும் மேற்பட்ட KVK க்கள் உள்ளன.

6. நிமத் மிளகாய்த் திருவிழா – 2020 (மிர்ச் மஹோா உட்சவ்) எங்கு நடைபெற்றது?

We Shine Academy™

**விடை :** மத்திய பிரதேசம்

**விளக்கம்**

- மத்திய பிரதேச அரசால் ஏற்பாடு செய்யப்படும் ஒரு தனித்துவமான திருவிழாவான **"நிமத் மிளகாய்த் திருவிழா – 2020"** ஆனது மத்தியப் பிரதேசத்தின் **கார்கோன் மாவட்டத்தில்** தொடங்குகின்றது.
    - இந்தத் திருவிழாவின் நோக்கம் அம்மாநிலத்தில் மிளகாய் உற்பத்தி மற்றும் மிளகாய் சார்ந்த தொழில்களை ஊக்குவிப்பதும், குறிப்பாக இந்தியா & வெளிநாடுகளில் நிமாரி வகை மிளகாயை ஊக்குவிப்பதும் ஆகும்.
    - இந்தத் திருவிழாவானது உள்ளூரில் 'மிர்ச் மஹோா உட்சவ்' என்று அழைக்கப்படுகின்றது.

7. லோக் ஆயுக்தாவின் உறுப்பினர்களை நியமனம் செய்பவர் யார்?

**விடை :** மாநில ஆளுநர்

**விளக்கம்**

- **பஞ்சாப் சட்டப் பேரவையின்** நடப்பு கூட்டத் தொடரில் **லோக் ஆயுக்தா வரைவு மசோதா தாக்கல் செய்ய,** அந்த **மாநில அமைச்சரவை ஒப்புதல்** வழங்கியுள்ளது.
    - இது தற்போது நடைமுறையில் உள்ள பஞ்சாப் லோக்பால் சட்டம் 1996க்கு மாற்றாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
    - 4 உறுப்பினர்களைக் கொண்ட ஆயுக்தாவுக்கு, உச்சநீதிமன்றம் (அ) உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக இருப்பவரோ (அ) இருந்தவரோ தலைவராக இருப்பார்.



We Shine Academy™

- ○ **செய்தித் துளிகள் :**
    - 4 உறுப்பினர்களில் குறைந்தபட்சம் ஒருவராவது தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவராகவோ, பிற்படுத்தப்பட்டவராக, சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்தவராக (அ) பெண்ணாக இருக்க வேண்டும்.
    - இவர்களை மாநில ஆளுநர் நியமனம் செய்வார். மேலும் தேர்வு குழுவின் தலைவராக முதல்வர் பொறுப்பு வகிப்பார்.

8. மத்திய அரசு பெண்களுக்கு எந்த திட்டத்தின் கீழ் கடன் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது?

**விடை :** 'எழுச்சி இந்தியா'

**விளக்கம்**

- மத்திய அரசின் **'எழுச்சி இந்தியா'** (ஸ்டேண்ட் அப் இந்தியா) **திட்டத்தின் கீழ் 4 ஆண்டுகளில் பெண்களுக்கு ரூ.16,712 கோடி கடன் வழங்க ஒப்புதல்** அளிக்கப்பட்டுள்ளது என்று மத்திய நிதியமைச்சகம் 03.03.2020 அன்று தெரிவித்தது.
    - ○ பெண்களின் தொழில்முனைவோர் கனவை நனவாக்கும் வகையில் 'எழுச்சி இந்தியா' திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்பட்டவர்களில் 81 சதவீதம் பேர் பெண்கள். சுமார் 73,155 வங்கிக் கடன் கணக்குகள் பெண்கள் பெயரில் தொடங்கப்பட்டுள்ளன.
    - ○ **செய்தித் துளிகள்**

We Shine Academy™

- தாழ்த்தப்பட்டோர் (எஸ்.சி), பழங்குடியினர் (எஸ்.டி) மற்றும் பெண் தொழில்முனைவோர்களுக்கு கடனுதவி வழங்குவதை நோக்கமாகக் கொண்டு 'எழுச்சி இந்தியா' திட்டம் கடந்த 2016-ஆம் ஆண்டு ஏப்ரல் 5-ஆம் தேதி தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் ரூ.10லட்சம் முதல் ரூ.1கோடி வரை கடன் வழங்கப்படுகிறது.

9. மத்திய நிதியமைச்சர் யார்?

**விடை :** நிர்மலா சீதாராமன்

**விளக்கம்**

- **10 பொதுத்துறை வங்கிகளை இணைத்து, 4 பெரிய வங்கிகளாக உருவாக்கும் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை** மார்ச் 04-ஆம் தேதி **ஒப்புதல்** அளித்தது. இந்த வங்கிகள் இணைப்பு ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வர இருப்பதாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.
  - **செய்தித் துளிகள்:**
    - கடந்த ஆண்டு தேனா வங்கியும், விஜயா வங்கியும், பரோடா வங்கியுடன் இணைக்கப்பட்டன. அதற்கு முன்னதாக எஸ்பிஐ-யின் 5 துணை வங்கிகளும், பாரதிய மகிளா வங்கியும் எஸ்பிஐ-யுடன் இணைக்கப்பட்டன என்பது நினைவுகூரத்தக்கது.

10. தூய்மை இந்தியா திட்டம் எப்போது தொடங்கப்பட்டது?


We Shine Academy™

**விடை :** 2014-ஆம் ஆண்டு

**விளக்கம்**

- **மத்திய அரசு சார்பில் தூய்மை இந்தியா (கிராம) திட்டத்தின் 2-ஆம் கட்டப் பணிகள்** 05.03.2020 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இந்தப் பணிகள் **ரூ.1,40,881 கோடி மதிப்பில்** மேற்கொள்ளப்படவுள்ளது.
  - **தில்லியில் மத்திய ஜல்சக்தி துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத்** தூய்மை இந்தியா திட்டத்தின் 2-ஆம் கட்டப் பணிகளை தொடங்கிவைத்தார்.
  - **செய்தித் துளிகள்:**
    - கடந்த 2014-ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து ஊரகப் பகுதிகளில் 10 கோடிக்கும் மேற்பட்ட கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. 35 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 699 மாவட்டங்களில் 5.9 லட்சத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் தங்கள் பகுதியில் திறந்தவெளி கழிப்பிடங்கள் இல்லை என அறிவித்துள்ளன.

11. இந்தியாவில் இதுவரை எத்தனை வகையிலான மெய்நிகர் நாணயங்கள் புழக்கத்தில் உள்ளன?

**விடை :** 2095

**விளக்கம்**

- **பிட் காயின்' உள்ளிட்ட மெய்நிகர் நாணயங்களுக்கு இந்தியாவில் விதிக்கப்பட்டிருந்த தடையை உச்சநீதிமன்றம்**

மார்ச் 4-ஆம் தேதி **நீக்கியது.** இதன் மூலம் மெய்நிகர் நாணயங்களுக்கு இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) கடந்த 2018-ஆம் ஆண்டு விதித்த தடை முடிவுக்கு வந்துள்ளது.

- **செய்தித் துளிகள்** :
  - மெய்நிகர் நாணயப் பரிவர்த்தனைகள் அனைத்தும், பொதுவான இணையதள தகவல் சேமிப்பகத்தில் மேற்கொள்ளப்படும் மின்னணு தகவல் பதிவுகளாகவே நிகழ்கின்றன. மெய்நிகர் பணப் பரிவர்த்தனை செய்யும்போது, அது பொதுவான ஒரு இணையதள கணக்குப் பதிவேட்டில் பதிவு செய்யப்படுகிறது. இதுவரை **2095 வகையிலான மெய்நிகர் நாணயங்கள் புழக்கத்தில் உள்ளன.**

12. இயற்கைக் குறியீட்டுத் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள நிறுவனம் எது?

**விடை** : அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிக் குழு

**விளக்கம்**

- இயற்கைக் குறியீடு (NATURAL INDEX) அமைப்பானது **2020ஆம் ஆண்டின் இயற்கைக் குறியீட்டுத் தரவரிசையை** வெளியிட்டுள்ளது.
  - **அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிக் குழு** (CSIR - Council of Scientific and Industrial Research) குறியீட்டில் **முதலிடத்தில்** உள்ளது.
  - பெங்களூருவின் இந்திய அறிவியல் நிறுவனம் (IISC -

Indian Institute of Science) இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

- மூன்றாவது இடத்தை மும்பையில் உள்ள டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் (TIFR – Mumbai) பிடித்துள்ளது.
- **செய்தித் துளிகள் :**
    - 2018 டிசம்பர் முதல் 2019 நவம்பர் வரை நிறுவனங்கள் மேற்கொண்ட ஆராய்ச்சியின் அடிப்படையில் இத்தரவரிசை அமைந்துள்ளது.
    - எண்களின் மொத்த மேற்கோளும் மற்றும் ஒரு கட்டுரைக்குக் கிட்டும் பகிர்வு சதவீதத்தைப் பொருத்தே இவ்வாராய்ச்சியின் முடிவு அமைந்துள்ளது.

13. 2வது இந்திய மேகக் கணினி பிராந்தியத்தை 2021ஆம் ஆண்டில் தில்லியில் திறக்கவுள்ள நிறுவனம் எது?

**விடை:** கூகுள் நிறுவனம்

**விளக்கம்**

- **கூகுள் நிறுவனமானது** தனது **2வது இந்திய மேகக் கணினிப் பிராந்தியத்தை 2021ஆம் ஆண்டில் தில்லியில் திறக்க இருக்கின்றது.**
    - தில்லி கிளவுட் பிராந்தியமானது சேவைத்துறை பிரச்சனைகளிலிருந்துப் பாதுகாப்பு அளிப்பதற்காக மூன்று மண்டலங்களைக் கொண்டிருக்கும்

- **செய்தி துளிகள் :**
    - முதலாவது இந்திய மேகக் கணினிப் பகுதியானது மும்பையில் 2017ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
    - இது சுகாதார மற்றும் நிதி சேவைகளுக்கும் நாடு முழுவதும் உள்ள பொதுத்துறை நிறுவனங்களுக்கும் சேவை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
    - ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில், கூகுள் நிறுவனமானது 22 கிளவுட் தரவு மையங்களைக் கொண்டுள்ளது.

14. ஒருங்கிணைந்த உள்நாட்டு எரிசக்திஅமைப்புகள் எந்த நாடுகளுக்கிடையே ஏற்பட்டுள்ளது?

**விடை :** இந்தியா–ஐரோப்பா

**விளக்கம்**

- ஒருங்கிணைந்த உள்நாட்டு எரிசக்தி அமைப்புகள் குறித்த **இந்தியா–ஐரோப்பிய ஒன்றியம்** ஆகியவற்றின் முதன்மைத் திட்டமானது 2020 இந்தியத் திறன்மிகு பயன்பாட்டுவாரத்தில் அறிவிக்கப்பட்டது.
    - இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இடையிலான இந்த கூட்டுப் பங்களிப்பானது தூய்மையான எரிசக்தி மற்றும் காலநிலைக்கு உதவ இருக்கின்றது.
    - **செய்தித் துளிகள்**
        - **இந்தியா–சுவீடன் ஒத்துழைப்பு :** இந்தியத் திறன்மிகு பயன்பாட்டு வாரத்தில் **இந்தியா–சுவீடன் கூட்டுதொழில் துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு**

**திட்டத்தை ஸ்வீடன் மற்றும் இந்தியா** ஆகியநாடுகள் கூட்டாக அறிவித்துள்ளன.

15. நிறுவனங்களின் இயக்குநர் குழுவில் பெண்களின் பங்கேற்பு தொடர்பான தரப் பட்டியலில் உலகளவில் இந்தியா எத்தனையாவது இடத்தில் உள்ளது?

**விடை** : 12வது இடம்

**விளக்கம்**

- **நிறுவனங்களின் இயக்குநர் குழுவில் பெண்களின் பங்கேற்பு** தொடர்பான **தரப் பட்டியலில் இந்தியா** உலகளவில் **12ஆவது இடத்தில்** உள்ளது. இயக்குநர் குழுவில் பெண்களின் பங்கேற்பு குறித்து உலகளவில் 36 நாடுகளில் 7,824 பட்டியலிடப்பட்ட நிறுவனங்களிடம் ஆய்வு நடத்தப்பட்டது.
  - பட்டியலிடப்பட்ட 628 இந்திய நிறுவனங்களின் இயக்குநர் குழுவில் **55 சதவீதம் பெண் இயக்குநர்கள் இடம்பெற்றிருப்பது ஆய்வில் கண்டறியப்பட்டது.**
  - **செய்தித் துளிகள்** :
    - இந்தியாவில் நிறுவனங்களின் நிர்வாக குழுவில் ஆண் இயக்குநர்களின் சராசரி பதவிக்காலம் மூன்றாண்டுகளாக உள்ளது. அதேசமயம், உலகளவில் நிர்வாக குழுவில் உள்ள பெண்களின் சராசரி பதவிக்காலம் இரண்டு ஆண்டுகளாக மட்டுமே உள்ளது என அந்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

16. 15 பெண்களுக்கு நாரி சக்தி புரஸ்கர் விருதினை வழங்கியவர் யார்?

**விடை :** இந்திய குடியரசுத் தலைவர், ராம்நாத் கோவிந்த்

**விளக்கம்**

- **சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு** (மார்ச் 8) **ராஷ்டிரபதி பவனில் 15 பெண்களுக்கு நாரி சக்தி புரஸ்கர் விருதினை** இந்தியக் குடியரசுத் தலைவர் **ராம்நாத் கோவிந்த் வழங்கினார்.**
  - பெண்களுக்கு அதிகாரமளிக்கவும், அதிலும் குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய மற்றும் விளிம்புநிலைப் பெண்களுக்கு அதிகாரமளிக்கவும் வேண்டி பணிபுரியும் தனிநபர்கள், குழுக்கள் மற்றும் நிறுவனங்களின் சிறப்பான பணிகளை அங்கீகரிக்கும் வகையில் அவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் இந்த தேசிய விருது வழங்கப்படுகின்றது.
  - **செய்தித் துளிகள்**
    - இந்த விருதானது மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டு அமைச்சகத்தால் 1999ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
    - இது நிறுவனம் சார்ந்த ஆறு பிரிவுகளிலும் இரண்டு தனிநபர் பிரிவுகளிலும் வழங்கப்படுகின்றது.

17. குதுப் சாஷி கல்லறை தெலுங்கானா அரசால் எந்த நாட்டின் நிதி உதவியோடு புனரமைக்கப்பட்டுள்ளது?

**விடை:** அமெரிக்கா

**விளக்கம்**

- **தெலுங்கானாவில் உள்ள பாரம்பரிய சின்னமான குதுப்சாஹி கல்லறை அமெரிக்கா சார்பில்** அளிக்கப்பட்ட **நிதியுதவியில் புனரமைக்கப்பட்டது.**
    - இது தெலங்கானாவின் தலைநகரான ஹைதராபாத்தில் 17-ஆம் நூற்றாண்டில் எழுப்பப்பட்டது.
    - **செய்தித் துளிகள்**
        - அமெரிக்காவின் சார்பில் 2014ஆம் ஆண்டு ரூ.7.21 லட்சம் நிதி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.
        - இந்த கல்லறை இந்தோ- இசுலாமிய கட்டிடக்கலையின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.

18. "சஹ்யாத்ரி மேகா" என்பது எந்த தாவரத்தின் புதிய வகையாகும்?

**விடை:** நெல்

**விளக்கம்**

- **நெல் சாகுபடி குறைவதைத் தடுக்கும் பொருட்டு,** கர்நாடகாவின் சிவமொகாவில் உள்ள வேளாண் மற்றும் தோட்டக்கலை அறிவியல் பல்கலைக்கழகமானது (University of Agricultural and Horticultural Sciences –UAHS) **'சஹ்யாத்ரி மேகா'** என்ற **ஒரு புதிய சிவப்பு வகை நெல் வகையை உருவாக்கியுள்ளது.**
    - இந்த வகையானது வெடிப்பு நோயை எதிர்க்கும் தன்மை உடையதாகவும் ஊட்டச்சத்துக்கள் நிறைந்ததாகவும் உள்ளது.
    - **செய்தித் துளிகள்**

- இந்தப் புதிய வகையானது மாநில அளவிலான துணை விதைக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இது வரும் காரீப் பருவத்திலிருந்து விவசாயிகளுக்கு கிடைக்கும்
- புதிய வகையை மேம்படுத்துவதற்கான மற்றொரு நோக்கம் நகர்ப்புறங்களில் உள்ள சுகாதார ஆர்வமுள்ள நுகர்வோரால் நுகரப்படும் நார் மற்றும் புரதம் நிறைந்த சிவப்பு அரிசியின் தேவையைப் பூர்த்தி செய்வதாகும்.

19. "கிஷோரிசக்தி காரியகிரம்" என்ற பிரச்சாரம் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி எங்கு தொடங்கப்பட்டுள்ளது?

**விடை:** ஒடிசா

**விளக்கம்**

- **ஒடிசாவின் பெர்ஹாம்பூரைச் சேர்ந்த பதினான்கு பதின்ம வயதுப் பெண்கள் சர்வதேச மகளிர் தினத்தன்று 'கிஷோரி சக்தி காரியகிரம்'** என்ற ஒரு **பிரச்சாரத்தைத் தொடங்கினர்.**
    - இது நகரின் சேரிப் பகுதிகளில் வாழும் இளம் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
    - இந்த ஆர்வலர்கள் 14 வயது முதல் 18 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர்.
    - **செய்தித் துளிகள்**
        - இந்தப் பிரச்சாரமானது இளம் பருவத்தினருக்கும்

சமூகத்திற்கும் மாதவிடாய், திருமணத்திற்கான சரியான வயது, பள்ளி மற்றும் கல்லூரிப் படிப்புகளில் இடைநின்ற பெண்களை மீண்டும் அவற்றைத் தொடர ஊக்குவித்தல், பாலினச் சமத்துவத்தை ஊக்குவித்தல், திறன் மேம்பாடு மற்றும் இளம் பருவக் குழுக்களை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

20. பிரக்யான் மாநாடு எங்கு நடைபெறுகிறது?

**விடை :** புது தில்லி

**விளக்கம்**

- **'பிரக்யான் மாநாடு – 2020'** என்ற இந்திய இராணுவ சர்வதேச கருத்தரங்கானது தரைவழிப் போர் ஆய்வு மையத்தினால் (CLAWS – Centre for Land Warfare Studies) ஏற்பாடு செய்யப்பட்டது.
    - இந்த நிகழ்வானது தேசிய மற்றும் சர்வதேச இராணுவ வல்லுநர்களுக்கு **'தரைவழிப் போரின் சிறப்பியல்புகளை மாற்றுதல் மற்றும் இராணுவத்தின் மீதான அதன் தாக்கம்'** என்ற தலைப்பில் விவாதிப்பதற்கான ஒரு தளத்தை உருவாக்குகின்றது.
    - **செய்தி துளிகள்**
        - தரைவழிப் போர் ஆய்வு மையத்தினால் (CLAWS – Centre for Land Warfare Studies) ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கருத்தரங்கமானது புது

We Shine Academy™

தில்லியில் தொடங்கியது.

21. QS பாடத் தரவரிசை – 2020ன் படி, இந்தியாவின் சிறந்த (முன்னணி) தனியார் கல்வி நிறுவனம் எது?

**விடை** : வேலூர் தொழில்நுட்ப நிறுவனம் (Vellore Institute of Technology – VIT)

**விளக்கம்**

- QS பாடத் தரவரிசை – 2020ன் படி, **வேலூர் தொழில்நுட்ப நிறுவனமானது** (Vellore Institute of Technology – VIT) பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பாடத்திற்காக இந்தியாவின் சிறந்த (முன்னணி) தனியார் கல்வி நிறுவனமாக உருவெடுத்துள்ளது.
    - QS உலகப் பல்கலைக் கழகத் தரவரிசையில் இந்தப் பல்கலைக்கழகமானது **உலகின் 450 பல்கலைக் கழகங்களிடையே சிறந்த பல்கலைக் கழகமாக இடம் பெற்றுள்ளது.**
    - **செய்தி துளிகள்:**
        - QS உலகப் பல்கலைக்கழக தரவரிசை என்பது ஐக்கிய ராஜ்ஜியத்தின் குவாக்கரெல்லி சைமண்ட்ஸ் (Quacquarrelli Symonds – QS) நிறுவனத்தால் வெளியிடப்படும் பல்கலைக்கழக தரவரிசைகளின் ஒரு வருடாந்திர வெளியீடாகும்.

22. இந்திய நானோ மாநாடு -2020 யாரால் பெங்களூரில் நடத்தப்பட்டது?

**விடை:** மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை, கர்நாடக அரசு மற்றும் ஜவஹர்லால் நேரு மேம்படுத்தப்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மையம் (JNCASR)

**விளக்கம்**

- **இந்தியா நானோ மாநாடு மற்றும் கண்காட்சியானது பெங்களூரில் நடத்தப்பட்டது.**
  - இந்த மாநாட்டில் **நானோ தொழில்நுட்பத் துறையில் கல்வியாளர்கள் மற்றும் நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் தயாரிப்புகள்** ஆகியவை **காண்பிக்கப்பட்டன.**
  - **செய்தி துளிகள்**
    - இந்த மாநாடானது மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, கர்நாடக அரசு மற்றும் ஜவஹர்லால் நேரு மேம்படுத்தப்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மையம் (Jawaharlal Nehru Centre for Advance Scientific Research – JNCASR) ஆகியவற்றால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது.
    - JNCASR ஆனது இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் தன்னாட்சி பெற்ற ஒரு நிறுவனமாகும்.

23. தொற்று நோய் சட்டம் எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?



We Shine Academy TM

**விடை:** 1897

**விளக்கம்**

- **கொரோனா வைரஸ் (COVID – 19) பரவலை கட்டுபடுத்துவதற்காக இந்திய அரசு "தொற்று நோய் சட்டம் -1897"–ஐ அமல்படுத்தியுள்ளது.**
    - இந்த சட்டம், 2015ஆம் ஆண்டில் சண்டிகரில் மலேரியா மற்றும் டெங்கு பரவியபோதும், 2018-ஆம் ஆண்டு குஜராத்தில் காலரா பாதிப்பின்போதும் அமல்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.
    - **செய்தித் துளிகள்**
        - COVID -19 –ஐ WHO உலக அளவிலான தொற்றுநோயாக (Pandemic) அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.
        - இந்நோய் **சீனாவின் உஹான் நகரில் முதலில் தாக்கியது** குறிப்பிடத்தக்கது.
        - தொற்று நோய்கள் சட்டம், 1897ன் விதிமுறைகளை செயல்படுத்துமாறு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

24. ஜிஎஸ்டி கவுன்சிலின் எத்தனையாவது கூட்டம் டெல்லியில் நடைபெற்றது?

**விடை :** 39வது

**விளக்கம்**

- ஜிஎஸ்டி கவுன்சிலின் **39வது கூட்டம்** டெல்லியில் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் நடைபெற்றது. செல்போன்களுக்கான ஜிஎஸ்டி வரி 12 விழுக்காட்டில் இருந்து 18 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது என்று **நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறினார்.**
    - கைகளால் செய்யப்படும் மற்றும் எந்திரத்தால் தயாரிக்கப்படும் தீக்குச்சிகளுக்கான ஜிஎஸ்டி வரியை ஒரே சீராக மாற்றியமைக்க வேண்டும் என தமிழகம் மற்றும் புதுச்சேரி மாநில அரசுகள் கோரிக்கை விடுத்ததாக தெரிவித்தார்.
    - **செய்தி துளிகள்**
        - **தமிழகம் மற்றும் புதுச்சேரி மாநில** அரசுகளின் கோரிக்கையை ஏற்று தீக்குச்சிகளுக்கான ஜிஎஸ்டி வரியை ஒரே மாதிரியாக 12 விழுக்காடாக மாற்றியமைக்கப்படுவதாக தெரிவித்தார்.

25. மத்திய அரசின் சார்பில், விவசாய நிலங்களில் சூரியசக்தி மின் நிலையம் அமைக்கும் திட்டத்தின் கீழ் எத்தனை குதிரைத்திறன் கொண்ட மோட்டார்களை, விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள முடியும்?

**விடை:** 7.50குதிரைத்திறன்

**விளக்கம்**

- மத்திய அரசின் சார்பில், **விவசாய நிலங்களில் சூரியசக்தி மின் நிலையம் அமைக்கும் திட்டம்,** செயல்பாட்டில் உள்ளது.

விவசாயிகள், 30க்கு 40 அடி என்ற அளவில், தங்கள் நிலத்தை


We Shine Academy™

மின் வாரியத்திடம் ஒப்படைத்தால், அங்கு, **10 கிலோ வாட் திறன் கொண்ட சோலார் மின் நிலையம் அமைக்கப்படும்**. இதன் மூலம், அதிகபட்சம், **7.50 குதிரைத்திறன்** கொண்ட மோட்டார்களை, விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

- இதற்காகும் செலவில், மத்திய அரசு, 40 சதவீதமும், மாநில அரசு, 30 சதவீதமும் வழங்கும். மீதமுள்ள தொகை, வங்கிக்கடன் மூலம் ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.
- **செய்தித் துளிகள்**
  - தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தரமானச் சான்று பெற்ற நெல் விதைகள் ஒரு கிலோவுக்கு ரூ.10 மானிய விலையில் வழங்கப்படுகிறது.
  - விவசாயக் கூலித் தொழிலாளர்களின் பற்றாக்குறை காரணமாக இயந்திரமயமாக்குதலை ஊக்குவிக்கும் வகையில் **நடவு இயந்திரம்** கொண்டு **நெல் நடவு செய்பவர்களுக்கு ஓர் ஏக்கருக்கு ரூ.1500 மானியம்** வழங்கப்படுகிறது.

26. தனியார் நிறுவனங்களில் உள்ளூர் மக்களுக்கு 80% இடஒதுக்கீடு வழங்குமாறு அறிவுரை வழங்கிய மாநிலம் எது?

**விடை:** கர்நாடகம்

**விளக்கம்**

- அனைத்துப் பிரிவுகளிலும் **உள்ளூர் மக்களுக்கு** (கன்னட மொழி

பேசும்) **வேலைவாய்ப்புகளில் 80% இடஒதுக்கீடு** வழங்குமாறு **கர்நாடக அரசு தனியார் நிறுவனங்களுக்கு அறிவுரை** வழங்கியுள்ளது.

- தனியார் துறையில் தொகுதி 'சி' மற்றும் தொகுதி 'டி' ஆகிய பணிகளில் உள்ளூர் மக்களுக்கு 100% ஒதுக்கீடு வழங்குவதற்காக 1961ஆம் ஆண்டு கர்நாடகத் தொழில்துறை வேலைவாய்ப்பு (நிலையான ஆணைகள்) விதிகளை அம்மாநில அரசு ஏற்கனவே திருத்தியுள்ளது.

27. ராஜ்ய சபாவின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை என்ன?

**விடை** : 250

**விளக்கம்**

- **மாநிலங்களவை தேர்தலில் 6 பேர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளதாக** சட்ட பேரவை செயலாளரும், தேர்தல் நடத்தும் அதிகாரியுமான **கி.சீனிவாசன் தெரிவித்தார்.**
  - மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி திமுகவை சார்ந்த என்.ஆர்.இளங்கோ, ப.செல்வராசு, திருச்சி சிவா ஆகியோரும், அதிமுகவை சேர்ந்த மு.தம்பிதுரை, கே.பி.முனுசாமி மற்றும் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் ஜி.கே.வாசன் ஆகிய 6 பேர் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
  - **செய்தித் துளிகள்** :
    - சமீபத்தில் மாநிலங்களவை உறுப்பினராக முன்னாள் தலைமை நீதிபதியான ரஞ்சன் கோகோய்

நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

- **ராஜ்ய சபாவின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை – 250**
- ஜனாதிபதியால் தேர்வு செய்யப்படுபவர்கள் எண்ணிக்கை – 12

28. "பொதுச்சொத்துக்களை சேதத்திலிருந்து மீட்பதற்கான அவசர சட்டம் - 2020" என்ற சட்டம் நிறைவேற்றப்பட்ட மாநிலம் எது?

**விடை** : உத்திரப் பிரதேசம்

**விளக்கம்**

- சமீபத்தில் வன்முறைப் போராட்டங்களின் போது பொதுச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்களை மீட்பதற்காக உத்திரப் பிரதேச மாநில அமைச்சரவையானது **'பொதுச் சொத்துக்களைச் சேதத்திலிருந்து மீட்பதற்கான அவசரச் சட்டம் 2020'** என்ற ஒரு சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.
    - இது அம்மாநிலத்தில் பொது சொத்துக்களின் இழப்பைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

29. சீராய்வு மனுக்கள் இந்திய அரசியலமைப்பின் எந்தப் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்படுகின்றன?

**விடை** : 142வது பிரிவின் கீழ்

**விளக்கம்**

- **நிர்பயா வழக்கு** தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட **சீராய்வு மனுக்களை இந்திய உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளது.**

- இறுதித் தண்டனைத் தீர்ப்பிற்கு எதிரான மனு, தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர் ஒரு சீராய்வு மனுவானது தாக்கல் செய்யப்படுகின்றது.
- சீராய்வு மனுக்கள் **இந்திய அரசியலமைப்பின் 142வது பிரிவின் கீழ் தாக்கல்** செய்யப்படுகின்றன.
- **செய்தி துளிகள் :**
  - மறு ஆய்வு மனு இந்திய உச்ச நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர் இந்த சீராய்வு மனுவானது தாக்கல் செய்யப்படும்.
  - சீராய்வு மனுவின் கருத்தாக்கமானது இந்திய அரசியலமைப்பின் 137வது சரத்தினால் ஆதரிக்கப்படுகின்றது.
  - இந்த சரத்தானது 145வது சரத்தின் கீழ் உச்ச நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புகளை உச்சநீதிமன்றமே மறு ஆய்வு செய்ய அனுமதிக்கின்றது.

30. NCC இன் குறிக்கோள் என்ன?

**விடை :** ஒற்றுமை (ம) ஒழுக்கம்

**விளக்கம்**

- **மத்திய ஆயுதக் காவல் படைகளின்** (Central Armed Police Forces – CAPF) **நேரடி ஆட்சேர்ப்புத் தேர்வுகளில் தேசிய மாணவர் படைச் சான்றிதழ்** (National Cadet Corps – NCC) **வைத்திருப்பவர்களுக்கு கூடுதல் மதிப்பெண்கள்** வழங்க மத்திய

அரசு முடிவு செய்துள்ளது.

- NCCல் இந்திய இளைஞர்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- **செய்தித் துளிகள்** :
  - **தேசிய மாணவர் படை** : இது இராணுவம், கடற்படை மற்றும் விமானப் பிரிவுகளைச் சேர்ந்த இளம் மாணவர்களை உள்ளடக்கிய ஒரு முப்படைச் சேவை அமைப்பாகும்.
  - இந்த அமைப்பின் குறிக்கோள் **'ஒற்றுமை மற்றும் ஒழுக்கம்'** என்பதாகும்.

31. இந்திய தகவல் தொழில்நுட்ப சட்டம் எப்பொழுது கொண்டுவரப்பட்டது?

**விடை** : 2014

**விளக்கம்**

- மக்களவை இந்திய தகவல் தொழில்நுட்ப சட்டங்கள் (திருத்த) மசோதா 2020ஐ புது தில்லியில் மார்ச் 21-ஆம் தேதி நிறைவேற்றியது.
  - 2014இன் இந்திய தகவல் தொழில்நுட்ப சட்டம் மற்றும் இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (பொது – தனியார் கூட்டு) சட்டம், 2017 ஆகியவை இந்திய அரசின் தனித்துவமான முயற்சிகள்.
  - **செய்தித் துளிகள்** :
    - இது நாடு எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வுகளை

வழங்குவதற்காக தகவல் தொழில்நுட்பத் துறையில் அறிவை வழங்குவதாகும்.

32. என்பிஆர் பணிகளுக்காக மத்திய அரசு எவ்வளவு நிதி ஒதுக்கி இருந்தது?

**விடை:** ரூ.3,914 கோடி

**விளக்கம்**

- **கொரோனா வைரஸ்** தொற்று, நாட்டில் **தீவிரமடைந்துள்ளதை** அடுத்து, **மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணிகள், என்பிஆர் மேம்படுத்தும் பணிகள் காலவரையின்றி தாமதமாகும்** என்று உள்துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
    - நாடு முழுவதும் ஏப்ரல் 1-ம் தேதி சென்செஸ், என்பிஆர் பணிகளின் முதல் கட்டம் தொடங்கத் திட்டமிட்ட நிலையில் அது ஒத்திவைக்கப்படுகிறது.
    - **செய்தித் துளிகள்:**
        - மத்திய அரசு கொண்டுவந்த குடியுரிமைத் திருத்தச் சட்டம், என்பிஆர், என்ஆர்சி ஆகியவற்றுக்கு எதிராக பல்வேறு நகரங்களில் போராட்டம் நடந்து வருகிறது.
        - **என்பிஆர் பணிகளுக்காக** மத்திய அரசு **ரூ.3,914 கோடி ஒதுக்கி இருந்தது.**

33. யாரை பாராட்டும் வகையில் 5 மணியளவில் ஆங்காங்கே இருந்து ஓசை எழுப்பினர்?

**விடை:** சுகாதாரத்துறை பணியாளர்களை

**விளக்கம்**

- நாடுமுழுவதும் மக்கள் ஊரடங்கை கடை பிடித்து வருவதற்கும், கொரோனா எதிர்ப்பு களத்தில் போராடும் சுகாதாரத்துறை பணியாளர்களை பாராட்டும் வகையில் 5 மணியளவில் ஆங்காங்கே இருந்து ஓசை எழுப்பியதற்கு மக்களுக்கு பிரதமர் மோடி நன்றி தெரிவித்துள்ளார்.
  - **"மக்கள் ஊரடங்கு : கொரோனா வைரஸ் எதிர்ப்பு போராட்டத்தில் பங்கேற்றுள்ள ஒவ்வொருவருக்கும் இந்த நாடு நன்றி தெரிவிக்கிறது. கொடிய நோயை எதிர்த்து போராடும் நீண்ட நெடிய போராட்டத்தில் நமக்கு கிடைத்த முதல் வெற்றி இது"** எனக் கூறியுள்ளார்.
  - **செய்தித் துளிகள்:**
    - கொரோனா வைரஸ் பரவலில் இந்தியா தற்போதும் 2-ம் கட்டத்தில் இருப்பதால், அதற்குள் கட்டுப்படுத்த மத்திய அரசு தீவிரமான முயற்சிகளை எடுத்து வருகிறது.

34. கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மத்திய அரசு எத்தனை மாவட்டங்களை முடக்க முடிவு எடுத்துள்ளது?

**விடை:** 75 மாவட்டங்கள்

**விளக்கம்**

- **கொரோனா தடுப்பு நடவடிக்கைகள்** குறித்து மத்திய அரசின் கேபினட் செயலர், பிரதமரின் முதன்மைச் செயலர் மற்றும் மாநில தலைமைச் செயலர்கள் பங்கேற்ற உயர்மட்டக் கூட்டம் டெல்லியில் நடைபெற்றது.

- டெல்லி, சத்தீஸ்கர் உள்பட 21 மாநிலங்களில் உள்ள 75 மாவட்டங்கள் முடக்கம் செய்யப்பட்டுள்ளது. புதுச்சேரியில் மாஹே மாவட்டம் முடக்கம் செய்யப்பட்டுள்ளது.
- **செய்தித் துளிகள்:**
  - இந்த பட்டியலில் தமிழகத்தை பொறுத்தவரையில் சென்னை, காஞ்சிபுரம், ஈரோடு ஆகிய 3 மாவட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

35. நாட்டில் முதல் முதலாக பிஎஸ்-6 எரிபொருள் விற்பனையை எந்த நிறுவனம் தொடங்கியுள்ளது?

**விடை:** இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் (ஐஓசி)

**விளக்கம்**

- நாட்டில் **முதல் முதலாக பிஎஸ்-6 எரிபொருள் விற்பனையை இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்** (ஐஓசி) நிறுவனம் **தொடங்கியுள்ளது.**
  - இந்தியாவின் மிகப்பெரிய எண்ணெய் நிறுவனமாகத் திகழும் ஐஓசியின் தலைவர் சஞ்சீர் சிங் கூறியதாவது:
  - **உலகின் மிக சுத்தமான எரிபொருளாக பிஎஸ்-6 கருதப்படுகிறது.** இதனை நாடு முழுவதும் நாங்கள் வெற்றிகரமாக கொண்டு சேர்த்துள்ளோம்.
  - **செய்தித் துளிகள்**
    - தேசிய தலைநகர் தில்லியில் பிஎஸ்-6 தர எரிபொருள்களின் விற்பனையை எண்ணெய் நிறுவனங்கள் கடந்த 2018ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ஆம் தேதியே தொடங்கிவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

36. அடுத்த 3 மாதங்களில் பதவிக்காலம் நிறைவடையும் மாநிலங்களவை எம்.பி.க்களில் மீண்டும் தேர்வாகியுள்ளவர் யார்?

**விடை:** சரத் பவார்

**விளக்கம்**

- அடுத்த 3 மாதங்களில் **பதவிக்காலம் நிறைவடையும் மாநிலங்களவை எம்.பி.க்கள் 57 பேருக்கு** அவையில் **மார்ச் 23** அன்று **பிரியாவிடை** அளிக்கப்பட்டது.
    - தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார், மத்திய அமைச்சர் ராம்தாஸ் அதாவலே, காங்கிரஸ் மூத்த தலைவர் மோதி லால் வோரா, முன்னாள் மத்திய அமைச்சர் விஜய் கோயல் உள்ளிட்டோர் பதவிக் காலம் நிறைவடையும் உறுப்பினர்களில் முக்கியமானவர்கள் ஆவர். இவர்களில் சரத் பவார் மீண்டும் தேர்வாகியுள்ளார்.
    - **செய்தித் துளிகள்:**
        - மாநிலங்களவையில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்களின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிறைவடையும். அதன்படி, 20 மாநிலங்களிலிருந்து 57 உறுப்பினர்களின் பதவிக்காலம், வரும் ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான காலகட்டத்தில் நிறைவடையவுள்ளது.
        - அவர் உள்பட 37 உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்வாகிவிட்டநிலையில் மீதமுள்ள இடங்களுக்கான தேர்தல் வரும் மார்ச் 26-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

37. 2020-21-ஆம் நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி எத்தனை சதவீதமாக இருக்கும் என சர்வதேச தரக்குறியீட்டு நிறுவனமான எஸ்&பி தெரிவித்துள்ளது.?

**விடை:** 5.2 %

**விளக்கம்**

- வரும் ஏப்ரல் 1-ஆம் தேதி தொடங்கவுள்ள **2020-21-ஆம் நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 5.2 சதவீதமாக இருக்கும்** என சர்வதேச தரக்குறியீட்டு நிறுவனமான **எஸ்&பி தெரிவித்துள்ளது.**
  - பணவீக்கத்தைப் பொருத்தவரையில் தற்போதைய 4.7 சதவீதத்திலிருந்து அடுத்த நிதியாண்டில் 4.4 சதவீதமாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, 2021-22 நிதியாண்டில் 4.2 சதவீதமாக குறையும் எனவும், 2021-22 நிதியாண்டில் 4.4 சதவீதமாகவும், 2022-23 நிதியாண்டில் 4.5 சதவீதமாகவும் உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
  - **செய்தித் துளிகள்:**
    - வரும் 2020-21-ஆம் நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.5 சதவீதமாக இருக்கும் என முன்பு மதிப்பிடப்பட்டிருந்தது. இந்தச் சூழ்நிலையில், கொரோனா வைரஸ் உலக பொருளாதாரத்தில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதன் விளைவாக, வரும் நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 5.2 சதவீதமாக குறையும் என

We Shine Academy™

தற்போதைய மதிப்பீட்டின் மூலமாக தெரியவந்துள்ளது.

38. ‘ஹன்டாவைரஸ் ‘எனப்படும் புதிய வகை வைரஸால் முதல் முதலில் எந்த நாடு பாதிக்கப்பட்டது?

**விடை:** சீனா (யுன்னான் மாகாணம்)

**விளக்கம்**

- **‘ஹன்டாவைரஸ்’ எனப்படும் புதிய வகை வைரஸ் பாதிப்பால் ஒருவர் உயிரிழந்தார்** இதுகுறித்து அந்த நாட்டிலிருந்து வெளியாகும் ‘குளோபல் டைம்ஸ் நாளிதழ் தெரிவித்துள்ளதாவது.
    - கெரோனாவைரஸ் போல் ஹன்டாவைரஸ் காற்றில் பரவாதுஎனவும், எலியின் மூலம் பரவும் அந்தவைரஸ், பாதிக்கப்பட்ட எலியின் எச்சில், கழிவுகள் மூலம் மட்டுமே பரவும் எனவும் கூறப்படுகிறது.
    - **செய்தித் துளிகள்:**
        - பொதுவாக ஒரு மனிதரிடமிருந்து மற்றொரு மனிதருக்கு ஹன்டாவைரஸ் எளிதில் பரவாது என்பதால், அது கரோனாவைரஸ் அளவுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தாது என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

39. பள்ளி கல்விக்கென மத்திய அரசின் டிஜிட்டல் கற்றல் வலைதளங்களாக உருவாக்கப்பட்டவை எவை?

**விடை:** திக்ஷா இ-பாடசாலா, தேசிய திறந்தவெளிக்கல்வி

**விளக்கம்**

- கொரோனா தொற்று தடுப்பு முன்னெச்சரிக்கையாக விடப்பட்டிருக்கும் நீண்ட விடுமுறையை டிஜிட்டல் கற்றல் மூலம் பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ள ஏற்கனவே உருவாக்கப்பட்டிருக்கும் முழுவதும் **கட்டணமில்லாத மத்திய அரசின் டிஜிட்டல் கற்றல் வலைதளங்களைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் மத்திய மனித வளமேம்பாட்டு அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.**
    - இதில் பள்ளிகல்விக்கென திகூஷா, இ-பாடசாலா, தேசிய திறந்தவெளிக்கல்வி போன்ற வலைதளங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இதற்கான செயலியை கூகுள் பிளே ஸ்டோரிலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.
    - **செய்திதுளிகள்:**
        - திகூஷா: இதில் திக்ஷா வலைதளத்தில் ஒன்றாம் வகுப்பு முதல் பிளஸ்-2 வரையிலான **சி.பி.எஸ்.இ, என்.சி.இ.ஆர்.டி. மற்றும் மாநிலபாடத் திட்டங்களின் கீழ் உள்ள 80,000-க்கும் அதிகமான பாட புத்தகங்களும் டிஜிட்டல் வடிவில் இடம்பெற்றிருக்கின்றன.**
        - இ-பாடசலா: என்.சி.இ.ஆர்.டி. உருவாக்கியுள்ள இ-பாடசாலா வலைதளத்தில் ஒன்றாம் வகுப்பு முதல் பிளஸ்-2 வரையிலான அனைத்து பாடங்களுக்கும் 1,886 ஆடியோ வடிவிலான பாடங்கள், 2,000 வீடியோ வடிவிலான பாடங்கள் மட்டுமின்றி 696 இ-புத்தகங்களும் பல்வேறுமொழிகளில் இடம்பெற்றுள்ளன.

40. தேசிய மக்கள்தொகை பதிவேட்டை (என்பிஆர்) புதுப்பிக்கும் பணிகள், மக்கள்தொகை கணக்கெடுப்பு 2021-இன் முதல்கட்டப் பணிகள் ஆகியவை யாரால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது?

**விடை:** மத்திய அரசு

**விளக்கம்**

- **தேசிய மக்கள்தொகை பதிவேட்டை (என்பிஆர்) புதுப்பிக்கும் பணிகள், மக்கள்தொகை கணக்கெடுப்பு 2021-இன் முதல்கட்டப் பணிகள் ஆகியவை ஒத்திவைக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.**
    - கொரோனா நோய் தொற்று பரவலை தடுக்கும் நடவடிக்கையாக நாடு முழுவதும் 21 நாள்களுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அரசு இந்த முடிவை மேற்கொண்டுள்ளது. முன்னதாக இந்தப் பணிகள் ஏப்ரல் 1 முதல் செப்டம்பர் 30-ஆம் தேதிக்குள்ளாக நடத்தி முடிக்கப்பட இருந்தது குறிப்பிடத்தக்கது.
    - **செய்தித் துளிகள்:**
        - **மக்கள்தொகைக் கணக்கெடுப்பு 2021-இன் பணிகளானது, ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை முதல் கட்டமாகவும், அடுத்த ஆண்டு பிப்ரவரி 9 முதல் 28 வரை 2-ஆம் கட்டமாகவும் மேற்கொள்ளப்பட இருந்தது.**
        - இதில் முதல்கட்டப் பணிகளோடு, அஸ்ஸாம் தவிர அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில்

என்பிஆரை புதுப்பிக்கும் பணிகளையும் சேர்த்து மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்தது.

41. மத்திய உணவுத்துறை அமைச்சர் யார்?

**விடை:** ராம்விலாஸ் பாஸ்வான்

**விளக்கம்**

- **பீகாரில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்க மத்திய உணவுத்துறை அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்வான் மார்ச் 25 ஆம் தேதி அன்று ரூ.1 கோடி நிதியுதவி வழங்கினார்.**
    - 'கொரோனா வைரஸ் பாதிப்புக்கு சிகிச்சையளிக்கவும், தேவையான மருத்துவ உபகரணங்களை வாங்கவும் எம்.பி. நிதியில் இருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது' என தெரிவித்துள்ளார்.
    - **செய்தித் துளிகள்:**
        - தங்கள் தொகுதிகளில் மக்கள் நலத்திட்டங்களை மேற்கொள்ள எம்.பி. நிதியின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆண்டுதோறும் ரூ.5 கோடி வழங்கப்படுகிறது.

42. மணல் சிற்பத்தின் மூலம் கொரோனா வைரஸ் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திவரும் பட்நாயக் எந்த ஊரைச் சேர்ந்தவர்?

**விடை:** ஒடிசா

**விளக்கம்**

- **மணல் சிற்பத்தின் மூலம் கொரோனா வைரஸ் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும் ஒடிசாவை சேர்ந்த பிரபல மணல் சிற்பக்கலைஞர் சுதர்சன் பட்நாயக்கிற்கு உலக சுகாதார அமைப்பு பாராட்டு தெரிவித்துள்ளது.**
    - பொதுமக்கள் சமூக விலகலை கடைபிடிக்க வலியுறுத்தி புவனேஷ்வரில் மணற்சிற்பங்களை உருவாக்கியுள்ளார்.
    - இதனை பாராட்டும் வகையில் உலக சுகாதார அமைப்பின் டைரக்டர் ஜெனரல் அதானோம் கெப்ரேயுசு உலகிற்கு வலுவான செய்திகளை சொல்ல கலை ஒரு சக்திவாய்ந்த ஆயுதம் என்று குறிப்பிட்டுள்ளார்.
    - **செய்தித்துளிகள்:**
        - **பத்மஸ்ரீ விருது பெற்ற பட்நாயக், உலகம் முழுவதும் 50 க்கும் மேற்பட்ட சர்வதேச மணல் சிற்ப சாம்பியன்ஷிப் போட்டிகளில் பங்கேற்று பல விருதுகளை வென்றுள்ளார்.**

43. கொரோனா பரவல் எதிரொலியாக விதிக்கப்பட்டுள்ள ஊரடங்கின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு, எத்தனை லட்சம் மதிப்புள்ள அரிசியை முன்னாள் கேப்டன் சவ்ரவ் கங்குலி இலவசமாக வழங்குகிறார்?

**விடை:** ரூ.50 லட்சம்

**விளக்கம்**

- **கரோனா பரவல் எதிரொலியாக விதிக்கப்பட்டுள்ள ஊரடங்கின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு, ரூ. 50 லட்சம்**

**மதிப்புள்ள அரிசியை முன்னாள் கேப்டன் சவ்ரவ் கங்குலி இலவசமாக வழங்குகிறார்.**

- கரோனா பரவுவதைத் தடுக்கும் பொருட்டு மார்ச் 24-ஆம் தேதி நள்ளிரவு முதல் வரும் ஏப்ரல் மாதம் 14-ஆம் தேதி வரை இந்தியா முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
- இந்நிலையில் விதிக்கப்பட்டுள்ள ஊரடங்கின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு, ரூ.50 லட்சம் மதிப்புள்ள அரிசியை முன்னாள் கேப்டன் சவ்ரவ் கங்குலி இலவசமாக வழங்குகிறார்.
- **செய்தித் துளிகள்:**
  - சீனாவில் வூஹான் மாகாணத்தில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகத்திற்கே அச்சுறுத்தலாக உருமாறியுள்ளது.
  - இதுவரை **இந்தியாவில் 539 பேர் இந்த வைரஸ் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பத்து பேர் பலியாகியுள்ளனர்.**

44. "கிஷன் சம்மான் நிதி" திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு எவ்வளவு ரூபாய் வழங்கப்படும் என்று மத்திய அரசால் அறிவிக்கப்பட்டிருந்தது?

**விடை:** 6000 ரூபாய்

**விளக்கம்:**

- மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 9 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.
    - மத்திய அரசின் **"கிஷன் சம்மான் நிதி" திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு 6000 ரூபாய் வழங்கப்படும் என்று மத்திய அரசால் அறிவிக்கப்பட்டிருந்தது.** ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்கு தலா ரூ.2,000 வழங்கப்படும்.
    - ஜன் தன் யோஜனா திட்டத்தின் கீழ் வங்கிக்கணக்கு வைத்திருக்கும் பெண்களுக்கு அடுத்த 3 மாதத்திற்கு தலா ரூ.500 வழங்கப்படும், போன்ற 9 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.
    - **செய்தித் துளிகள்:**
        - சீனாவின் வூஹான் நகரிலிருந்து பரவத் தொடங்கிய கொரோனா வைரஸ் தற்போது உலகையே அச்சுறுத்தி வருகிறது. கொரோனா வைரஸால் உலகம் முழுக்க 21,000 மக்கள் இறந்துள்ளார்கள். கொரோனா நோய்த் தொற்று பரவலைத் தடுப்பதற்காக இந்தியா முழுவதும் 21 நாள் ஊரடங்கு விதிக்கப்பட்டுள்ளது.

45. கொரோனா நோய்தொற்று பாதிப்பால் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக எத்தனை லட்சத்தை ஆந்திரா மற்றும் தெலங்கானா மாநிலங்களின் முதல்வர் நிவாரண நிதிக்கு அளிப்பதாக பி.வி. சிந்து கூறியுள்ளார்?

**விடை:** தலா ரூ.5 லட்சம்

**விளக்கம்**

- கொரோனா நோய்தொற்று பாதிப்பால் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாகத் தலா **ரூ.5 லட்சத்தை ஆந்திரா மற்றும் தெலங்கானா மாநிலங்களின் முதல்வர் நிவாரண நிதிக்கு அளிப்பதாக பிரபல பாட்மிண்டன் வீராங்கனை பி.வி.சிந்து கூறியுள்ளார்.**
    - உலகம் முழுக்க 21,000 மக்கள் இறந்துள்ளார்கள். கொரோனா நோய்த் தொற்று பரவலைத் தடுப்பதற்காக இந்தியா முழுவதும் 21 நாள் ஊரடங்கு விதிக்கப்பட்டுள்ளது.
    - **செய்தித் துளிகள்**
        - உலக சாம்பியன் போட்டிகளில் ஒற்றையர் பிரிவில் தங்கம் வென்ற முதல் பெண் பி.வி.சிந்து ஆவார்.
        - 2013 ஆம் ஆண்டில் நடந்த முக்கியப் போட்டிகளில் இரண்டு தங்கமும், ஒரு வெண்கலப்பதக்கமும் வென்றுள்ளார்.

46. கொரோனா வைரஸின் நுண்ணோக்கி படங்கள், இந்தியாவில் முதல்முறையாக எந்த ஆராய்ச்சியாளர்களால் எடுக்கப்பட்டுள்ளன?

**விடை:** தேசிய வைராலஜி ஆய்வு நிறுவனம்

**விளக்கம்**

- கொரோனா வைரஸின் நுண்ணோக்கி படங்கள், இந்தியாவில் முதல்முறையாக வெளியிடப்படப்பட்டுள்ளன. மகாராஷ்டிர மாநிலம், புனேயில் செயல்படும் தேசிய வைராலஜி ஆய்வு

நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களால் இப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

- **கரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டவரிடமிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளிலிருந்து அதிநவீன மின்னணு நுண்ணோக்கி மூலம் கரோனா வைரஸின் படங்கள் எடுக்கப்பட்டுள்ளன.**
- 'சார்ஸ்-சிஓவி-2' எனப்படும் அந்த வைரஸின் படங்கள், இந்திய மருத்துவ ஆராய்ச்சி இதழில் வெளியிடப்பட்டுள்ளன.
- **செய்தித் துளிகள்:**
  - இந்த வைரஸானது, கடந்த 2012-ஆம் ஆண்டில் பரவிய 'மெர்ஸ்-சிஓவி' வைரஸ், கடந்த 2002-இல் பரவிய 'சார்ஸ்-சிஓவி' வைரஸ் ஆகியவற்றின் தோற்றத்தை ஒத்திருப்பதாக தேசிய வைராலஜி ஆய்வு நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

47. எப்போது வரை சேமிப்பு கணக்கில் குறைந்தபட்ச இருப்பு பராமரிக்காவிட்டால் விதிக்கப்படும் அபராத கட்டணம் தள்ளுபடி செய்யப்படும் என நிதி அமைச்சர் தெரிவித்தார்?

**விடை:** ஜூன் 30, 2020

**விளக்கம்:**

- கொரோனா வைரஸை மக்கள் துரத்துவதற்காக அவர்களுக்கு உதவும் பொருட்டு மத்திய நிதி அமைச்சம் புதிய வசதிகளை

அறிமுகம் செய்துள்ளது. **No ATM Withdrawal Charge for next 3 months.**

- மேலும் நிதி அமைச்சர் வெளியிட்ட அறிவிப்பு என்னவென்றால், சேமிப்பு கணக்கில் குறைந்தபட்ச இருப்பு (minimum balance) பராமரிப்பது தொடர்பாக, ஜூன் 30 வரை, குறைந்தபட்ச இருப்பு பராமரிக்காவிட்டால் விதிக்கப்படும் அபராத கட்டணமும் தள்ளுபடி செய்யப்படுகிறது என நிதி அமைச்சர் தெரிவித்தார்.
- **செய்தி துளிகள்**
  - நிதி அமைச்சகம் ஐந்து பிரிவுகளை கொண்டது.
  - பொருளாதார விவகாரங்கள் துறை (Department of Economic Affairs)
  - செலவுத் துறை (Department of Expenditure)
  - வருவாயத் துறை (Department of Revenue)
  - நிதி சேவைகள் துறை (Department of Financial Services)
  - பங்கு விற்பனைத் துறை (Department of Disinvestment)

48. கொரோனா நிவாரண நிதியாக சச்சின் டெண்டுல்கர் எத்தனை லட்சம் வழங்கினார்?

**விடை:** ரூ.50 லட்சம்

**விளக்கம்**

- **கொரோனா நிவாரண நிதியாக ரூ.50 லட்சம் வழங்கினார் சச்சின் டெண்டுல்கர். தலா ரூ.25 லட்சத்தை பிரதமர் நிவாரண நிதிக்கும் முதலமைச்சர் நிவாரண நிதிக்கும் வழங்கியுள்ளார்.**
  - **செய்தித் துளிகள்**
    - அதேபோல் ரூ.8.3 கோடி நிதியுதவி செய்துள்ளார் உலகின் நம்பர் ஒன் டென்னிஸ் வீரர் ஜோகோவிச். மேலும் குழந்தைகளின் பசியைப் போக்க பிரபல நடிகை ஏஞ்சலினா ஜோலி ரூ.7.50 கோடி நிதியுதவி செய்துள்ளார்.

49. ஆயுர்வேதம், யுனானி, சித்தா, ஹோமியோபதி உள்ளிட்ட பாரம்பரிய மருத்துவ முறைகளை உள்ளடக்கிய துறையின் பெயர் என்ன?

**விடை:** ஆயுஷ் மருத்துவத்துறை

**விளக்கம்**

- ஆயுஷ் மருத்துவத் துறையினர் தங்களது மருத்துவ வளங்களின் மூலம் சுத்திகரிப்பான் (சானிடைசர்) உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை தயாரித்து கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் உதவ வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார்.
  - **ஆயுர்வேதம், யுனானி, சித்தா, ஹோமியோபதி உள்ளிட்ட பாரம்பரிய மருத்துவ முறைகளை உள்ளடக்கியது ஆயுஷ் மருத்துவத் துறையாகும்.** அதை நிர்வகிப்பதற்காக ஆயுஷ் அமைச்சகம் செயல்பட்டு வருகிறது.
  - **செய்தித் துளிகள்:**

- இம்முறைகளை மேம்படுத்த 1995-ல் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறையில் இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி பிரிவு உருவாக்கப்பட்டது. இத்துறைக்கு 2003-ஆம் ஆண்டு ஆயுஷ் என்று மறுபெயர் சூட்டப்பட்டது.

50. செயற்கை சுவாசக் கருவியின் சராசரி விலை என்ன?

**விடை:** ரூ.5 லட்சம் முதல் ரூ.10 லட்சம்

**விளக்கம்**

- **கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்தால், செயற்கை சுவாசக் கருவியின் தேவை அதிகரிக்கும். அதன் காரணமாக அடுத்த 3 மாதங்களில் 40,000 செயற்கை சுவாசக் கருவிகளைத் தயாரிப்பதற்கு மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் முடிவெடுத்துள்ளது.**
  - செயற்கை சுவாசக் கருவியை தயாரிக்கப் போட்டியிடும் நிறுவனங்கள் உத்திரப் பிரதேசத்தின் கான்பூரிலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், மகாராஷ்டிரத்தின் புனேவிலுள்ள 'நோக்கா ரோபாடிக்ஸ்' நிறுவனம், குஜராத்தின் அகமதாபாத்தைச் சேர்ந்த 'சிடிஸன் இண்டஸ்ட்ரீஸ்' நிறுவனம் ஏப்ரல் 5-ஆம் தேதிக்குள் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளன.
  - **செய்தித் துளிகள்**
    - 40,000-அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் தற்போது உள்ள செயற்கை சுவாசக் கருவிகளின்

We Shine Academy™

எண்ணிக்கை:

- 1.10 லட்சம் முதல் 2.20 லட்சம் - மே மாதத்தில் தேவைப்படும் செயற்கை சுவாசக் கருவிகளின் எண்ணிக்கை.
- ரூ.5 லட்சம் முதல் ரூ.10 லட்சம்- செயற்கை சுவாசக் கருவியின் சராசரி விலை.

51. அறுவடைப் பணிகள் சுமுகமாக நடைபெறுவதற்காக, விவசாயம் சார்ந்த பணிகளுக்கு ஊரடங்கில் இருந்து விலக்கு யாரால் அளிக்கப்பட்டுள்ளது?

**விடை:** மத்திய உள்துறை அமைச்சம்

**விளக்கம்**

- அறுவடைப் பணிகள் சுமுகமாக நடைபெறுவதற்காக, விவசாயம் சார்ந்த பணிகளுக்கு ஊரடங்கில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
  - **கொரோனா தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக, நாடு முழுவதும் ஏப்ரல் 14-ஆம் தேதி வரை ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டுள்ளது.**
  - இந்த காலகட்டத்துக்குப் பிறகு மக்களுக்கு உணவுப் பொருள்கள் கிடைத்திட வேண்டும். இந்தப் பிரச்சனைகளை மத்திய உள்துறை அமைச்சகத்தின் கவனத்துக்கு கொண்டு **விவசாயம் சார்ந்த பணிகளை மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்க முடிவு செய்யப்பட்டது.**
  - **செய்தித் துளிகள்**

- விளைபொருள்கள் கொள்முதல், அறுவடை, பண்ணை சார்ந்த தொழில்கள் ஆகியவற்றுக்கு ஊரடங்கில் இருந்து மத்திய அரசு விலக்கு அளித்தது. உரம், பூச்சிக் கொல்லிகள், விதைகள் உற்பத்தி மையங்கள், விற்பனை மையங்கள் இயங்கவும் அனுமதி அளிக்கப்பட்டது.

52. கொரோனா நோய்த் தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக, பிரதமரின் அவசர கால நிதிக்கு அதானி குழும நிறுவனம் எத்தனை கோடி நிதியுதவி அளித்துள்ளது.?

**விடை:** ரூ.100 கோடி

**விளக்கம்**

- கொரோனா நோய்த் தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக, பிரதமரின் அவசர கால நிதிக்கு அதானி குழுமம், ஜேஎஸ்டபிள்யூ ஆகிய நிறுவனங்கள் தலா ரூ.100 கோடி நிதியுதவி அளித்துள்ளது.
  - இதுகுறித்து அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானி தனது சுட்டுரைப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், 'கொரோனாவுக்கு எதிரான யுத்தத்தில் அரசுக்கு உதவுவதற்காக, பிரதமரின் அவசர கால நிதிக்கு அதானி ஃபவுண்டேஷன் சார்பில் ரூ.100 கோடி நிதியுதவி அளிக்கப்படுகிறது' என்று தெரிவித்துள்ளார்.
  - **செய்தித் துளிகள்:**
    - டி-சீரிஸ் திரைப்பட தயாரிப்பு நிறுவனத்தின் உரிமையாளர் பூஷண் குமார் அவசர கால நிதிக்கு

ரூ.11 கோடி வழங்குவதாக அறிவித்துள்ளார். இதுதவிர, மகாராஷ்டிர முதல்வர் நிவாரண நிதிக்கு ரூ.1 கோடி நிதியுதவி அளிப்பதாக அறிவித்துள்ளார்.

- திரைப்பட தயாரிப்பாளர் முராத் கேதானி ரூ.25 லட்சமும் தொலைக்காட்சி பிரபலமும் நடிகருமான மணீஷ் பால் ரூ.20 லட்சமும் நிதியுதவி அளிப்பதாக அறிவித்துள்ளனர்..

53. இந்தியாவில் கொரோனா சமூகப் பரவலாக உருவெடுக்கவில்லை என்று அறிவித்த அமைச்சகம் எது?

**விடை:** மத்திய சுகாதாரத்துறை

**விளக்கம்**

- கொரோனா நோய்த்தொற்று இந்தியாவில் சமூகப் பரவலாக உருவெடுக்கவில்லை என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
  - **நோய்த்தொற்று பரவல் 100 நபர்களில் இருந்து 1000 நபர்களாக அதிகரிக்க 12 நாள்கள் வரை எடுத்துக் கொண்டுள்ளதால், இது சமூகப் பரவலாக மாறவில்லை என்று அமைச்சகம் விளக்கமளித்துள்ளது.**
  - **செய்தி துளிகள்:**
    - இந்த நேரத்தில் சமூக விலகல் என்பது மிகவும் முக்கியமானது. ஒரு நபர் கவனக் குறைவாக இருந்தாலும் மற்றவர்களுக்கும் நோய் பரவும் அபாயம் உள்ளது.

- கொரோனா குறித்து யாரும் வீண் வதந்தியைப் பரப்பக் கூடாது. உண்மையான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

54. செயற்கை சுவாசக் கருவியைத் தயாரிக்குமாறு எந்த நிறுவனங்களை அறிவுறுத்தியுள்ளது மத்திய சுகாதாரத்துறை?

**விடை:** வாகனத் தயாரிப்பு (ஆட்டோமொபைல்) நிறுவனங்கள்

**விளக்கம்**

- செயற்கை சுவாசக் கருவியைத் தயாரிக்குமாறு வாகனத் தயாரிப்பு (ஆட்டோமொபைல்) நிறுவனங்களை அறிவுறுத்தியுள்ளதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.
  - **நாட்டில் கொரோனா நோய்த்தொற்று (கொவைட்-19) பரவல் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகிறது. அந்த நோய்த்தொற்றால் பாதிக்கப்படுபவர்களுக்கு மூச்சு விடுவதில் சிரமம் ஏற்படும்.**
  - அதன் காரணமாக அவர்களுக்கு செயற்கை முறையில் ஆக்ஸிஜனை அளித்து, கார்பன் டை ஆக்ஸடை வெளியேற்றுவதற்கான கருவியைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படும்.
  - **செய்தித் துளிகள்:**
    - கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில், செயற்கை சுவாசக் கருவிக்கான தேவையும் அதிகரிக்கும். அதன் காரணமாக வரும் ஜூன் மாதத்துக்குள் 40,000

செயற்கை சுவாசக் கருவிகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக மத்திய அரசு அண்மையில் அறிவித்திருந்தது.

## சர்வதேச நிகழ்வுகள்

1. ஆப்கானிஸ்தானில் நீடித்த அமைதியை ஏற்படுத்துவதற்கு வகைசெய்யும் ஒப்பந்தம் யாருக்கு இடையே கையெழுத்தானது?

**விடை:** அமெரிக்கா-தலிபான் அமைப்பு

**விளக்கம்**

- **ஆப்கானிஸ்தானில் நீடித்த அமைதியை** ஏற்படுத்துவதற்கு வகைசெய்யும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தத்தில் **அமெரிக்காவும் தலிபான் அமைப்பும்** பிப்ரவரி 29 அன்று கையெழுத்திட்டன.
    - கத்தார் தலைநகர் தோஹாவில் கையெழுத்தான அந்த ஒப்பந்தத்தில், ஆப்கானிஸ்தானிலிருந்து தங்களது படையினரை இன்னும் **14 மாதங்களில்** முழுமையாக விலக்கிக் கொள்ள அமெரிக்காவும், அல்கொய்தா போன்ற பயங்கரவாத அமைப்புகளுடனான தொடர்பைத் துண்டித்துக்கொள்ள தலிபான் அமைப்பும் ஒப்புக்கொண்டுள்ளன.
    - **செய்தித் துளிகள்**
        - ஆப்கானிஸ்தானில் அமைதியை ஏற்படுத்துவதற்கான அமைதிப் பேச்சுவார்த்தை, கத்தார் தலைநகர்

WeShine Academy™

தோஹாவில் பல கட்டங்களாக நடைபெற்று வந்தது.

- இந்த ஒப்பந்தத்தில் **அமெரிக்க தூதர் ஜல்மே கலீல்ஜாத்தும், தலிபான்** துணைத்தலைவர் முல்லா அப்துல் கானியும் கையெழுத்து போட்டனர்.

2. எந்த நாடு உலகளாவிய கூட்டிணைவைத் தொடங்கியது?

**விடை :** ஐரோப்பியா

**விளக்கம்**

- **ஐரோப்பிய ஆணையமானது மொனாக்கோவில் ஒரு புதிய உலகளாவிய கூட்டிணைவைத் தொடங்கியுள்ளது.**
    - பல்லுயிர்ப் பாதுகாப்பின் அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒரு வலுவான கூட்டிணைவிற்கு இந்த ஆணையம் அழைப்பு விடுத்துள்ளது.
    - **செய்தித் துளிகள்:**
        - 2020ஆம் ஆண்டு அக்டோபரில் நடைபெற இருக்கும் உயிரியல் பன்முகத் தன்மை ஒப்பந்தம் தொடர்பான பங்காளர்கள் மாநாட்டின் 15வது அமர்விற்கு முன்னதாக, இந்த ஆணையக் குழுவானது இயற்கைப் பிரச்சினைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது

3. பிரீடம் ஹவுஸ் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கை எது?

**விடை:** அரசியல் உரிமைகள் மற்றும் சிவில் உரிமைகளின் வருடாந்திர அறிக்கை



We Shine Academy™

**விளக்கம்**

- **பிரீடம் ஹவுஸ் அமைப்பினால் வெளியிடப்பட்ட அரசியல் உரிமைகள் மற்றும் சிவில் உரிமைகள்** குறித்த வருடாந்திர **அறிக்கையின் படி,** இந்தியா உலகின் குறைந்த மக்களாட்சித் தன்மை கொண்ட நாடுகளில் ஒன்றாக உருவெடுத்துள்ளது.
  - உலகச் சுதந்திரம் - 2020 என்ற அறிக்கையில் திமோர் லெஸ்டே மற்றும் செனகல் ஆகியவற்றுடன் **இந்தியா 83வது இடத்தில் உள்ளது.**

4. OPEC இன் விரிவாக்கம் என்ன?

**விடை:** Organisation of Petroleum Exporting Countries

**விளக்கம்**

- உலகளவில் **கச்சா எண்ணெய் விலையில் சரிவின் எதிரொலியால்** ஆசிய பணக்காரர்கள் பட்டியலில் **ரிலையன்ஸ் அதிபர் முகேஷ் அம்பானி இரண்டாம் இடத்துக்கு** தள்ளப்பட்டுள்ளார்.
  - ஒபெக் (OPEC) கூட்டமைப்பு மற்றும் ரஷ்யா இடையே நடைபெற்ற கச்சா எண்ணெய் உற்பத்தி தொடர்பான பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததைத் தொடர்ந்து, ரஷ்யா கச்சா எண்ணெயின் உற்பத்தியை அதிகரித்து விலையை குறைக்க ரஷ்யா அறிவித்தது.
  - **செய்தித் துளிகள்**
    - OPEC – Organisation of Petroleum Exporting Countries

- தலைமையகம் - வியன்னா, ஆஸ்ட்ரியா
- உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை-14

5. சிகாகோ தமிழ்ச் சங்க பொன்விழா, 2019ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் உயரிய விருதான எந்த விருதைப் பெற்றது?

**விடை:** தமிழ்த்தாய் விருது

**விளக்கம்**

- சிகாகோ தமிழ்ச் சங்க பொன்விழா: 2019ஆம் ஆண்டில் ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்யும் பொன்விழா ஆண்டாக கொண்டாடப்பட்டது. இந்த ஐம்பது ஆண்டுகளில் சங்கத்திற்காக அரும்பாடுபட்ட முன்னாள் செயற்குழு உறுப்பினர்களைச் சிறப்பிக்கும் விதமாக விருந்தளித்து, சங்க வளர்ச்சிக்காக அவர்களின் மேலான ஆலோசனைகள் பெறப்பட்டது.
    - **தமிழ்நாடு அரசின் உயரிய விருதான 'தமிழ்த்தாய் விருது'- 2019 சிகாகோ தமிழ்ச் சங்கம் பெற்றது.**
    - **செய்தித் துளிகள்:**
        - தமிழ்நாடு அரசின் ஆழ்ந்த பரிசீலனைக்குப்பின் சிகாகோ தமிழ்ச் சங்கத்தின் பணிகள் மிகச் சிறப்பானதாகக் கருதி தேர்வு செய்தனர்.
        - புலம் பெயர் மண்ணில், சிகாகோ தமிழ்ச் சங்கம் தான் இத்தகைய விருது பெறுவதற்குத் தேர்வு பெற்ற முதல் தமிழ் அமைப்பாகும்.

6. ஒரே நேரத்தில் உலகெங்கிலும் பல நாடுகளில் பரவி வரும் ஒரு

நோய் எவ்வாறு அழைக்கப்படும்?

**விடை:** தீவிர தொற்றுநோய்

**விளக்கம்**

- **கொரோனா வைரஸ் ஒரு தீவிர தொற்றுநோய் என்று உலக சுகாதார அமைப்பு (WHO) அறிவித்துள்ளது.** ஒரு தீவிர தொற்றுநோய் என்பது ஒரே நேரத்தில் உலகெங்கிலும் பல நாடுகளில் பரவி வரும் ஒரு நோயாகும்.
    - கடந்த இரண்டு வாரங்களில் சீனாவுக்கு வெளியே உள்ள நாடுகளில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது என்று **உலக சுகாதார அமைப்பின் தலைவர் டொக்ரர் ரெட்ரோஸ் அடனோம் கெப்ரியசுஸ்** (Dr Tedros Adhanom Ghebreyesus) தெரிவித்துள்ளார்.
    - **செய்தித் துளிகள்:**
        - அவசர மற்றும் கடுமையான நடவடிக்கை எடுத்து வைரஸ் பரவுவதன் போக்கை மாற்றுமாறு அவர் அரசாங்கங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். இந்த வைரஸை அடக்கிக் கட்டுப்படுத்த முடியும் என்பதை பல நாடுகள் நிரூபித்துள்ளன என்றும் அவர் கூறினார்.

7. அமெரிக்காவில் இந்த ஆண்டு நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலுக்கான ஜனநாயகக் கட்சி வேட்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?

**விடை:** ஜோ பிடன்

**விளக்கம்**

We Shine Academy™

- அமெரிக்காவில் இந்த ஆண்டு நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலுக்கான **ஜனநாயகக் கட்சி வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதற்காக 3 மாகாணங்களில் நடைபெற்ற வாக்கெடுப்பில் முன்னாள் துணை அதிபர் ஜோ பிடன் (77) வெற்றி** பெற்றுள்ளார்.
  - இதையடுத்து, போட்டியில் அவருக்கு அடுத்த இடத்திலுள்ள வெர்மான்ட் மாகாண எம்.பி. பெர்னி சாண்டர்ஸை (78) விட அவர் அதிக முன்னிலை பெற்றுள்ளார்.
  - **செய்தித் துளிகள்:**
    - அமெரிக்க ஜனாதிபதிகளின் பட்டியல்
    - ஜனவரி 20, 2001 - ஜனவரி 20, 2009 ஜார்ஜ் டபிள்யூ புஷ்
    - ஜனவரி 20, 2009 – ஜனவரி 20, 2017 பராக் ஒபாமா
    - ஜனவரி 20, 2017 டொனால்டு டிரம்ப்

8. பிளாஸ்டிக்கை எளிதில் செறித்து, ஆல்கஹாலாக மாற்றித்தரும் திறனைக் கொண்ட மெழுகுப் புழுக்களை யார் கண்டறிந்துள்ளனர்?

**விடை:** பிராண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள்

**விளக்கம்**

- **கனடாவிலுள்ள, பிராண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மெழுகுப் புழுக்களின் வயிற்றிலுள்ள சில கிருமிகள் பிளாஸ்டிக்கை எளிதில் செறித்து, ஆல்கஹாலாக மாற்றித்தரும் திறனைக் கொண்டிருந்ததை கண்டறிந்துள்ளனர்.**

- ○ புழுக்களுக்கும், ஆய்வகத்தில் பிளாஸ்டிக்கை கொடுத்து, பெருமளவில் பிளாஸ்டிக் குப்பையை ஆல்கஹாலாக மாற்ற முடியும் என, பிராண்டன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.
- ○ **செய்தித் துளிகள்** :
  - ▪ தேனீ வளர்ப்போருக்கு சவாலாக இருக்கும் மெழுகுப் புழுக்கள் குறித்து ஆராய்ந்தபோது இது தெரியவந்தது. பெருகி வரும் பிளாஸ்டிக் பொருளை என்ன செய்வது என தெரியாமல் இருக்கும் நிலையில் இந்த கண்டுபிடிப்பு வருங்கால மனிதர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்

9. காலநிலை மற்றும் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச இராணுவ மன்றம் எப்போது அறிவிக்கப்பட்டது?

**விடை:** 2019ம் ஆண்டில் நெதர்லாந்தில்

**விளக்கம்**

- **காலநிலை மற்றும் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச இராணுவ மன்றமானது** (International Military Council on Climate and security – IMCCS) மாறிவரும் காலநிலைப் பாதுகாப்பின் அபாயங்கள் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் பகுப்பாய்வு செய்வதற்காகவும் அவற்றிற்குத் தீர்வு காண்பதற்காகவும் அர்ப்பணிக்கப்பட்டுள்ள உலகெங்கிலும் உள்ள மூத்த இராணுவத் தலைவர்கள், பாதுகாப்பு வல்லுநர்கள் மற்றும் பாதுகாப்பு நிறுவனங்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு

குழுவாகும்.

- காலநிலை மாற்றத்தின் பாதுகாப்பு மற்றும் இராணுவ பரிமாணங்களுக்குத் தீர்வு காண்பதற்கான தகவல்களையும் சிறந்த நடைமுறைகளையும் பகிர்ந்து கொள்வதற்காக இராணுவ நிபுணர்களிடமிருந்து அதிகரித்து வரும் கோரிக்கைக்கு எதிர்வினையாற்றுவதற்காக **IMCCSன் அறிமுகமானது 2019ஆம் ஆண்டின் நெதர்லாந்தின் ஹேக்கில் அறிவிக்கப்பட்டது.**
- **செய்தித் துளிகள்**
  - IMCCS ஆனது காலநிலை மற்றும் பாதுகாப்பு மையத்தால் நிர்வகிக்கப்படுகின்றது.
  - சமீபத்தில் உலகக் காலநிலை மற்றும் பாதுகாப்பு அறிக்கையானது IMCCS அமைப்பால் வெளியிடப்பட்டது.

10. மைக்ரோசாப்ட் நிறுவனத்தில் இயக்குநர் குழுவில் இருந்து யார் விலகியுள்ளார்?

**விடை:** பில் கேட்ஸ்

**விளக்கம்**

- **MicroSoft - லிருந்து பில்கேட்ஸ் விலகல்** ... திடீர் அறிவிப்பு !
  - மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் இயக்குநர் குழுவில் இருந்து இணை நிறுவனர் பில்கேட்ஸ் விலகியுள்ளார்.
  - **செய்தித் துளிகள்**
    - அவர் பொதுச்சேவையில் ஈடுபடப்போவதாகவும்,

அதனால் தன் நிறுவனப் பதவியில் இருந்து விலகப் போவதாகவும் அறிவித்துள்ளார். மேலும், அவர் பதவி விலகினாலும் நிறுவனத்துடன் தொடர்பில் இருக்கப்போவதாக தெரிவித்துள்ளார்.

11. SAARC மாநாட்டின் உறுப்பு நாடுகள் என்னென்ன?

**விடை:** ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூடான், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை

**விளக்கம்**

- **கொரோனா வைரஸ்** பாதிப்பை **எதிர்த்துச் சமாளிப்பதற்கு** ஒரு உத்தியை வகுப்பதற்காக **சார்க் அமைப்பின் தலைவர்கள் காணொளி மாநாடு** ஒன்றில் பங்கேற்றனர்
  - இந்த மாநாட்டில் **இந்தியாவின் சார்பாக பிரதமர் மோடி கலந்து கொண்டார்**.
  - இந்த மாநாட்டில் கோவிட் -19 பாதிப்பிற்கான அவசரகால நிதியை உருவாக்க இந்தியா முன்மொழிந்துள்ளது.
  - மேலும் இந்த வைரஸ் நோய்க் கடத்திகளைச் சிறப்பான முறையில் கண்காணிப்பதற்காக இந்தியா நோய் கண்காணிப்பு இணைய வாயிலை அமைக்க உள்ளது.
  - **'நோயை எதிர்த்துப் போராட தயாராகு, அச்சம் அடையத் தேவையில்லை'** என்ற உத்தியுடன் இந்தியா கொரோனா வைரஸ் பாதிப்பை எதிர்த்துப் போராடுகின்றது.

12. மத்திய சமஸ்கிருத பல்கலைக்கழக மசோதா 2019 எந்த ஆண்டு

நிறைவேற்றப்பட்டது?

**விடை :** 2020

**விளக்கம்**

- மத்திய சமஸ்கிருத பல்கலைக் கழக மசோதா,2019 என்ற ஒரு மசோதாவை நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.
    - இது இந்தியாவின் மூன்று பல்கலைக் கழகங்களுக்கு மத்தியப் பல்கலைக்கழக அங்கீகாரத்தை வழங்க இருக்கின்றது.
    - **2020ஆம் ஆண்டு** மார்ச் 16 அன்று **மாநிலங்களவையானது மத்திய சமஸ்கிருத பல்கலைக்கழக மசோதா,2019ஐ** குரல் **வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றியது.**
    - **செய்தித் துளிகள்:**
        - மூன்று பல்கலைக் கழகங்கள் பின்வருமாறு:
        - ராஷ்டிரிய சமஸ்கிருத வித்யாபீத், திருப்பதி
        - ராஷ்டிரிய சமஸ்கிருத சன்ஸ்தான், புது தில்லி மற்றும்
        - ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி ராஷ்டிரிய சமஸ்கிருத வித்யாபீத், புது தில்லி

13. வங்க தேசத்தின் தந்தை என்றழைக்கப்படுபவர் யார்?

**விடை :** ஷேக் முஜ்பர் ரஹ்மான்

**விளக்கம்**

- 2020ஆம் ஆண்டு **மார்ச் 17** அன்று வங்கதேசமானது **"ஜதீர் பிதா"** பங்கபந்து ஷேக் **முஜிபுர் ரஹ்மானின் 100வது பிறந்த**

**தினத்தைக் கொண்டாடியது.**

- ○ பிரதமர் மோடி காணொளியின் மூலம் இந்தக் கொண்டாட்டத்தில் பங்கேற்றார்.
- ○ ஷேக் முஜிபுர் ரஹ்மான் வங்கதேசத்தைச் சேர்ந்த ஒரு அரசியல்வாதி ஆவார்.
- ○ **செய்தித் துளிகள்** :
  - ▪ இவர் **வங்கதேசத்தின் தந்தை என்றும் அழைக்கப்படுகின்றார்.**
  - ▪ இவர் வங்கதேசத்தின் முதல் அதிபராகப் பணியாற்றினார்.
  - ▪ பின்னர் 1971 மற்றும் 1975க்கு இடைப்பட்ட காலப் பகுதியில் வங்கதேசத்தின் பிரதமராகப் பணியாற்றினார்.

14. உலக மகிழ்ச்சி அறிக்கை 2020 இல் இந்தியாவின் இடம் எது?

**விடை** : 144

**விளக்கம்**

- ஐக்கிய நாடுகளால் வெளியிடப்படும் **உலக மகிழ்ச்சி அறிக்கை** (World Happiness Report) – 2020 இல் **இந்தியா 144-வது இடத்தில்** உள்ளது.
  - ○ மொத்தம் 156 நாடுகள் இதில் உள்ளன. இதில் **மூன்றாவது முறையாக முதலிடத்தில் பின்லாந்து** உள்ளது. அதனை தொடர்ந்து டென்மார்க்கும், சுவிட்சர்லாந்தும் உள்ளது.

We Shine Academy ™

- இதனை சர்வதேச மகிழ்ச்சி தினமான மார்ச் 20 அன்று ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி தீர்வுகள் அமைப்பு (United Nations Sustainable development Solutions Network) வெளியிட்டது.

15. சமீபத்தில் முதன்முறையாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு மன்றத்தில் இடம் பெற்ற நாடு எது?

**விடை :** சியரா லியோன்

**விளக்கம்**

- **சியரா லியோன் நாடு** முதன்முறையாக **ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு மன்றத்தில் இடம் பெற்றுள்ளது.**
  - **சியரா லியோனின் பொதுப் புள்ளிவிவர ஆணையரான ஒஸ்மான் சங்கோ** என்பவர் ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளிவிவர ஆணைய அமர்வுகளின் அறிக்கைகளை வெளியிடும் உறுப்பினராக **4 ஆண்டு** காலத்திற்கு (2020 – 2023) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
  - **செய்தித் துளிகள் :**
    - 2020ஆம் ஆண்டு மார்ச் 6ஆம் தேதியன்று நியூயார்க்கில் முடிவடைந்த 51வது அமர்வில், நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான (Sustainable Development Goals – SDG) உலகளாவிய குறிகாட்டிக் கட்டமைப்பில் ஏற்படுத்தப்பட்ட முப்பத்தாறு மாற்றங்கள் ஐக்கிய நாடுகளின் புள்ளிவிவர ஆணையத்தால் (United Nations Statistical

Commission – UNSC) ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்டன.

16. கொரோனா நோய்த்தொற்று: உலக அளவில் முதல் இடத்தை பிடித்தது நாடு எது?

**விடை:** அமெரிக்கா

**விளக்கம்**

- **கொரோனா நோய்த்தொற்று: உலக அளவில் முதல் இடத்தை பிடித்தது அமெரிக்கா.**
  - அமெரிக்காவில் கொரோனா நோய்த்தொற்று (கோவைட்-19) காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டியது. மேலும், ஒரே நாளில் 15 ஆயிரம் பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதை அடுத்து நோய்த் தொற்று ஏற்பட்டவர்களின் எண்ணிக்கை 83,672 ஆக அதிகரித்துள்ளது. இதையடுத்து சீனா மற்று இத்தாலியை பின்னுக்குத்தள்ளி அமெரிக்கா முதலிடைத்தை பிடித்துள்ளது.
  - **செய்தித் துளிகள்:**
    - கொரோனா நோய்த்தொற்று பரவலால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுவதற்காக, 220 கோடி டாலர் (சுமார் ரூ.16,860 கோடி) நிதி ஒதுக்கீடு செய்வதற்கு டிரம்ப் ஒப்புதல் வழங்கியுள்ளார்.

17. தற்போது 8 மாநிலங்களுக்கு எத்தனை கோடி பேரிடர் நிவாரணம் வழங்க மத்திய அரசு ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது?

**விடை:** ரூ.5,700 கோடி

**விளக்கம்**

- 8 மாநிலங்களுக்கு பேரிடர் நிவாரணம் ரூ. 5,700 கோடி மத்திய அரசு ஒப்புதல்.
  - தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்ட இந்த கூடுதல் நிதி தேசிய பேரிடர் நிதியத்தின் (என்டிஆர்எ.ஃ.ப்)-இன் கீழ் அங்கீகரிக்கப்பட்டதாகும்.
  - அதன்படி **பீகாருக்கு ரூ.953.17 கோடியும், கேரளத்துக்கு ரூ.460.77 கோடியும், நாகலாந்துக்கு ரூ.177.37 கோடியும், ஒடிஸாவுக்கு ரூ.179.64 கோடியும், மகாராஷ்டிரத்துக்கு ரூ.1,758.18 கோடியும், ராஜஸ்தானுக்கு ரூ.1,119.98 கோடியும், மேற்கு வங்கத்துக்கு ரூ.1,090.68 கோடி வெள்ள பாதிப்புகளுக்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**
  - **செய்தித் துளிகள்:**
    - கடந்த 2019-ஆம் ஆண்டில் வெள்ளம், நிலச்சரிவு, 'புல்புல்' புயல், வறட்சி ஆகிய பேரிடரால் பாதிக்கப்பட்ட 8 மாநிலங்களுக்கு மத்திய அரசால் நியமிக்கப்பட்ட மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையிலான உயர்மட்டக் குழு ரூ.5,751.27 கோடியை கூடுதல் நிதியாக ஒதுக்கீடு செய்ய ஒப்புதல் அளித்தது.

18. யாருடைய இணைப்பில் தேசிய ஒற்றுமை அரசு அமைக்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது?

**விடை:** இஸ்ரேலில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவும் முன்னாள் ராணுவ தலைமை தளபதி பென்னி கான்ட்ஸும்

**விளக்கம்**

- **இஸ்ரேலில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவும் முன்னாள் ராணுவ தலைமை தளபதி பென்னி கான்ட்ஸும் இணைந்து தேசிய ஒற்றுமை அரசு அமைக்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.**
    - சில நாட்களுக்கு முன்னர், முன்னாள் ராணுவ தலைமை தளபதியும் புளு அண்ட் வைட் கட்சித் தலைவருமான பென்னி கான்ட்ஸை ஆட்சி அமைக்கும் முயற்சியை மேற்கொள்ளுமாறு அதிபர் கேட்டுக் கொண்டார்.
    - வரும் 18 மாதங்களுக்கு நெதன்யாகு தலைமையில் கூட்டணி ஆட்சி அமையும். அதன் பின்னர், பென்னி கான்ட்ஸ் பிரதமராகப் பொறுப்பேற்பார்.
    - **செய்தித் துளிகள்:**
        - ஒரே ஆண்டுக்குள் இஸ்ரேல் நாடாளுமன்றத்துக்கு மூன்று முறை பொதுத்தேர்தல் நடத்தப்பட்டும், தனிப் பெரும்பான்மையுடன் எந்தக் கட்சியும் ஆட்சி அமைக்க இயலாத நிலை நிலவுகிறது.

19. கூகுள் தனது டுயோ சாட் ஆப்பை மேம்படுத்தி அதன் மூலம் ஒரே சமயத்தில் எத்தனை நபர் கொண்ட குழு அழைப்பை மேற்கொள்ளும் வசதியை ஏற்படுத்தியுள்ளது?

**விடை:** 12

**விளக்கம்**

- **கூகுள் தனது டுயோ சாட் ஆப்பை மேம்படுத்தியுள்ளது.**
    - அதன் மூலம் இது 8 பேருடன் ஒரே சமயத்தில் குழு அழைப்பை மேற்கொள்ளும் வசதியை 12 ஆக அதிகரித்துள்ளது.
    - உலகம் முழுக்க **கொரோனா பரவல் காரணமாக ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ள நிலையில், நிறுவனங்கள் குழு அழைப்பை மேற்கொள்ளவும், தனிநபர்கள் உறவினர்களோடு பேசவும் வசதியாக கூகுள் டுயோ** இந்த வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.
    - **செய்தித் துளிகள்:**
        - கூகுள் தலைமையகம்: கலிபோர்னியா, ஐக்கிய அமெரிக்கா
        - இந்நிறுவனம் 1998இல் லாரி பேஜ், சேர்ஜி பிரின் ஆகியோரால் துவங்கப்பட்டது.

20. கொரோனா நோய்த்தொற்று காரணமாக தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்ட பிரதமர் யார்?

**விடை:** இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு

**விளக்கம்**

- **இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டார்.**
    - தனது உதவியாளருக்கு கெரோனா நோய்த்தொற்று ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டதையடுத்து நெதன்யாகு இந்த முடிவை எடுத்துள்ளதாக அந்நாட்டு பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

○ **செய்தித் துளிகள்:**

- **கொரோனா நோய்த்தொற்று காரணமாக உலகம் முழுவதும் 785,777 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 37,815 பேர் உயிரிழந்துவிட்டனர்.**
- அமெரிக்காவில் நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 1.64 லட்சமாக அதிகரித்துள்ளது.

## அறிவியல் நிகழ்வுகள்

1. GISAT – 1 எந்த ராக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட உள்ளது?

**விடை :** GSLV F – 10

**விளக்கம்**

- இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO) தயாரித்துள்ள புவி கண்காணிப்பிற்கு உதவும் **ஜிஐசாட் - 1 செயற்கைக் கோள் மார்ச் 5ஆம் தேதி விண்ணிற்கு ஏவப்படவுள்ளது.**
  - இது 170 அடி உயரமுடைய ஜி.எஸ்.எல்.வி.எப். – 10 ராக்கெட் மூலம் ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் அமைந்திருக்கும் இந்திய விண்வெளி ஆய்வு மையத்தில் இருக்கும் ஏவுதளத்தில் இருந்து செலுத்தப்படவுள்ளது.
  - **செய்தித் துளிகள் :**
    - இது வரை ஏவப்பட்ட **13 GSLV ராக்கெட்டுகளில் இதுதான் மிகவும் உயரமானது** என்பது குறிப்பிடத்தக்கது.

2. எதனை பயன்படுத்திப் பிரபஞ்சத்தில் காணப்பட்ட மிகப்பெரிய வெடிப்பை வானியலாளர்களைக் கொண்ட சர்வதேச குழுவானது கண்டுபிடித்துள்ளது?

**விடை :** எக்ஸ் கதிர் மற்றும் ரேடியோ தொலைநோக்கி

**விளக்கம்**

- **எக்ஸ் கதிர் மற்றும் ரேடியோ தொலைநோக்கிகளைப்** பயன்படுத்திப் பெரு வெடிப்பிற்குப் பிறகு பிரபஞ்சத்தில் காணப்பட்ட மிகப்பெரிய வெடிப்பை வானியலாளர்களைக் கொண்ட **சர்வதேச குழுவானது கண்டுபிடித்துள்ளது.**
  - இந்தக் கண்டுபிடிப்பிற்காக 3 தொலைநோக்கிகள் பயன்படுத்தப்பட்டன.
  - அவையாவன: NASAவின் சந்திரா எக்ஸ்ரே ஆய்வகம், ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தின் எக்ஸ்எம்எம் நியூட்டன் மற்றும் மேற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள முர்ச்சீசன் வைட்ஃபீல்ட் அரே ஆய்வகம்.
  - **செய்தித் துளிகள் :**
    - **பூமியிலிருந்து 390 மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள ஓபியுச்சஸ் விண்மீன்த் திரள் குழுவில்** (Ophiuchus galaxy cluster) **இந்த வெடிப்பு நிகழ்ந்தது.**
    - இந்த வெடிப்பின் ஆற்றலானது விண்மீன் தொகுப்பில் உள்ள வெப்பமான வாயுக்களைக் கொண்ட பிளாஸ்மாவில் பெரும் இடைவெளியை ஏற்படுத்தியது.

3. நட்சத்திரக் குறியீட்டுத் திட்டமானது எந்த சட்டத்தின் கீழ் வடிவமைக்கப்பட்டுள்ளது?

**விடை** : எரிசக்தி பாதுகாப்புச் சட்டம்

**விளக்கம்**

- **எரிசக்தித் திறன் அமைப்பானது** சமீபத்திய நிகழ்வின் போது ஆழ்உறைப் பெட்டகம் மற்றும் இலகு ரக வணிக ரீதியிலான குளிர்சாதனப் பெட்டிகளுக்கான (Light Commercial Air Conditioners - LCAC) **நட்சத்திர மதிப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.**
  - எரிசக்தி பாதுகாப்புச் சட்டம், 2001ன் கீழ், நட்சத்திரக் குறியீட்டுத் திட்டமானது, அதன் விதிமுறையின் ஒரு பகுதியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
  - **செய்தித் துளிகள்** :
    - நட்சத்திர மதிப்பீடானது ஒரு சாதனத்தின் ஆற்றல் செயல்திறனை வழங்குகின்றது. அதிக நட்சத்திர மதிப்பீடானது குறைவாக நுகரப்படும் ஆற்றலைக் குறிக்கின்றது.
    - இந்த நிகழ்வின் போது உலக வள நிறுவனத்துடன் (WRI - World Resources Institute) இணைந்து BEE ஆல் எடுக்கப்பட்ட முதலாவது முயற்சியான உர்ஜா தக்சதா தகவல் கருவியானது (Urja Dakshata Information Tool - UDIT) தொடங்கப்பட்டுள்ளது.

4. விண்வெளி ஆய்வுத் துறை அமைச்சர் யார்?

**விடை :** ஜிதேந்திரசிங்

**விளக்கம்**

- **'சந்திரயான்-3' விண்கலம் அடுத்த ஆண்டின் முதல் பாதியில் செலுத்தப்படும்** என்று **விண்வெளி ஆய்வுத்துறை அமைச்சர் ஜிதேந்திரசிங்** தெரிவித்தார்.
    - `நிலவை ஆய்வு செய்வதற்காக, சந்திரயான்-3 விண்கலம் அடுத்த ஆண்டின் முதல் பாதியில் செலுத்தப்படும். சந்திரயான்-2 திட்டத்திலிருந்து கற்றுக் கொள்ளப்பட்ட பாடங்களின் அடிப்படையில் சந்திரயான்-3 திட்டம் கட்டமைக்கப்பட்டுள்ளது. விண்கலத்தின் தரம், வடிவமைப்பு, திறன் ஆகியவற்றில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்று ஜிதேந்திரசிங் தெரிவித்தார்.
    - **செய்தித் துளிகள்:**
        - முன்னதாக, நிலவின் தென்துருவப் பகுதியை ஆராயும் நோக்கில் சந்திரயான்-2 விண்கலத்தை, இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) கடந்த ஆண்டு ஜூலை மாதம் 22-ஆம் தேதி விண்ணில் செலுத்தியது. பின்னர், நிலவைச் சுற்றி வந்து ஆய்வு செய்யும் ஆர்பிட்டர் பகுதி, விண்கலத்திலிருந்து பிரித்து விடப்பட்டது.

5. "நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் குறித்த சர்வதேச

மாநாடு" எங்கு நடைபெற்றது?

**விடை :** கொல்கத்தா

**விளக்கம்**

- **"நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் குறித்த சர்வதேச மாநாடு"** (ஐகான்சாட்) மார்ச் 5-7 **கொல்கத்தாவில்** நடைபெற்றது.
    - அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் செயல்படும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (டிஎஸ்டி) நானோ மிஷன் இதை ஏற்பாடு செய்துள்ளது.
    - **செய்தித் துளிகள் :**
        - நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து இளம் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு ஒரு சாத்தியமான தளத்தை வழங்குவதை மாநாடு நோக்கமாகக் கொண்டுள்ளது.
        - மேம்பட்ட தொழில்-கல்வி தொடர்புகளுக்கான தொழில்முனைவோர் மற்றும் தொடக்க நிறுவனங்களுக்கான ஒரு தொழில்துறை அமர்வை இந்த மாநாடு நடத்தும்.

6. விண்வெளி கழிவுகளை துல்லியமாக அறியும் தொழில்நுட்பத்தை மேம்படுத்த ISRO எதனுடன் கையெழுத்திட்டுள்ளது?

**விடை:** அமெரிக்காவின் டெக்சாஸ் பல்கலைக்கழகம்

**விளக்கம்**

- **விண்வெளியில் இடம் பெற்றிருக்கும் செயற்கை கோள்கள், செயலிழந்து சுற்றிவரும் செயற்கைகோள் கழிவுகள்**

இருக்குமிடத்தை **துல்லியமாக அறியும் தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் முயற்சியில்** இந்திய விண்வெளி ஆய்வு மையம் **(ISRO) ஈடுபட்டுள்ளது.**

- இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ISRO-வும் அமெரிக்காவின் டெக்சாஸ் பல்கலைக்கழகமும் கையெழுத்திட்டுள்ளது.
- **செய்தித் துளிகள் :**
  - இது போன்ற விண்வெளி கழிவுகளை நீக்கும் செயல்பாடுகளில் அமெரிக்காவும் ரஷ்யாவும் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

7. எந்த திட்டத்திற்கு மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சகமானது ஒப்புதல் அளித்துள்ளது?

**விடை :** ஜீனோம் இந்தியா திட்டம்

**விளக்கம்**

- சமீபத்தில் **ஜீனோம் இந்தியா திட்டம்** (Genome India Project - GIP) என்ற ஒரு **மரபணு குறியாக்கத் திட்டத்திற்கு மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சகமானது ஒப்புதல்** அளித்துள்ளது.
  - ஜீனோம் இந்தியா திட்டம் என்பது மருத்துவம், விவசாயம் மற்றும் வாழ்க்கை அறிவியலில் புதிய செயல்திறனை செயல்படுத்த உதவும் 20 நிறுவனங்களின் ஒத்துழைப்பாகும்.
  - **செய்தித் துளிகள் :**

- இது இந்திய மக்களைப் பாதிக்கும் நோய்கள் மற்றும் குணாதிசயங்களின் வகை மற்றும் தன்மையை முழுமையாக புரிந்து கொள்வதற்காக இந்திய "குறிப்பு மரபணுவின்" தொடரை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

8. செவ்வாய் கிரகத்தினை ஆராய்வதற்கென நாசா விண்வெளி ஆய்வு மையத்தினால் எந்த ரோவர் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது?

**விடை :** கியூரியோசிட்டி

**விளக்கம்**

- **செவ்வாய் கிரகத்தினை ஆராய்வதற்கென** நாசா விண்வெளி ஆய்வு மையத்தினால் **கியூரியோசிட்டி ரோவர் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.** 1.8 பில்லியன் பிக்சல்கள் உடைய பனோரமா தொழில்நுட்பத்தின் ஊடாக செவ்வாய் கிரகத்தினை பதிவு செய்து பூமிக்கு அனுப்பியுள்ளது. இதுவே ரோவர் விண்கலம் அனுப்பி அதிகூடிய பிரிதிறன் கொண்ட புகைப்படமாக இருக்கின்றது.
    - **செய்தித் துளிகள்**
        - கடந்த சில வருடங்களாக அங்குள்ள காலநிலை மற்றும் மேற்பரப்புகள் தொடர்பான தகவல்களையும், புகைப்படங்களையும் பூமிக்கு அனுப்பிவருகின்றது. இவற்றினை அடிப்படையாகக் கொண்டே விஞ்ஞானிகள் செவ்வாய் கிரகம் தொடர்பான ஆய்வுகளை தொடர்ந்துவருகின்றனர். இதற்கு முன்னர் 650 மில்லியன் பிக்சல்களை கொண்ட புகைப்படமே

உயர் பிரிதிறன் உடையதாக காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

9. “யுவிகா” என்ற மாணவர்களுக்கான பயிற்சி திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள நிறுவனம் எது?

**விடை:** ISRO

**விளக்கம்**

- **பள்ளி மாணவர்களிடம் விண்வெளி அறிவியல் குறித்த ஆர்வத்தை ஏற்படுத்துவதற்காக** இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (ISRO) **“யுவிகா” என்ற இளம் விஞ்ஞானி திட்டத்தை** கடந்த ஆண்டு **அறிமுகம்** செய்தது.
    - இந்த திட்டத்தின் கீழ், மாணவர்களுக்கு விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடல் மற்றும் செயல்முறை பயிற்சிகளும் அளிக்கப்படும்.
    - **செய்தித் துளிகள்**
        - இதன் பயிற்சி மையங்களில் மே 11 முதல் 22 வரை நடைபெறவுள்ளது.
        - YUVIKA – Yuva Vigyani Karyakram

10. COVID -19 வைரஸின் மரபுக்கூறை பிரித்தெடுத்த நாடுகள் எவை?

**விடை:** ஜப்பான், தாய்லாந்து, அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா

**விளக்கம்**

- **COVID-19 வைரஸின் மரபுக்கூற்றைப் பிரித்தெடுத்த உலகின் ஐந்தாவது நாடாக இந்தியா** உருவெடுத்துள்ளது.

- இதற்கு முன்பு ஜப்பான், தாய்லாந்து, அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகள் கொரோனா வைரஸின் மரபுக்கூற்றை வெற்றிகரமாகப் பிரித்தெடுத்துள்ளன.
- இது நாட்டில் மருந்துகள், தடுப்பூசிகள் மற்றும் விரைவாக நோய் கண்டறிதல் கருவிகள் ஆகியவற்றின் மேம்பாட்டிற்கு உதவுகின்றது.
- இந்தியாவில் பிரித்தெடுக்கப்பட்ட கொரோனா வைரஸின் மரபுக்கூறானது வுஹான் நகரில் இருந்த கொரோனா வைரஸின் **மரபுக்கூறுடன் ஒப்பிடும் பொழுது 99.99% ஒத்தவையாக உள்ளது** என்று இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றத்தின் (Indian Council of Medical Research – ICMR) பொது இயக்குநரான **பல்ராம் பார்கவா** கூறியுள்ளார்.

11. எக்ஸோமார்ஸ் திட்டம் எந்த நிறுவனத்தால் செயல்படுத்தப்படவுள்ளது?

**விடை** : ESA – ஐரோப்பிய விண்வெளி அமைப்பு

**விளக்கம்**

- **எக்ஸோமார்ஸ் திட்டமானது மென்பொருள் பிரச்சினைகளால் 2 ஆண்டுகள் தாமதமாகத் செலுத்தப்பட இருக்கின்றது.**
  - இப்போது ஐரோப்பிய விண்வெளி அமைப்பின் திட்டமானது (European Space Agency Mission – ESA) 2022ஆம் ஆண்டில் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
  - செவ்வாய்க் கிரகத்தின் மீதான எக்ஸோபயாலஜி அல்லது

எக்ஸோமார்ஸ் என்பது ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் மற்றும் ரோஸ்கோஸ்மோஸ் (ரஷ்ய விண்வெளி நிறுவனம்) ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு கூட்டுத்திட்டமாகும்.

- **செய்தித் துளிகள் :**
  - செவ்வாய்க் கிரகத்தில் காணப்படும் நீர் குறித்த வரலாறு, அதன் புவி வேதியியல், வளிமண்டலக் கலவைகள் போன்றவற்றின் ஆய்வைத் தவிர செவ்வாய்க் கிரகத்தில் உயிர் வாழ்வதற்கான சாத்தியக் கூறை ஆய்வு செய்வதும் இதன் நோக்கமாகும்.
  - ரோசாலிண்ட் பிராங்க்ளின் என்பது எக்ஸோமார்ஸ் திட்டத்தில் பயன்படுத்தப்படும் ஒரு ஆய்வு வாகனமாகும்.

12. நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப (நிறுவனம்) மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஸ்டார்ச்சை அடிப்படையாகக் கொண்டு எதை உருவாக்கியுள்ளனர்?

**விடை :** ஹீமோஸ்டாட்

**விளக்கம்**

- மத்திய அறிவியல் மற்றும் **தொழில்நுட்பத் துறையின் கீழ் செயல்படும்** INST (Institute of Nano Science and Technology – நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம்) **மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஸ்டார்ச்சை** அடிப்படையாகக் கொண்ட **'ஹீமோஸ்டாட்' என்ற ஒன்றை**

**உருவாக்கியுள்ளனர்.**

- விபத்துக்களின் போது விரைவான இரத்த இழப்பைத் தடுப்பதற்காக ஸ்டார்ச் அடிப்படையிலான 'ஹீமோஸ்டாட்' ஆனது உருவாக்கப்பட்டுள்ளது. இது அதிகப்படியான திரவத்தை உடலிலிருந்து உறிஞ்சி, இரத்தத்தில் இயற்கையான உறைதலுக்கான தேவையான காரணிகளைக் குவிக்கின்றது.
- **செய்தித் துளிகள் :**
  - ஹீமோஸ்டாட்கள் இரத்தப் போக்கைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படும் அறுவைச் சிகிச்சைக் கருவிகளாகும்.

13. NAVIC என்ற செயற்கைகோள் தொகுப்பை உருவாக்கிய அமைப்பு எது?

**விடை :** ISRO

**விளக்கம்**

- **நாவிக் செய்தியிடல் அமைப்பு மற்றும் செய்தி பெறும் அமைப்பு** ஆகியவற்றை **இஸ்ரோ வடிவமைத்துள்ளதாக விண்வெளித் துறை** நாடாளுமன்றத்தில் **தெரிவித்துள்ளது.**
  - இந்த அமைப்பானது தற்போது இந்திய தேசியக் கடல்சார் தகவல் மையத்தினால் (Indian National Centre for Ocean Information System – INCOIS) பயன்படுத்தப்படுகின்றது.
  - சுனாமி, சூறாவளி, ஆழிப் பேரலைகள் போன்ற சூழ்நிலைகளில் அவசரகால எச்சரிக்கைத் தகவல்களை

ஒளிபரப்ப இந்த அமைப்பானது பயன்படுத்தப்படுகின்றது.

- **செய்தி துளிகள் :**
  - NAVIC என்பது ஒரு இந்தியச் செயற்கைக்கோள் தொகுப்பாகும்.
  - இந்தியத் துணைக் கண்டத்தில் தொடர் கண்காணிப்பை வழங்குவதே இந்த NAVICன் முக்கிய நோக்கமாகும்.

14. நாசா மீண்டும் நிலவுக்கு மனிதர்களை எந்த ஆண்டுக்குள் அனுப்புவதற்காக திட்டமிட்டுள்ளது?

**விடை :** 2024

**விளக்கம்**

- **நிலவுக்கு மீண்டும் மனிதர்களை அனுப்பும் அமெரிக்க விண்வெளி ஆய்வு** நிறுவனமான நாசாவின் **திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.**
  - இது **கொரோனா வைரஸ் பரவல் காரணமாக** நியூ ஆர்லியன்ஸ் நகரிலுள்ள அந்த அமைப்பின் தொழிலகத்தில் ராக்கெட் கட்டுமானப் பணிகளும் ஸ்டென்னிஸ் ஸ்பேஸ் மையத்தில் நடைபெறும் பணிகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் வரும் 2024ஆம் ஆண்டுக்குள் நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் நாசாவின் திட்டம் தாமதமாவதற்கு வாய்ப்புள்ளதாக கருதப்படுகிறது.

15. "ஜாபி"(zafi robot) என்ற ரோபோக்களை எந்த நிறுவனம்

தயாரித்து வருகிறது?

**விடை:** புரபெல்லர் டெக்னாலஜிஸ்

**விளக்கம்**

- திருச்சியில் புரபெல்லர் டெக்னாலஜிஸ் (propeller technologies ) என்ற ரோபோட்டிக் நிறுவனம் இயங்கி வருகிறது. சமீபத்தில் இந்த நிறுவனம் "ஜாபி" (zafi robot)என்ற ரோபோக்களை தயாரித்து வருகிறது.
    - இந்நிலையில் இந்த நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி, முகமது ஆஷிக் ரகுமான், கொரோனா தடுப்பு நடவடிக்கைக்கு பயன்படுத்த முன்வந்தால், இலவசமாக வழங்க தயார் என்று தெரிவித்துள்ளார்.
    - இதில் ஜாபி, மருத்துவர்களுக்கு உதவியாகவும், நோயாளிகளுக்கு தேவையான மருந்து உணவு போன்றவற்றை வழங்க பயன்படுத்தலாம்.
    - **செய்தித் துளிகள்**
        - இது மொபைல் மூலமாகவும், வாய்ஸ் இன்ட்ராக்டிவ் மூலமாகவும் செயல்படும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது என கூறினார்.
        - இது 1 கி.மீ வரை சுமார் 20 கிலோ பொருட்களை கொண்டு செல்லும் திறனுடையது என்றும் அவர் கூறியுள்ளார்.

16. 3டி பிரிண்டட் சுவாசக் கருவியின் செயல்பாடு யாரால் கண்டுபிடிக்கபட்டது?

**விடை:** தஞ்சாவூர் சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம்



We Shine Academy TM

**விளக்கம்**

- தஞ்சாவூர் சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம் கண்டுபிடித்த 3டி பிரிண்டட் சுவாசக் கருவியின் செயல்பாடு திருப்திகரமாக அமைந்துள்ளதைத் தொடர்ந்து, 100 சாதனங்களை கோரி சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனை ஆணை கொடுத்துள்ளது.
    - மருத்துவமனை முதல்வர் ஆர்.ஜெயந்தி இச்சாதனத்தை ஒற்றை சுவாசக் கருவியில் இணைத்து நான்கு நோயாளிகளுக்குப் பொருத்தினார்.
    - **செய்தித் துளிகள்**
        - **சாஸ்த்ரா ஆய்வகம், மாதிரி ஆய்வு உள்ளிட்டவற்றில் மேற்கொண்ட சோதனையில் மனித உடலில் கொரோனா வைரஸ் முதல்கட்ட நுழைவைத் தடுக்கக் கூடியது.**

## விளையாட்டு நிகழ்வுகள்

1. யாருக்கு எதிரான டேவிஸ் கோப்பை டென்னிஸ் ஆட்டம் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியா வெற்றி பெற்றது?

**விடை** :குரோஷியா

**விளக்கம்**

- குரோஷியாவுக்கு எதிரான டேவிஸ் கோப்பை டென்னிஸ் ஆட்டம் **ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் லியாண்டர் பயஸ்-ரோஹண் போபண்ணா** இணை 6-3, 6-7, 7-5 என்ற செட்

கணக்கில் **மேட் பெவிக்-பிராங்கோசுகோர் இணையை வீழ்த்தி** அபார வெற்றி வெற்றது.

- ○ முதல் இரு ஒற்றையர் ஆட்டங்களை கைப்பற்றி **2-0 என்ற செட் கணக்கில் முன்னிலையில் உள்ளது குரோஷியா.**
- ○ **செய்தித் துளிகள்**
    - ▪ இந்நிலையில் மார்ச் 07 நடைபெற்ற இரட்டையர்பிரிவு ஆட்டத்தில் அபார வெற்றி பெற்ற **பயஸ்-போபண்ணா இணை, போட்டியில் இந்தியாவை நீடிக்கச் செய்துள்ளது.**

2. ரஞ்சி கோப்பைக்கான முதல் தர கிரிக்கெட் போட்டியின் முதல் ஆட்டத்தில் அதிக வயதில் 5 விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர் யார்?

**விடை** : சாந்தமூர்த்தி

**விளக்கம்**

- **ரஞ்சி கோப்பைக்கான முதல் தர கிரிக்கெட் போட்டியின்** முதல் ஆட்டத்தில் அதிக வயதில் 5 விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர் என்ற **சாதனையைப் படைத்தார் புதுச்சேரி வீரர் சாந்தமூர்த்தி.**
    - ○ இதன் மூலம் 125 ஆண்டுகால சாதனையை அவர் முறியடித்தார்.
    - ○ **செய்தித் துளிகள்** :
        - ▪ கடந்த 1895-ஆம் ஆண்டு இங்கிலாந்து வீரர் பிரெட் ரைட் என்பவர் முதல் தர கிரிக்கெட் போட்டியில் அதிக வயதில் (**40 வயது 49 நாள்கள்)**

We Shine Academy™

**அறிமுகமான முதல் ஆட்டத்தில் 5 விக்கெட்டுகளை வீழ்த்தியதே** இதுவரை சாதனையாக இருந்தது.

3. அகில இந்திய அளவில் மாற்றுத்திறன் விளையாட்டுப் போட்டி எங்கு நடைபெற்றது?

**விடை :** நந்தனம், சென்னை

**விளக்கம்**

- **அகில இந்திய அளவில் மாற்று திறன் ஆண்களுக்கான** வாள்வீச்சு போட்டி, **பெண்களுக்கான வாள்வீச்சு போட்டியில் தமிழக அணி முதலிடத்தைப்** பிடித்தது.
    - தமிழ்நாடு உதவிக்கரம் மாற்றுத்திறனாளர் நலவாழ்வு சங்கம் சார்பில், அகில இந்திய விளையாட்டுப் போட்டி சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. கல்லூரியில் உள்ள உள்விளையாட்டு அரங்கில் 06.03.2020 அன்று தொடங்கியது.
    - **செய்தித் துளிகள்** :
        - இதில், ஆண்களுக்கான வாள்வீச்சு போட்டி, பெண்களுக்கான வாள்வீச்சு போட்டியில் தமிழகம் முதலிடத்தைப் பிடித்தது.
        - இதுபோல, அமர்ந்து விளையாடும் வாலிபால் போட்டி, அமர்ந்து விளையாடும் கபடிபோட்டி, நின்று விளையாடும் கபடி போட்டியில் தமிழக அணி முதலிடத்தைப் பிடித்தது
        - இந்த போட்டி நிறைவு விழா 09.03.2020ல் நடைபெற்றது. போட்டிகளில் வெற்றிபெற்ற

அணிகளுக்கு பரிசுகளை ஜெயா கல்வி குழுமத்தின் நிறுவனர் ஏ.கனகராஜ் வழங்கினார்.

4. மகளிர் டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் 5வது முறையாக சாம்பியன் பட்டம் வென்ற அணி எது?

**விடை :** ஆஸ்திரேலியா

**விளக்கம்**

- **ஐசிசி மகளிர் டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின்** ஒரு பகுதியாக இந்தியாவுக்கு எதிரான இறுதிச் சுற்றில் 85 ரன்கள் வித்தியாசத்தில் வென்ற **ஆஸ்திரேலியா அணி 5-ஆவது முறையாக சாம்பியன் பட்டத்தைக்** கைப்பற்றியது.
  - முதலில் ஆடிய நடப்பு சாம்பியன் ஆஸி. அணி 184/4 ரன்களைக் குவித்தது. பின்னர் ஆடிய இந்திய அணியால் 99 ரன்களுக்கு ஆல் அவுட்டானது.
  - **செய்தித் துளிகள்**
    - 2010, 2012, 2014, 2018ஆம் ஆண்டுகளில் ஏற்கனவே உலகக் கோப்பையை வென்றுள்ளது ஆஸ்திரேலியா.
    - **கேப்டன் - மெக் லானிங்**
    - பயிற்சியாளர் - மத்தேயு மோட்

5. ஜோர்டானில் நடைபெற்ற ஆசிய ஒலிம்பிக் குத்துச்சண்டை தகுதிச்சுற்றுப் போட்டியில் வெள்ளி வென்ற இந்திய வீரர் யார்?

**விடை:** விகாஷ் கிருஷண்

**விளக்கம்**

- **ஜோர்டானில் நடைபெற்ற ஆசிய ஒலிம்பிக் தகுதிச்சுற்றுப் போட்டியில் காயம் காரணமாக இறுதிச்சுற்றில் விளையாடாமல்** விலகியதை அடுத்து, **இந்திய குத்துச்சண்டை வீரர் விகாஷ் கிருஷண் வெள்ளி** வென்றார்.
    - உலக சாம்பியன்ஷிப், ஆசிய விளையாட்டுப் போட்டி ஆகியவற்றில் பதக்கங்கள் வென்றவரான விகாஸ் 69 கிலோ எடைப்பிரிவில் ஆசிய ஒலிம்பிக் தகுதிச்சுற்றில் பங்கேற்றார்.
    - இவருக்கு கண்ணுக்கு அருகே காயம் ஏற்பட்டிருப்பதால், இறுதிப் போட்டியில் விளையாட முடியவில்லை. இதனால், ஜோர்டான் வீரர் ஜெயத் ஈஷாஷை அவரால் எதிர்கொள்ள முடியவில்லை.
    - **செய்தித் துளிகள்:**
        - டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு இந்திய குத்துச்சண்டை வீரர் மணீஷ் கௌசிக் (63 கிலோ) தகுதி பெற்றார்.
        - இவர் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்ற 9-ஆவது இந்திய குத்துச்சண்டை வீரராவார்.

6. ஹீரோ இந்தியன் சூப்பர் லீக் 6-ஆவது சீசன் இறுதி ஆட்டத்தில் மூன்றாவது முறையாக சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது யார்?

**விடை :** கொல்கத்தா ஏடிகே எ.ஃ.ப்சி

**விளக்கம்**

- ஹீரோ இந்தியன் சூப்பர் லீக் **6-ஆவது சீசன்** இறுதி ஆட்டத்தில் சென்னையின் எ.ஃ.ப்சி அணியை 3-1 என்ற கோல் கணக்கில்

வீழ்த்தி மூன்றாவது முறையாக சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது கொல்கத்தா **ஏடிகே எ.்.ப்சி.**

- இரு அணிகளுக்கு இடையிலான ஆட்டம் **கோவா நேரு விளையாட்டரங்கில் மார்ச் 14ம் தேதி** இரவு நடைபெற்றது.
- **செய்தித் துளிகள்:**
    - சென்னையின் எ.்.ப்சியும், ஏடிகே எ.்.ப்சியும் ஐஎஸ்எல் கால்பந்து இறுதி போட்டியில் சந்தித்தது இதுவே முதல் முறையாகும்.

7. ஓமன் ஐடிடிஎ.்.ப் டேபிள் டென்னிஸ் சேலஞ்ச் ஓபன் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றவர் யார்?

**விடை:** இந்திய நட்சத்திர வீரர் சரத் கமல்

**விளக்கம்**

- **ஓமன் ஐடிடிஎ.்.ப் டேபிள் டென்னிஸ் சேலஞ்ச் ஓபன் போட்டியில்** இந்திய நட்சத்திர வீரர் **சரத் கமல் சாம்பியன் பட்டம்** வென்றார்.
    - 10 ஆண்டுகள் காத்திருப்புக்கு பின் அவர் மீண்டும் ஐடிடிஎ.்.ப் பட்டத்தை கைப்பற்றியுள்ளார்.
    - மஸ்கட்டில் மார்ச் 15 அன்று இரவு நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் முதல் நிலை வீரர் போர்ச்சுகலின் மார்கோஸ் ப்ரைடாஸை 6-11, 11-8, 12-10, 11-9, 3-11, 17-15 என்ற கேம் கணக்கில் வீழ்த்தி பட்டத்தை கைப்பற்றினார்.
    - **செய்தித் துளிகள்**
        - கடந்த 2010-இல் எகிப்து ஓபன் போட்டியில் பட்டம் வென்றிருந்தார். 2011, 2017-இல் அரையிறுதியோடு வெளியேறினார் சரத்.

8. ஆல் இங்கிலாந்து பாட்மிண்டன் போட்டி ஆடவர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்றவர் யார்?

**விடை:** டென்மார்க்கின் விக்டர் ஆக்ஸ்லெசன்

**விளக்கம்**

- **ஆல் இங்கிலாந்து பாட்மிண்டன் போட்டி ஆடவர் ஒற்றையர் பிரிவில்** டென்மார்க்கின் **விக்டர் ஆக்ஸ்லெசன் சாம்பியன்** பட்டத்தைக் கைப்பற்றினார்.
    - மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் சீனாவின் உலக நம்பர் ஒன் வீராங்கனை சென் யூபெய் 21-14, 23-21 என்ற கேம் கணக்கில் ஜப்பானின் ஒகுஹராவையும், மற்றொரு அரையிறுதியில் சீன தைபேயின் டை சூ இங் 19-21, 21-13, 21-11 என ஸ்பெயினின் கரோலினா மரினையும் வீழ்த்தி இறுதிச் சுற்றில் நுழைந்தனர்.
    - கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியில் இந்தோனேஷியாவின் பிரவீன் ஜோர்டான்-மெலடி தவே இறுதிச் சுற்றில் தாய்லாந்தின் டேச்போல்-சப்சிரியுடன் மோதுகின்றனர்.
    - **செய்தித் துளிகள்**
        - நூற்றாண்டு கால பழமை வாய்ந்த ஆல் இங்கிலாந்து ஓபன் பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் ஆண்டுதோறும் இங்கிலாந்தில் நடத்தப்பட்டு வருகிறது.

9. முதல்-அமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான கபடி போட்டி எங்கு நடந்தது?

**விடை :** மதுரை தமுக்கம் மைதானத்தில்

**விளக்கம்**

- முதல்-அமைச்சர் கோப்பைக்கான **மாநில அளவிலான கபடி போட்டி** 3 நாட்கள் **மதுரை தமுக்கம் மைதானத்தில்** நடந்தது.
    - ஆண்கள் பிரிவில் லீக் ஆட்டங்கள் முடிவில் சேலம், கரூர், கன்னியாகுமரி அணிகள் தலா 2 வெற்றி, ஒரு தோல்வி கண்டு சமநிலை வகித்தன. போட்டியில் பெற்ற புள்ளிகள் வித்தியாசத்தின் அடிப்படையில் **சேலம் அணி சாம்பியன் பட்டத்தையும்**, கரூர் அணி 2-வது இடத்தையும், கன்னியாகுமரி அணி 3-வது இடத்தையும் பெற்றன.
    - **செய்தித் துளிகள்:**
        - பெண்கள் பிரிவில் லீக் ஆட்டம் முடிவில் திண்டுக்கல் அணி 3 வெற்றியுடன் முதலிடத்தை பிடித்தது. கோவை, சென்னை அணிகள் ஒரு வெற்றி, 2 தோல்வியுடன் சமநிலை வகித்தன. போட்டியில் எடுத்த புள்ளிகள் வித்தியாசத்தில் கோவை அணி 2-வது இடம் பெற்றது. சென்னை அணி 3-வது இடத்துக்கு தள்ளப்பட்டது.

10. ஆல் இங்கிலாந்து பேட்மின்டன் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் சாம்பியன் பட்டத்தை வென்றவர் யார்?

**விடை** : டாய் ட்ஸு யிங்

**விளக்கம்**

- ஆல் **இங்கிலாந்து பேட்மின்டன் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில்,** நம்பர் 1 வீராங்கனை சென் யூ பெய்யுடன் டாய் ட்ஸு யிங் மோதினார்.

- 21-19, 21-15 என்ற நேர் செட் கணக்கில் **டாய் ட்ஸூ யிங் வெற்றி** பெற்று **தங்கப்பதக்கத்தை** வென்றார். இதனால் அவர் சாம்பியன் பட்டத்தை வென்றார்.
- **செய்தித் துளிகள்:**
    - ஆல் இங்கிலாந்து பேட்மின்டன் தொடர், பேட்மின்டனில் மிகவும் உயரிய, கவுரவமிக்கதாக கருதப்படுகின்றது.
    - இந்த போட்டிக்கான மொத்த பரிசுத்தொகை ரூ.8 கோடியே 14 லட்சம் ஆகும். வாகை சூடும் வீரர், வீராங்கனை தலா ரூ.57 லட்சத்தை பரிசாக பெறுவார்கள்.

11. ஜூனியர் என்பிஏ கூடைப்பந்து திட்டத்தின் கீழ் தமிழகத்தைச் சேர்ந்த எத்தனைப் பள்ளிகள் இணைக்கப்பட்டுள்ளன?

**விடை:** 550

**விளக்கம்**

- ஜூனியர் என்பிஏ கூடைப்பந்து திட்டத்தின் கீழ் தமிழகத்தைச் சேர்ந்த 550 பள்ளிகள் இணைக்கப்பட்டுள்ளன. **கூடைப்பந்தை** உலகம் முழுவதும் **பிரபலப்படுத்தும் நோக்கில் ஜூனியர் என்பிஏ திட்டம் செயல்படுத்தப்படுகிறது**.
    - **ஒவ்வொரு நாட்டிலும் சிறப்பாக ஆடும் 13 வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமியர்** இத்திட்டத்தின் **கீழ் தேர்வு செய்யப்பட்டு சிறப்பு பயிற்சியும் அளிக்கப்படுகிறது.** இந்தியா முழுவதும் **13000 பள்ளிகளில்** இருந்து **1 கோடி பேருக்கு பயிற்சி** அளிக்கப்பட்டுள்ளது.

- **செய்தித் துளிகள்:**
  - அமெரிக்காவின் என்பிஏ கூடைப்பந்து லீக் உலகப்புகழ் பெற்றதாகும். இதில் பங்கேற்று ஆடும் வீரர்கள் உலக, ஒலிம்பிக் சாம்பியன் பட்டங்களை வென்ற சிறப்புடையவர்கள் ஆவர்.

12. இந்தியாவில் முதன் முறையாக முழுவதும் திருநங்கைகள் அடங்கிய கால்பந்து அணி எங்கு உருவாகியுள்ளது?

**விடை:** மணிப்பூர்

**விளக்கம்**

- **இந்தியாவில் முதன் முறையாக முழுவதும் திருநங்கைகள் அடங்கிய கால்பந்து அணி மணிப்பூரில் உருவாகியுள்ளது**. இம்பாலை சேர்ந்த அரசு சாரா நிறுவனம் **"யா ஆல்"**. இரு ஆண்டுக்கு முன் திருநங்கைகளுக்காக ஆறு பேர் கொண்ட கால்பந்து போட்டிகளை நடத்தியது. இதையடுத்து முழுவதும் திருநங்கைகள் அடங்கிய **14 பேர் கொண்ட கால்பந்து அணி** மணிப்பூரில் உருவாகியுள்ளது.
  - **செய்தித் துளிகள்**
    - சமீபத்தில் பெண்கள் தினத்தில் (மார்ச் 8) தலா 7 பேர் கொண்ட அணியாக பிரிந்து "நட்பு" போட்டியில் விளையாடினர். "யா ஆல்" நிறுவனம் சதாம் ஹன்ஜபம் கூறுகையில், மத்திய அரசு திருநங்கைகளை அங்கீகரித்துள்ளது.

13. கேண்டிடேட்ஸ் செஸ் தொடரின் ஐந்தாவது சுற்றில் வெற்றி பெற்றவர் யார்?

**விடை:** ரஷ்யாவின் நோபோம்னியாட்சி

**விளக்கம்**

- **கேண்டிடேட்ஸ் செஸ்** தொடரின் **ஐந்தாவது சுற்றில் ரஷ்யாவின் நோபோம்னியாட்சி வெற்றி** பெற்றார்.
    - உலகின் முன்னணி வீரர்கள் 8 பேர் இதில் பங்கேற்கின்றனர். **"ரவுண்டு ராபின்"** முறையில் ஒவ்வொருவரும் மற்ற வீரர்களுடன் தலா இரண்டு முறை மோதுவர். இதில் வெற்றி பெறும் வீரர், இந்த ஆண்டு நடக்கும் உலக செஸ் சாம்பியன்ஷிப் பட்டத்துக்கான போட்டியில் மோதுவர்.
    - ஐந்தாவது சுற்றில் ரஷ்யாவின் நேபோம்னியாட்சி, சீனாவின் ஹாவோ வாங்கை சந்தித்தார்.
    - இதில் வெள்ளை நிற காய்களுடன் களமிறங்கிய நேபோம்னியாட்சி, போட்டியின் 43வது நகர்த்தலில் வெற்றி பெற்றார்.
    - **செய்தித் துளிகள்**
        - மற்ற வீரர்கள் மோதிய போட்டிகள் "டிரா" ஆகின. ஐந்து சுற்று முடிவில் ரஷ்யாவின் நேபோம்னியாட்சி (3.5) முதலிடத்துக்கு முன்னேறினார். மற்ற ரஷ்ய வீரர்கள் மாக்சிம் வாசியர் (3.0), அலெக்சாண்டர் (2.5) அடுத்த இரு இடங்களில் உள்ளனர்.

14. கெரோனாவைரஸ் பாதிப்பு எதிரொலியாக டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் எத்தனை ஆண்டு ஒத்திவைக்கப்பட்டுள்ளது?

**விடை:** ஓராண்டு

**விளக்கம்:**

- கெரோனாவைரஸ் பாதிப்பு எதிரொலியாக டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் ஓராண்டுக்கு ஒத்திவைக்கப்படுவதாக சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி, ஜப்பான் போட்டி அமைப்புக் குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளன.
    - வரும் **ஜூலை 24 முதல் ஆகஸ்ட் 9-ஆம் தேதிவரை டோக்கியோவில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுவதாக இருந்தது. இதற்காக பல்லாயிரக்கணக்கான கோடி செலவில் புதிய விளையாட்டு மைதானங்கள் அமைத்து ஏற்பாடுகளை தீவிரமாக செய்துள்ளது ஜப்பான் அரசு.**
    - **செய்தித் துளிகள்**
        - போட்டிகளை நடத்துவதற்காக ஜப்பான் மொத்தம் ரூ.95ஆயிரம் கோடியை செலவிட்டுள்ளது.
        - இந்நிலையில் 2021ஆம் ஆண்டுக்கு போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டதால், ரூ.45ஆயிரம் கோடி அளவுக்கு நஷ்டம் ஏற்படும் என கணக்கிடப்பட்டுள்ளது.

15. கொரோனா நோய்த் தொற்று பரவலால் ஓராண்டுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒலிம்பிக் போட்டிகள் எப்போழுது நடைபெறவுள்ளது?

**விடை:** 2021ஆம் ஆண்டு ஜூலை 23 முதல் ஆக.8



We Shine Academy™

**விளக்கம்:**

- கொரோனா நோய்த் தொற்று பரவலால் ஓராண்டுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒலிம்பிக் போட்டிகள் வரும் 2021ஆம் ஆண்டு ஜூலை 23 முதல் ஆக.8-ஆம் தேதி வரையும், **பாராலிம்பிக் போட்டிகள் ஆக. 24 முதல் செப். 5 வரையும் நடைபெறும் என ஐஓசி,போட்டி அமைப்புக் குழு உள்ளிட்டவை அறிவித்துள்ளன.**
    - **செய்தித் துளிகள்:**
        - விளையாட்டு உலகின் மிகப்பெரிய போட்டியாக கருதப்படுவது ஒலிம்பிக் போட்டிகளாகும்.
        - 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் இப்போட்டி 2016-இல் ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்றது.

## விருதுகள்

1. யாருக்கு இளம் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது?

**விடை :** ருவந்திகா மாரி

**விளக்கம்**

- மருத்துவ விஞ்ஞானத்தில் **50 பிரிவுகளைக்** கண்டறிந்து பதில் கூறிய **4ம் வகுப்பு மாணவி ருவந்திகா மாரிக்கு** இளம் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது.
    - ஆசியா சாதனையாளர் புத்தக நிறுவனம் சார்பில் சென்னை பெருங்குடியில் உள்ள **இந்தியன் பப்ளிக் பள்ளியில்** இளம் சாதனையாளருக்கான போட்டி



We Shine Academy™

நடத்தப்பட்டது. **நடுவர் விவேக்நாயர் முன்னிலையில்** நடைபெற்ற இந்தப்போட்டியில் ருவந்திகாமாரி என்ற 4ம் வகுப்பு மாணவி கலந்து கொண்டு ஒரு நிமிடத்தில் கம்ப்யூட்டரில் காட்சிப்படுத்தப்பட்ட மருத்துவ விஞ்ஞான 50 பிரிவுகளைச் சரியாக கண்டறிந்து பதில் அளித்துள்ளார்.

- **செய்தித் துளிகள்**
    - **இந்தியா, வியட்நாம், லாவோஸ், நேபாளம்** ஆகிய நாடுகளில் உள்ள இளம் சாதனையாளர்கள் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள சாதனையாளர்களை ஒப்பிட்டுப் பார்க்கவும் போட்டிகள் நடத்தி அதில் வெற்றி பெறும் இளம் சாதனையாளர்களுக்கு ஆசியா சாதனையாளர்கள் புத்தகம் சார்பில் இளம் சாதனையாளர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.

2. இந்த ஆண்டிற்கான 100 சிறந்த பெண்களின் பட்டியலை எந்த இதழ் உருவாக்கியுள்ளது?

**விடை** : டைம் இதழ்

**விளக்கம்**

- **டைம் இதழ்** ஆனது இந்த ஆண்டின் **100 சிறந்த பெண்களில்** இந்தியாவின் முன்னாள் பிரதமர் **இந்திரா காந்தி மற்றும் சுதந்திரப் போராளியான அமிர்த் கவுர்** ஆகியோரை தேர்ந்தெடுத்துள்ளது.
    - 1920ஆம் ஆண்டுமுதல் 2020ஆம் ஆண்டுவரை 100

பெண்களுக்கு 100 இடங்களை டைம் இதழ் உருவாக்கியுள்ளது.

- செய்தித் துளிகள்
  - டைம் இதழானது **1947ஆம் ஆண்டிற்கான பெண்மணியாக அம்ரித் கவுர் என்பவரையும் 1976 ஆம் ஆண்டிற்கான பெண்மணியாக இந்திராகாந்தி** என்பவரையும் தேர்ந்தெடுத்துள்ளது.

3. சமூக ஆர்வலர் ரா.கண்ணகிக்கு முதல்வர் பழனிசாமி அவர்களால் எந்த விருது வழங்கப்பட்டது?

**விடை :** ஔவையார் விருது

**விளக்கம்**

- **திருவண்ணாமலையைச் சேர்ந்த சமூக ஆர்வலர் ரா. கண்ணகிக்கு** முதல்வர் பழனிசாமி மார்ச் 10-ஆம் தேதி **ஔவையார் விருது** வழங்கி கௌரவித்தார்.
  - தமிழக முதல்வர் பழனிசாமி மார்ச் 09-ஆம் தேதி தலைமைச் செயலகத்தில், சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை சார்பில், திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த ரா.கண்ணகிக்கு, மகளிர் சுய உதவிக் குழுக்களை அமைக்க ஊக்கப்படுத்தியது, ஆதரவற்ற சடலங்களுக்கு இறுதி சடங்குகளை மேற்கொண்டது, குடிசை வீடுகளை ஓட்டு வீடுகளாக மாற்ற நடவடிக்கைகள் எடுத்தது போன்ற பல்வேறு சமூகநலப் பணிகளை அர்ப்பணிப்புடன் ஆற்றியதற்காக 2020-ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருதினை வழங்கி சிறப்பித்தார்கள்.

- செய்தித் துளிகள்
    - சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித் தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிக்கை, நிர்வாகம், சமூகத்திற்கு தனித்துவமான பங்களிப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் பெண்களை கௌரவப்படுத்தும் வகையில், ஒவ்வோர் ஆண்டும் இந்தத் துறைகளில் சிறப்புடன் பணியாற்றும் பெண்களில், ஒருவரை தேர்ந்தெடுத்து அவருக்கு அந்த ஆண்டின் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி "ஔவையார் விருது" எனும் உயரிய விருது வழங்கப்படும் என்றும் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். அதன்படி, 2012-ஆம் ஆண்டு முதல் "ஔவையார் விருது" வழங்கப்பட்டு வருகிறது.

4. "தூய தமிழ் பற்றாளர்" விருது யாரால் வழங்கப்படும்?

**விடை:** தமிழக அரசின் அகரமுதலித் திட்ட இயக்ககம்

**விளக்கம்**

- தமிழக அரசின் அகரமுதலித் திட்ட இயக்ககம் சார்பில் **'தூய தமிழ் பற்றாளர்' விருதுக்கு மாநில அளவில் 3 பேர் தேர்வு** செய்யப்பட்டுள்ளனர்.
    - நடைமுறையில் மக்களிடம் பொது பயன்பாட்டில் தூய தமிழை பயன்படுத்துவோரை ஊக்கப்படுத்தும் வகையில்

செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் பரிசு திட்டம் ஒன்றை அறிவித்தது.

- **செய்தித் துளிகள்**
  - அதன் அடிப்படையில், கோவையை சேர்ந்த கல்வியியல் பட்டதாரி சி.மணிகண்டன், அரசு பள்ளியில் இரவு காவலராக இருந்த இரா.அரிதாசு மற்றும் திருச்சியை சேர்ந்த கல்லூரி மாணவர் த.ஆரோக்கிய ஆலிவர் ராசா ஆகியோருக்கும் வழங்கப்படவுள்ளது.

## நியமனங்கள்

1. மலேசியாவின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை :** முஹைதீன்யாசின்

**விளக்கம்**

- மலேசியாவின் புதிய பிரதமராக **முன்னாள் உள்துறை அமைச்சர் முஹைதீன்யாசினை** அந்தநாட்டு மன்னர் நியமித்துள்ளார்.
  - மக்களின் நலன்களைப் பாதுகாக்க நாட்டுக்கு உடனடியாக அரசு தேவைப்படுகிறது. இந்தநிலையில், முன்னாள் உள்துறை அமைச்சர் முஹைதீன்யாசினை புதிய பிரதமராக மன்னர் நியமித்துள்ளார்.
  - **செய்தித் துளிகள்**
    - மலேசியாவில் கடந்த 2018-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், ஊழல் குற்றச்சாட்டுகளுக்குள்ளான

அப்போதைய **பிரதமர் நஜீப்ரஸாக்** தோல்வியடைந்தார்.

2. மத்திய நிதித்துறை செயலராக நியமனம் செய்யப்பட்டவர் யார்?

**விடை** : ஏ.பி.பி. பாண்டே

**விளக்கம்**

- **மத்திய வருவாய்த்துறை செயலராக உள்ள ஏ.பி.பி.பாண்டே, மத்திய நிதித்துறை செயலராக** மார்ச் 03 அன்று **நியமனம்** செய்யப்பட்டார்.
    - இதுதொடர்பாக பணியாளர் அமைச்சகம் பிறப்பித்த உத்தரவில், '1984-ஆம் ஆண்டு மகாராஷ்டிர பிரிவு இந்திய ஆட்சிப்பணி அதிகாரி ஏ.பி.பி. பாண்டேயை நிதித்துறை செயலராக நியமிக்க மத்திய அமைச்சரவையின் நியமனங்கள் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
    - **செய்தித் துளிகள்**
        - கடந்த மாதம் நிதித்துறை செயலராக இருந்த ராஜீவ் குமார் ஓய்வு பெற்றதையடுத்து, அத்துறை செயலராக பாண்டே நியமிக்கப்பட்டுள்ளார். மத்திய நிதியமைச்சகத்தில் உள்ள செயலர்களில் மிக மூத்தவராக உள்ளவரே நிதித்துறை செயலராக நியமிக்கப்படுவார்.

3. தகவல் தொடர்புத்துறை தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை** : பிபாஷா சக்ரபர்த்தி

**விளக்கம்**

- **சிஸ்கோ நிறுவனத்தின் முன்னாள் நிர்வாகி பிபாஷா சக்ரபர்த்தியை புதிய தகவல் தொடர்புத்துறை தலைவராக நியமிப்பதாக பேஸ்புக்** மார்ச் 4-ஆம் தேதி **அறிவித்துள்ளது.**
    - கோடிக்கணக்கான பயனர்களைக் கொண்டுள்ள பேஸ்புக் நிறுவனம் இந்தியாவில் தகவல் தொடர்புத்துறைக்கு புதிய தலைமையை நியமித்துள்ளது.
    - **செய்தித் துளிகள்**:
        - சிஸ்கோ நிறுவனத்தில் பணிபுரிந்த பிபாஷா சக்ரபர்த்திக்கு இந்தியாவில் பேஸ்புக் தகவல் தொடர்புத்துறை தலைமைப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. சக்ரபர்த்தி, சிஸ்கோ நிறுவனத்தில் கம்யூனிகேஷன்ஸ் துறையின் தலைவராக பணிபுரிந்துள்ளார்.

4. மத்திய தகவல் ஆணையத்தின் தலைவா் யாா்?

**விடை:** பிமால் ஜுல்கா

**விளக்கம்**

- **மத்திய தகவல் ஆணையத்தின் தலைமை ஆணையராக (சிஜசி), பிமால் ஜுல்கா நியமிக்கப்பட்டுள்ளார்.**
    - இவருக்கு குடியரசுத் தலைவா் ராம்நாத் கோவிந்த் பதவி பிரமாணம் செய்து வைத்தாா்.
    - இவரை பிரதமா் மோடி தலைமையிலான தேர்தல் குழு பரிந்துரை செய்தது குறிப்பிடத்தக்கது.
    - **செய்தித் துளிகள் :**

- அவரைத் தொடர்ந்து தகவல் ஆணையராக அமிதா பந்தோவே நியமிக்கப்பட்டுள்ளார்.
- மத்திய தகவல் ஆணையத்தில் மொத்தம் 11 உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

5. பாதுகாப்புத் துறை உளவு அமைப்பின் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை :** லெப்டினென்ட் ஜெனரல் கே.ஜே.எஸ்.தில்லான்

**விளக்கம்**

- **பாதுகாப்புத் துறை உளவு அமைப்பின் இயக்குநராக லெப்டினென்ட் ஜெனரல் கே.ஜே.எஸ்.தில்லான் (57) நியமிக்கப்பட்டுள்ளார்.**
  - பாதுகாப்புத் துறையின் உளவு அமைப்பானது ராணுவம், விமானப் படை, கடற்படை ஆகியவை தொடர்பான உளவுத் தகவல்களை ஒருங்கிணைக்கும் பணியை மேற்கொண்டு வருகிறது. கார்கில் போர் தொடர்பாக ஆய்வு நடத்திய அமைச்சர்கள் குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில் கடந்த 2002-ஆம் ஆண்டு இந்த உளவு அமைப்பு தொடங்கப்பட்டது.
  - **செய்தித் துளிகள்**
    - **இந்திய ராணுவ அகாடெமியின் 1983-ஆம் ஆண்டு** பிரிவைச் சேர்ந்த கே.ஜே.எஸ்.தில்லான், **ராணுவத்தின் 15-ஆவது பிரிவின் தலைவராகப் பணியாற்றி வந்தார்.** அண்மையில் அந்தப் பொறுப்பு லெப்டினென்ட்

ஜெனரல் பி.எஸ்.ராஜுவுக்கு வழங்கப்பட்டது நினைவுகூரத்தக்கது.

6. மாநில திட்டக் குழு துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை :** சி.பொன்னையன்

**விளக்கம்**

- **மாநில திட்டக் குழு துணைத் தலைவராக முன்னாள் அமைச்சர் சி.பொன்னையன் நியமிக்கப்பட்டுள்ளார்.** இதற்கான உத்தரவை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், ஜெயஸ்ரீ ரகுநந்தன் மார்ச் 09-ஆம் தேதி வெளியிட்டார்.
  - தமிழகத்தின் மாநில திட்டக் குழுவானது முதல்வர் தலைமையில் செயல்பட்டு வருகிறது. முக்கியத்துவம் வாய்ந்த முதன்மைத் துறைகளில் தமிழக அரசுக்கு உரிய ஆலோசனைகள் தேவைப்படுவதால், மாநில திட்டக் குழுவுக்கு துணைத் தலைவரை நியமிப்பது அவசியமானதாகக் கருதப்படுகிறது.
  - **செய்தித் துளிகள்**
    - **1977, 1980, 1984 மற்றும் 2001 ஆகிய ஆண்டுகளில் சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்**. மறைந்த முன்னாள் முதல்வர்கள் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரின் அமைச்சரவைகளில், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், சட்டம், கூட்டுறவு, கல்வி, தொழில்,

வேளாண்மை, விளையாட்டு, நிதி, தகவல் தொழில்நுட்பம் என பல்வேறு துறைகளின் அமைச்சராகப் பொறுப்பு வகித்தவர்.

7. கிரீஸின் முதல் பெண் அதிபர் யார்?

**விடை:** கேதரீனா சாகில்லாரொபோலு

**விளக்கம்**

- தென்கிழக்கு ஐரோப்பிய நாடான **கிரீஸின் முதல் பெண் அதிபராக** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள **கேதரீனா சாகில்லாரொபோலு** பதவியேற்று கொண்டார்.
    - இவர் அந்நாட்டின் **உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியாக பதவி வகித்தவர்** ஆவார்.

8. மாநிலங்களவை நியமன உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை :** ரஞ்சன் கோகோய்

**விளக்கம்**

- **மாநிலங்களவை நியமன உறுப்பினராக** உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி **ரஞ்சன் கோகோய்** மார்ச் 16ஆம் தேதி நியமிக்கப்பட்டார். குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், அவரை மாநிலங்களவை நியமன எம்.பி.யாக நியமித்தார்.
    - அரசியல்சாசன சட்டத்தின் 80-ஆவது சட்டப் பிரிவின்படி, மாநிலங்களவை நியமன உறுப்பினராக ரஞ்சன் கோகோயை குடியரசுத் தலைவர் நியமித்துள்ளார். மூத்த

வழக்குரைஞர் கே.டி.எஸ். துளசி பதவிக்காலம் நிறைவு பெற்றதை அடுத்து இந்த நியமனம் நடைபெற்றுள்ளது.

- **செய்தித் துளிகள் :**
    - இதற்கு முன்பு உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்தவர்களில் ரங்கநாத் மிஸ்ரா, காங்கிரஸ் கட்சியில் இணைந்து மாநிலங்களவை எம்.பி.யாக (1998-2004) இருந்தார்.
    - உச்சநீதிமன்றத்தின் 40-ஆவது தலைமை நீதிபதியாக இருந்த பி.சதாசிவம், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசால் கேரள ஆளுநராக கடந்த 2014-ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார்.

9. ஈராக்கின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை:** அட்னான் ஸுர்.ஃபி

**விளக்கம்**

- **ஈராக்கின் புதிய பிரதமராக** நஜ.ஃப் நகரின் முன்னாள் ஆளுநர் **அட்னான் ஸுர்.ஃபியை** அதிபர் பர்ஹம் சலே நியமித்துள்ளார்.
    - அந்தப் பதவிக்கு ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த முகமது அல்லாவியால் கெடு தேதிக்குள் அமைச்சரவை அமைக்க முடியவில்லை. அதனைத் தொடர்ந்து அட்னான் ஸுர்.ஃபியை புதிய பிரதமராக **அதிபர் தேர்ந்தெடுத்துள்ளார்.**
    - **செய்தித் துளிகள்**
        - ஈராக் நாணயம் - ஈராக்கிய தினார்
        - ஈராக் தலைநகரம் - பாக்தாத்
        - ஆட்சி மொழிகள் - அரபு, குர்தி

# முக்கிய தினங்கள்

1. பூஜ்ஜிய வேறுபாடு தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது?

**விடை :** மார்ச் 1

**விளக்கம்**

- **பூஜ்ஜிய பாகுபாடு தினம்** 2014லிருந்து ஐ.நா மற்றும் பிற சர்வதேச நிறுவனங்கள் மார்ச் 1 அன்று கடைபிடிக்கப்பட்டு வருகின்றன.
  - நோக்கம்: சட்டத்தின் முன்பும், செயல்முறையிலும் அனைவரும் சமம் என்பதை ஐ.நாவின் அனைத்து உறுப்பினர் நாடுகளிலும் ஊக்குவித்தல்.

2. உலக வனவிலங்குகள் தினம் எப்பொழுது கொண்டாடப்பட்டு வருகிறது?

**விடை:** மார்ச் 3

**விளக்கம்**

- உலகம் முழுவதும் **மார்ச் 03ஆம் தேதி வனவிலங்குகள் தினம்** கொண்டாடப்பட்டு வருகிறது. அழிந்துவரும் வன விலங்குகளைக் காப்பதற்காகவும், இயற்கைச் சமநிலை மாறுபடாதிருக்க விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாகவும் இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது.
  - 68வது ஐ.நா பொதுச்சபை கூட்டத்தில் கடந்த டிசம்பர் 20ஆம் தேதி அரிய வனவிலங்குகளின் சர்வதேச வர்த்தக

We Shine Academy

சாசனத்தில் அதிகாரப்பூர்வமாக ஒப்பந்தம் செய்யப்பட்டதையடுத்து, இந்த தினத்தை “உலக வனவிலங்கு“ தினமாக ஐ.நா அறிவித்தது.

3. உலக செவிப்புலன் நாள் எப்பொழுது அனுசரிக்கப்படுகிறது?

**விடை:** மார்ச் 3

**விளக்கம்**

- ஒவ்வொரு ஆண்டும் **மார்ச் 3 ஆம் தேதி உலக செவிப்புலன் நாள்** அனுசரிக்கப்படுகிறது .
    - காது கேளாமை மற்றும் காது கேளாமை எவ்வாறு தடுப்பது மற்றும் உலகெங்கிலும் காது மற்றும் செவிப்புலன் பராமரிப்பை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 3 ஆம் தேதி உலக செவிப்புலன் தினம் நடத்தப்படுகிறது.

4. ஜன் ஆஷாதி திவாஸ் என்று கொண்டாடப்படுகிறது?

**விடை:** மார்ச், 7, 2020

**விளக்கம்**

- **மார்ச், 7, 2020** அன்று **ஜன் ஆஷாதி திவாஸ்** (Jan Aushadi Diwas) கொண்டாடப்படுகிறது.
    - பிரதான் மந்திரி பாரதிய ஜனசாதி பரியோஜனாவின் சாதனைகளை நினைவுகூரும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

- ○ இந்த யோஜனாவின் கீழ் இந்தியா முழுவதிலும் 700 மாவட்டங்களில் உலகின் மிகப்பெரிய சில்லறை மருந்து சங்கிலியான கேந்திராக்கள் தொடங்கப்பட்டுள்ளன.

5. சர்வதேச மகளிர் தினம் கருப்பொருள் என்ன?

**விடை** :பெண்கள் உரிமைகளுக்கான இயக்ககத்தின் மைய புள்ளியாகும்.

**விளக்கம்**

- **சர்வதேச மகளிர் தினம் (IWD) ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 ஆம் தேதி கொண்டாடப்படுகிறது.** இது பெண்கள் உரிமைகளுக்கான இயக்ககத்தின் மையபுள்ளியாகும்.
  - ○ 1910ஆம் ஆண்டு சர்வதேச சோசலிச பெண் மாநாட்டில் ஆண்டு தோறும் **"ஒரு சிறப்பு மகளிர் தினம்"** ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று முன்மொழிந்தனர்.

6. ரோட்டரி சர்வதேச இளைஞர் திட்டம் எப்போது தொடங்கப்பட்டது?

**விடை** : 1968

**விளக்கம்**

- உலகெங்கிலும் ரோட்டராக்டர்கள் வழங்கும் சேவைகளை அங்கீகரிக்க ஒவ்வொரு ஆண்டும் **மார்ச் 13** அன்று **உலக ரோட்டராக்ட் தினம்** அனுசரிக்கப்படுகிறது.
  - ○ ரோட்டராக்ட் ரோட்டரி சர்வதேச இளைஞர் திட்டமாக 1968 இல் அமெரிக்காவின் வட கரோலினாவில் தொடங்கப்பட்டது.

7. சர்வதேச நுகர்வோர் அமைப்பு எப்போது தொடங்கப்பட்டது?

**விடை :** 1960 ஏப்.,1ல்

**விளக்கம்**

- நுகர்வோரின் உரிமைகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக மார்ச் 15ல் உலக நுகர்வோர் தினம் கடைபிடிக்கப்படுகிறது. **"நிலையான நுகர்வோர்"** என்பது இந்தாண்டு மையக்கருத்து. சுற்றுச்சூழலுக்கு தீங்கு ஏற்படாத மற்றும் பருவநிலையை பாதிக்காத வகையில் நிறுவனங்களின் தயாரிப்புகள் மற்றும் நுகர்வோரின் பயன்பாடு இருக்க வேண்டும் என இந்தாண்டு மையக்கருத்து விளக்குகிறது.
    - சர்வதேச நுகர்வோர் அமைப்பு 1960 ஏப்., 1ல் தொடங்கப்பட்டது. இதில் **120 நாடுகளைச் சேர்ந்த 250 உறுப்பினர்கள்** உள்ளனர்.

8. சர்வதேச காடுகள் தினம் எப்பொழுது அனுசரிக்கப்படுகிறது?

**விடை :** மார்ச் 21

**விளக்கம்**

- **சர்வதேச காடுகள் தினம்** ஐக்கிய நாடுகளால் **மார்ச் 21** அன்று அனுசரிக்கப்படுகின்றது.
    - இது 2012ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்படுகிறது. இந்நாள் நாடுகளின் முக்கியத்துவத்தையும் அதனை அதிகரிப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் உதவுகிறது.
    - **கருப்பொருள் : காடுகள் மற்றும் பல்லுயிர் பல்வகைத்தன்மை (Forest & Biodiversity)**

9. உலக நீர் நாள் எப்போது கொண்டாடப்படுகிறது?

**விடை :** மார்ச் 22

**விளக்கம்**

- **உலக நீர் நாள்** (World Day for Water அல்லது World Water Day), ஐக்கிய நாடுகள் அவையின் தீர்மானத்துக்கு இணங்க ஆண்டு தோறும் **மார்ச் 22**ஆம் நாள் உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.
  - நீர் வளத்தின் ஒட்டுமொத்தத் திட்டத்தையும் நிர்வாகத்தையும் மேம்படுத்தி நீர் வள பாதுகாப்பை வலுப்படுத்தி நாள்தோறும் கடுமையாகியுள்ள நீர் பற்றாக்குறை பிரச்சினையை தீர்ப்பது என்பது தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் நோக்கமாகும்.
  - அதேவேளையில் மக்களிடையே விரிவாக பிரச்சாரம் செய்து மக்களிடையே அந்தந்த **நாட்டின் நீர் வளப் பாதுகாப்பு பற்றி விழிப்புணர்வு வளர்த்தி ஏற்படுத்தவும்** கேட்டுக்கொள்ளப்பட்டது.

10. உலக வானிலை தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

**விடை:** மார்ச் 23

**விளக்கம்**

- **உலக வானிலை தினம், மார்ச் 23 "காலநிலையும், நீர் நிலையும்"** என்ற கருத்துடன், உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்படுகிறது.

- உலக வானிலை அமைப்பு, சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள ஜெனிவா நகரில், 1950 **மார்ச், 23ல்** துவங்கப்பட்டது. இந்த நாளை, உலக வானிலை தினமாக, பல்வேறு நாடுகள் கடைப்பிடிக்கின்றன. அதன்படி, இன்று உலக வானிலை தினம், அனைத்து நாடுகளிலும் கடைப்பிடிக்கப்படுகிறது.

## வர்த்தக நிகழ்வுகள்

1. மும்பை பங்குச்சந்தை எத்தனை சென்செக்ஸ் புள்ளிகள் சரிந்தது?

**விடை:** 1,590 சென்செக்ஸ் புள்ளிகள்

**விளக்கம்**

- **இந்திய பங்குச்சந்தைகள் கடும் வீழ்ச்சியுடன்** தொடங்கியுள்ளன. **மும்பை பங்குச்சந்தை சென்செக்ஸ் 1,590 புள்ளிகள் சரிந்து** 34,106-ல் புள்ளிகளில் வர்த்தகமாகிறது. தேசிய பங்குச்சந்தை குறியீட்டெண் நிஃப்டி 500 புள்ளிகள் சரிந்து 9,990 புள்ளிகளில் வர்த்தகம் தொடங்கியுள்ளது.
  - அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 16 மாதங்களில் இல்லாத அளவுக்கு கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது.
  - **செய்தித் துளிகள்**:
    - கொரோனா வைரஸ் உலக தொற்று நோய் என்று உலக சுகாதாரத்துறை அறிவித்த நிலையில், பங்குச் சந்தைகள் கடும் சரிவுடன் வர்த்தகமாகின.

2. GST எந்த அரசியலமைப்பு திருத்த சட்டத்தின் அடிப்படையில் 2016ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?

**விடை** : 101

**விளக்கம்**

- **சரக்கு மற்றும் சேவைகள் வரி** (Goods and Services Tax – GST) ஆணையத்தின் **39வது கூட்டமானது** சமீபத்தில் **டெல்லியில் நிறைவடைந்தது.** இந்தக் கூட்டத்தில் பல்வேறு பொருட்களுக்குப் பொருந்தக் கூடிய சரக்கு மற்றும் சேவைகள் வரி விகிதங்கள் குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.
    - **கைபேசிகள்** மற்றும் அவற்றின் சில **உதிரிப் பாகங்கள்** மீதான **GST வரி விகிதமானது 12% லிருந்து 18%** ஆக **உயர்த்தப்பட்டுள்ளது.**
    - விமானத்தின் எம்ஆர்ஓ சேவைகளுக்கு 18 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.
    - கையால் தயாரிக்கப்பட்ட மற்றும் இயந்திரத்தால் தயாரிக்கப்பட்ட தீப்பெட்டிகளுக்கு 12% ஆகத் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.
    - **செய்தித் துளிகள்** :
        - GST என்பது 101வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தால் 2016ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு அரசியலமைப்பு ரீதியிலான அமைப்பு ஆகும்.
        - இது அரசியலமைப்பின் 279ஏ என்ற சரத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.
        - இது மத்திய நிதியமைச்சர் அவர்களால் தலைமை

தாங்கப்படுகின்றது.

3. ரிசர்வ் வங்கி ஆளுநர் யார்?

**விடை:** சக்திகாந்த தாஸ்

**விளக்கம்**

- **கடன்களுக்கான மாத தவணைகளை செலுத்த 3 மாதங்கள் அவகாசம் வழங்கி ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.**
    - தனிநபர்கள், பொது நிறுவனங்கள் வாங்கியுள்ள கடன்களுக்கான தவணைகளைச் செலுத்த 3 மாதங்கள் வரை வங்கிகள் கால அவகாசம் அளிக்கலாம்.
    - வங்கிக் கடன் நிலுவைகளுக்கு 3 மாதம் கழித்து தவணை செலுத்த வங்கிகள் அனுமதிக்கலாம் என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் தெரிவித்துள்ளார்.
    - **செய்தித் துளிகள்**
        - ரிசர்வ் வங்கி தலைமையகம் - மும்பை, மகாராஷ்டிரம், இந்தியா
        - ரிசர்வ் வங்கி துவக்கம் - ஏப்ரல் 1, 1935 ஆளுநர் சக்திகாந்த தாஸ்.

4. இந்தியன் வங்கி-அலாகாபாத் வங்கி இணைப்பிற்குப் பிறகு, மொத்த வர்த்தகம் எத்தனை கோடியாக அதிகரிக்கும்?

**விடை :** ரூ.8.40 லட்சம்

**விளக்கம்**

- நீண்ட கால முடக்கத்தின் காரணமாக இந்தியன் வங்கி மற்றும்

அலாகாபாத் வங்கி இணைப்பு நடைமுறைகள் முழுமை பெறுவதில் சிறிது காலதாமதம் ஏற்படக்கூடும்.

- **ரொக்க டெபாசிட், பணம் எடுப்பது மற்றும் அனுப்புவது உள்ளிட்ட அடிப்படை வங்கி பரிவர்த்தனைகள் திட்டமிட்டபடி வரும் ஏப்ரல் 1-ஆம் தேதியிலிருந்து தொடங்கும்.**
- இந்த இணைப்பு நடவடிக்கைக்குப் பிறகு புதிய லோகோவில் 'அலாகாபாத்' என்ற பெயரும் இடம்பெறும் என்றார்இ கொல்கத்தாவை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் அலாகாபாத் வங்கியைச் சேர்ந்த உயரதிகாரி பிடிஐ
- **செய்தித் துளிகள்:**
  - இந்த இணைப்பு நடவடிக்கையின்படி, அலாகாபாத் வங்கியின் ஒவ்வொரு 1,000 பங்குகளுக்கும் இந்தியன் வங்கியின் 115 பங்குகள் ஒதுக்கீடு செய்யப்படும் என பங்குகள் பரிமாற்ற ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது.
  - இந்தியன் வங்கி-அலாகாபாத் வங்கி இணைப்பிற்குப் பிறகு, மொத்த வர்த்தகம் ரூ.8.40 லட்சம் கோடியாக அதிகரிக்கும்.

**Useful Links**

Recent Exam Notifications :https://weshineacademy.com/updated-exam-notification/

Daily Current Affairs :http://weshineacademy.com/tnpsc-current-affairs/

Recent Update on Telegram :https://t.me/weshinedailyupdate

Useful YouTube Video :https://www.youtube.com/user/weshineacademy

Apply for TDC Bank Exam : https://weshineacademy.com/thiruchirapalli-district-central-cooperative-bank-recruitment-2020/